ல்கி



பிப்ரவரி 10, 1943 3 அண

ஓம் சக்தி

தந்தி விலாசம்: மாதா

டெலிபோன் நெம்பர்: 37

சகாயமான விலை

நயமான சாமான்கள்

துப்புரவான பல சரக்கு சாமான்கள் சகாயமான விலைக்கு எப்பொழுதும் எங்களிடம் கிடைக்கும்.

50 வருஷங்களாகப் பிரசித்தி பெற்ற

தென்காசிப் பிள்ளை மளிகை

மேலரத வீதி, திருநெல்வேலி டவுன்

பிராஞ்ச்:

ஹிந்து காலேஜுக்கு எதிரில், திருநெல்வேலி ஜங்ஷன்

டெலிபோன் நம்பர்: 55

குடும்பத்திற்கு வேண்டியதும் விசேடங்களுக்கு வேண்டிய மளிகை சாமான்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் கிடைக்கும்

புரொப்ரைட்டர்:

M. S. S. M. G. S. Sundaram Pillai

(பல சரக்கு சாமான்கள் வாங்க நம்பிக்கையான இடம் தென்காசிப் பிள்ளை மளிகை)

கொலம்பியா ரிகார்டுகளில்



மனோன்மணி

டாக்கி பாட்டுகள்

T.R. ராஜகுமாரி பாடியது

GE.6052 – ஆனந்தமே
மன்னன் இவராரோ

காளி N. ரத்னம்
C.T. ராஜகாந்தம் பாடிய



GE.6053 – கண்டது முதல்
ஜோரான டில்லி

லலிதா
வெங்கட்ராமன்
பாடிய



GE.6059
வேணுகூவுது
மயிலே

G.H.RAO

ஜீவன் நாடக்

கன்னட பாட்டுகள்

G.H. வீரண்ணா
B. ஜயம்மா
S.V. வெங்கட்ராம்
மோஹனகுமாரி
முதலியோர் பாடியது
GE. 6060 TO 6064

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி.

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு : மதராஸ்

●

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர்,
தியாகராயநகர், புரசவாக்கம்.

●

சென்னை ராஜதானியிலும் பம்பாயிலும் எல்லா முக்கியமான இடங்களிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

●

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	(16-1-43வரையாக)	ரூ.	21,48,580
ரிஸர்வ்நிதி	(16-1-43வரையாக)	ரூ.	22,26,400
டெபாஸிட்டுகள்	(31-12-42வரையாக)	ரூ.	23,71,000

●

சகல விதமான பாங்க் அலுவல்களும்
ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

●

பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்

N. கோபால அய்யர்

செக்ரடரி

ரஸிகர்களால் சிறந்ததென விரும்பப்படுவது!

"ராஸ்கோ"வின்

பரிமள

காஸ்டர் ஆயில்

பிராங்க் ராஸ்
&
கோ., லிட்.,
கல்கத்தா.



தென் இந்திய
விற்கு பூர்ண
விற்பனையாளர் :-

ஓரியண்டல்
மர்கண்டைல்
ஏஜென்ஸி,
பாலக்காடு.



— ஜில்லா ஏஜென்டுகள் —

திருச்சி : கரூர் கமர்ஷியல் ஸிண்டிகேட், லிட்., - கரூர்.
சேலம் & வட-தென்னாற்காடு : டிரேட் சர்வீஸ்-சேலம்
கொச்சின் & திருவனந்தபுரம் : அப்துல்லா நூர் முகம்மது, கொச்சின்.
கி. & மே. கோதாவரி : கடியன்டி பிரதர்ஸ், எல்லூர்

குண்டூர் & கிருஷ்ணா : ஸ்ரீனிவாஸ் மெடிகல் & ஜெனரல் மார்ட்-ராப்பள்ளி.
மதுரை & ராமநாதபுரம் : சாரதா ஸ்டோர்ஸ், -காரைக்குடி.
கோவை & நீலகிரி : யுனைடெட் ஏஜென்ஸீஸ், கோவை
மதராஸ் ஸிடி : R. N. ராஜன், 48, பந்தர் தெரு.


பிரதிநிதிகள் இல்லாத இடத்தில் ஏஜென்டுகள் தேவை.
தென் இந்தியாவின் பூரண விற்பனையாளருக்கு எழுதவும்.

அநுபவத்தால் வந்த ஞானம்

நூற்றாண்டுக் கணக்கின் அநுபவத்தின் பிறகு கூட சந்தன மரம் பயிரிடும் சரியான முறை மைசூர் சமஸ்தானத்தாரால் மட்டும் மிக ரகஸ்யமாகக் கையாளப்பட்டு வருகிறது. பயிராகும் இடத்திலேயே துண்டிக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்ற மரங்களிலிருந்து மைசூர் அரசாங்கத் தொழிலாளர்களால் இறக்கப்படுகின்ற நறுமணம் வாய்ந்த சந்தனத் தைலம்தான் உலகத்திலேயே தூய்மையானது. அதுவே இயற்கையான மணமுடையது — அந்த மணம் உலகம் எங்கும் உண்டாக்கப்படுகின்ற உயர்ந்த சோப்புகளுக்கும் வாசனைத் திரவியங்களுக்கும் பயன்படுகின்றது.


மைசூர் சந்தனத் தைலம்

அரசாங்கச் சந்தனத் தைலத் தொழிற்சாலை, மைசூர்



மாயா பானர்ஜி சொல்லுகிருள்

"லக்ஸ் டாய்லெட் சோப்பைவிட அதிக அழகு அளிக்கக்கூடிய சோப் வேறே காணமுடியாது"




அவள் கவர்ச்சியுள்ளவளாய் இருக்கிருள்—அல்லவா? இப்பேர்ப்பட்ட அழகிய சினிமா நக்ஷத்திரம் தன் சருமத்தின் ஆரோக்யத்திற்கும், அழகிற்கும், அதிக பணச் செலவாகும் ஓர் முறையை அநுசரிப்பாள் என்று எண்ணுவீர்கள். ஆனல், அப்படியில்லை! எளிதான லக்ஸ் டாய்லெட் சோப் முறைதான் மிகவும் உயர்ந்தது என்று மாயா காண்கிருள். "இந்த மிருதுவான வெண்ணிற சோப் சருமத்தைப் பாதுகாக்கும் வகை மிகவும் ஆச்சர்யமானது" என்கிருள்.

LTS 71-477 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED



உயர்தரமான இலைகளைப் பொறுக்கி வெகு ஜாக்கிரதையுடன் அனுபவ ரீதியாகப் பதம் செய்யப்படுவதால் நரஸூஸ் டீ நறுமண முள்ளதாக இருக்கிறது. நரஸூஸ் காப்பிக் கோ சூரிய வெப்பத்தால் நன்றாக பழுத்த முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படுகின்றன. பிறகு நன்றாக வறுக்கப்பட்டு நீங்கள் விரும்பும் நறுமணமுள்ள இனிய காபிக்கான தூளாக செய்யப்படுகிறது.




நரஸூஸ்

டீ, காபி

● மற்ற விபரங்களுக்கும் மெயில் ஆர்டர்களுக்கும் எழுதிக் கொள்ளவும்.


நரஸூஸ்
மான்யுபாக்சரிங் கம்பெனி
தலைமை ஆபீஸ் : சேலம்.

MHK-B.



மாயா பானர்ஜி சொல்லுகிருள்

"லக்ஸ் டாய்லெட் சோப்பைவிட அதிக அழகு அளிக்கக்கூடிய சோப் வேறே காணமுடியாது"



அவள் கவர்ச்சியுள்ளவளாய் இருக்கிறாள்—அல்லவா? இப்பேர்பட்ட அழகிய சினிமா நக்ஷத்திரம் தன் சருமத்தின் ஆரோக்யத்திற்கும், அழகிற்கும், அதிக பணச் செலவாகும் ஓர் முறையை அநுசரிப்பாள் என்று எண்ணுவீர்கள். ஆனால், அப்படியில்லை! எளிதான லக்ஸ் டாய்லெட் சோப் முறைதான் மிகவும் உயர்ந்தது என்று மாயா காண்கிருள். "இந்த மிருதுவான வெண்ணிற சோப் சருமத்தைப் பாதுகாக்கும் வகை மிகவும் ஆச்சரியமானது" என்கிருள்.

LTS. 71-172 TM. — LEVER BROTHERS (INDIA) LIMITED



S. 41—50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

நமது மாகாணத்தின் சகல பண்டங்களுக்கும் புதிய போக்கு வரத்து சாதனங்கள்

கீழ்க்கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் உங்களுடைய வியாபார / விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ ராமவிலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்.

போன்: மதராஸ் "8536" :: தந்தி: "ROADHAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1. சூரமங்கலம் ரோடு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
2. ராஜவீதி, கோயமுத்தூர். :: ::
3. கண்டோன்மெண்ட், திருச்சினாப்பள்ளி. ::
4. கிருஷ்ணராயர் தெப்பகுளத் தெரு, மதுரை. ::
5. 29 A, சௌத்பெரேட் பெங்களூர். ::

——: *மார்க்கங்கள்* :——

1. மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2. மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3. மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4. கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5. கோயமுத்தூர் — கரூர் — திருச்சினாப்பள்ளி
6. சேலம் — நாமக்கல் — திருச்சினாப்பள்ளி
7. சேலம் — உளுந்தூர்ப்பேட்டை — கடலூர்
8. மதுரை—திருச்சினாப்பள்ளி—தஞ்சாவூர் — நாகை
9. மதுரை — திருச்சி — கும்பகோணம் — நாகை



உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

கல்கி
பொருளடக்கம்

மலர் 2 }
இதழ் 20 }

1943 பிப்ரவரி 10

{ சித்திரபானு ஹு
{ தைமீ 28உ.

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.



★

கஸா பிளாங்காவில் சந்தித்துப் பேசிய நேசக் கட்சியின் இரு பெரும் பிரமுகர்கள் நமது இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறார்கள். மிக்க ஆவலுடன் யாருடைய வரவையோ எதிர் பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறதல்லவா? ஒருவேளை ஸ்டாலினைத்தான் அப்படி எதிர் பார்த்தார்களோ, என்னமோ? ஆனால், அந்த இரும்பு மனிதன், "கடிக்கிற நாய் குரைக்காது" என்னும் பழமொழிக்கு இணங்க, "எனக்கு இங்கே காரியம் இருக்கிறது; வெறும் பேச்சுக்கு நேரமில்லை" என்று செய்தி அனுப்பி விட்டார். இதனால் சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் அவ்வளவாக ஏமாற்ற மடைந்திருப்பார்கள் என்று நினைப்பதற்கும் இடமில்லைதான். "பூனை வேலையில் (ருஷியக்) கிரடி வாராததே நல்லதாய்ப் போயிற்று" என்று அவர்கள் ஒருவேளை சந்தோஷங்கூட அடைந்திருக்கலாம்.

★

நமது மாகாணத்தின் சகல பண்டங்களுக்கும் புதிய போக்கு வரத்து சாதனங்கள்

கீழ்க்கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் உங்களுடைய வியாபார விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ ராமவிலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்.


போன்: மதராஸ் "8536" :: தந்தி: "ROADHAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1. சூரமங்கலம் ரோடு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
2. ராஜவீதி, கோயமுத்தூர். :: ::
3. கண்டோன்மெண்ட், திருச்சினுப்பள்ளி. ::
4. கிருஷ்ணராயர் தெப்பகுளத் தெரு, மதுரை. ::
5. 29 A, சௌத்பெரேட் பெங்களூர். ::

——: *மார்க்கங்கள்* :——

1. மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2. மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3. மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4. கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5. கோயமுத்தூர் — கரூர் — திருச்சினுப்பள்ளி
6. சேலம் — நாமக்கல் — திருச்சினுப்பள்ளி
7. சேலம் — உளுந்தூர்ப்பேட்டை — கடலூர்
8. மதுரை—திருச்சினுப்பள்ளி—தஞ்சாவூர் — நாகை
9. மதுரை — திருச்சி — கும்பகோணம் — நாகை



உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

என்ன சேதி?

பழி நீங்கிற்று

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்தியாவைப் பற்றி விவாதம் வரும்போதெல்லாம் அங்கத்தினர்கள் உட்காரும் பெஞ்சுகள் அநேகமாகக் காலியாயிருக்குமென்று குறை கூறுவதுண்டு. தப்பித் தவறிச் சில அங்கத்தினர்கள் அரைத் தூக்கமாக உட்கார்ந்து கொண்டிருந்தாலும் நடவடிக்கைகளில் உப்புச்சப்பு இராது. ஆனால் மேற்படி பழிச்சொல்லானது சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தினால் நீங்கிப் போய்விட்டது.

சில வாரங்களுக்கு முன் பார்லிமெண்டில், இந்திய ஜனங்கள் மீது விமானங்களிலிருந்து இயந்திர பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக சர்க்கார் தரப்பில் ஒப்புக் கொண்டார்களாம். அப்போது சபையிலிருந்த கன்ஸர்வேட்டிவ் கட்சி அங்கத்தினர்கள் பலருக்கு மெய் சிலிர்த்ததாம். அவர்கள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்ததாம். ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்களாம். தங்கள் ஆனந்தத்தைக் கரகோஷ ஆரவாரஞ் செய்து வெளிப்படையாகத் தெரிவித்துக் கொண்டார்களாம்!

இதெல்லாம், கொஞ்சம் புண்ணிய பாவத்துக்குப் பயந்த ஒரு தொழிற்கட்சி அங்கத்தினருக்குச் சகிக்க முடியாமல் போய்விட்டது. அவர் சபைத் தலைவரைப் பார்த்து "யுத்த சம்பந்தப்படாத இந்தியர் மீது விமானத்திலிருந்து வெடி குண்டுப் பிரயோகஞ் செய்வதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது கரகோஷஞ் செய்வதைத் தடுக்கக் கூடாதா?" என்று கேட்டார். ஆனால் தலைவரோ "நான் ஒன்றும் செய்வதற்கில்லை" என்று இரண்டு கையையும் விரித்து விட்டாராம்.


பத்திரிகைப் போர்


இந்தியாவைப் பொறுத்த இவ்வளவு முக்கியமான செய்தியை நாம் எப்படித் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது தெரியுமா? அமெரிக்காவில் வெளியாகும் 'நியூ ரிபப்ளிக்' என்னும் பத்திரிகையில் மேற்படி விவரம் பிரசுரமாகியிருந்தது. அதைக் கண்டுபிடித்துச் சென்னைத் தினசரி ஒன்று வெளியிட்டது. மற்றப்படி நேரே சீமையிலிருந்து நமக்குச் செய்தி வந்து விடவில்லை.

அமெரிக்கப் பத்திரிகையில் வெளியாயிற்று என்ற காரணத்தினாலேயே நமது ஆங்கிலோ-இந்தியத் தினசரிக்குச் சந்தேகம் வந்து விட்டது. "அப்படியும் நடந்திருக்குமா? ஒரு நாளும் இராது. அமெரிக்கப் பத்திரிகைகளுக்குப் பிரிட்டனுக்கு விரோதமாய்க் கயிறு திரிப்பதே வேலை. வெறும் பொய்யாய்த்தானிருக்கும்" என்று அப்பத்திரிகை தீர்மானித்து, அப்பேர்ப்பட்ட வெறும் பொய்களை எடுத்துப் பிரசுரித்த சென்னைத் தினசரியை ஒரு தாக்குத் தாக்கிற்று. அந்தத் தினசரி இதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கவில்லை. பார்லிமெண்டு நடவடிக்கைப் புத்தகத்தையே புரட்டி அதில் இட்டத்தட்ட மேற்படி விவரம் வெளியாகியிருப்பதை எடுத்துக் காட்டி "இப்போது என்ன சொல்கிறாய்?" என்று கேட்டிருக்கிறது.


நமது பெருமை

ஆனால், மேற்படி பத்திரிகைப் போர் முற்றிலும் அநாவசியமென்று நாம் கருதுகிறோம். மேற்படி பார்லிமெண்டு சம்பவம் உண்மையென்று ஏற்படுமானால், அது நமக்கு எவ்வளவு பெருமையளிக்கிற விஷயம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தியர்களாகிய நாம் "பரோபகாரம் இதம் சரீரம்" என்னும் கொள்கையுடையவர்கள். இங்கிலாந்தில் உள்ளவர்களுக்கு இந்தக் கோர யுத்தம் ஆரம்பமானதிலிருந்து அவ்வளவு குதூகலமாகச் சந்தோஷப் படும்படியான சந்தர்ப்பம் அடிக்கடி ஏற்படுவதில்லை. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தைப் பார்லிமெண்டு அங்கத்தினருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது பற்றி நாம் எவ்வளவு பெருமை யடையவேண்டும்? இந்தப் பெருமையை யடைவதற்காக, ஆகாச விமானத்திலிருந்து இயந்திர பீரங்கிகளினால் சுடப் படுவதுதான் ஒரு பிரமாதமாகுமா?



ஜனப் ஜின்னு சமீபத்தில் செய்த பிரசங்கத்தில் கொஞ்சம் மனம் விட்டுப் பேசியிருக்கிறார்.
இந்தியாமந்திரி அமெரி இந்தியாவைப் பற்றி யார் என்ன கேட்டாலும் "இல்லை" என்ற பதிலையே உறுதியாகச் சொல்லி வருகிறார்.
இல்லை
ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி வழக்கம்போல் சிறைக்குள் தேக அசௌக்யமுற்ற காரணத்தினால் விடுதலையாகி வெளிவந்திருக்கிறார்.
வங்காள பிரதமமந்திரி பஸ்லுல் ஹக் தாம் பாகிஸ்தானுக்கு விரோதமாகப் பேசியதேயில்லையென்று உறுதி கூறியிருக்கிறார்.



துருக்கிப் பத்திரிகாசிரியர் கோஷ்டி [illegible] நடந்து வருகிறது.



சென்னை சர்க்காரின் தானியக் கட்டுப்பாட்டு விதிகள் பொதுஜனங்களுக்குச் சௌகரியத்துக்குப் பதிலாக ரொம்பவும் அசௌகரியத்தை உண்டு பண்ணி வருகின்றன.



பிரதமமந்திரி சர்ச்சில் துருக்கிக்குப்போய்ப் பிரஸிடென்ட இனோனுவுடன் சல்லாபம் செய்துவிட்டுத் திரும்பியசெய்தி அச்சுநாடுகளில் ஏமாற்றத்தையும் எரிச்சலையும் உண்டாக்கி யிருக்கிறது.

துருக்க சகோதரர்களுக்கு

ஆயியே பாயியோ(ம்)! மெஹர் பானி கர் பைடியே! தோடா நாஷ்தா லீஜியே! என்ன, பாஷை புரியவில்லையென்று சொல்கிறீர்கள்? — இதைத் தான் துருக்க பாஷை என்று எங்கள் ஊரில் சொல்கிற வழக்கம். நீங்கள் துருக்கியிலிருந்து வந்தவர்களாச்சே, உங்களுக்குத் துருக்க பாஷை புரியும் என்று நினைத்தோம். புரியாமற் போனால் பாதகமில்லை. உங்களைப் பார்த்தால் துருக்க சகோதரர்களாய்த் தோன்றவில்லையென்பதையும் சொல்ல வேண்டியிருக்கிறது. தொப்பியும், ஸூட்டுமாய் அசல் வெள்ளைக்காரர்களைப் போலவே இருக்கிறீர்கள்.

போகட்டும்; பார்வைக்கு எப்படியிருந்தால் என்ன? நீங்கள் துருக்கியிலிருந்து வந்திருக்கிறீர்கள், துருக்கியில் நீங்கள் எல்லாம் பெரிய பெரிய பத்திரிகாசிரியர்கள் என்பதை நாங்கள் நம்புகிறோம். எங்கள் அன்பார்ந்த பத்திரிகைச் சகோதரர்களாகிய உங்களுக்கு நல்வரவு கூறுகிறோம். வாருங்கள், 'மிஸ்டர் ஆடே! எல்லாரும் வாருங்கள். எங்களுடைய சார்பாகக் கவர்ன்மெண்ட் மாளிகையிலும், பத்திரிகாசிரியர் சங்கத்திலும், நகர சபை மண்டபத்திலும் அளிக்கப்படும் விருந்தை அருந்துங்கள். அப்புறம் கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். பிறகு, சற்றே காது கொடுத்து நாம் சொல்வதைக் கேளுங்கள்.

துருக்கர்களாகிய உங்களுக்கும் இந்தியர்களாகிய எங்களுக்கும் ஒரு பழைய உறவு உண்டு. அதை நினைத்தாலே இப்போது சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. 1920—21-ம் வருஷத்தில் எங்கள் தேசத்தில் கிலாபத் இயக்கம் என்பதாக ஒரு பிரமாதமான இயக்கம் நடந்தது. ஆகா! அப்போது எங்கள் நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமைப் பட்டு, "வந்தேமாதரம்" "அல்லாஹூ அக்பர்!" என்று எவ்வளவு பெரிய கூச்சல் போட்டார்கள்? இவ்வளவும் எதற்காக வென்றால், உங்களுடைய மன்னரும் முஸ்லிம்களின் கலிபாவுமான துருக்கி ஸுல்தானுடைய கௌரவத்துக்கும் பதவிக்கும் இங்கிலீஷ்காரர்களால் எவ்விதக் குறைவும் ஏற்படக் கூடாதென்பதற்காகத்தான். இதன் பொருட்டு எங்கள் நாட்டில் நூறு, ஆயிரம், பதினாயிரம் பிரசங்கங்கள் நடந்தன. எத்தனையோ கூட்டங்கள், ஊர்வலங்கள் நடந்தன. எத்தனையோ பேர் சிறைக்குப் போனார்கள். கடைசியாக, என்ன ஆயிற்று என்றால், துருக்கியில் நீங்கள் ஒரு பேஷான வேலை செய்தீர்கள். உங்களுடைய ஸுல்தான் — கலிபாவுக்கு நீங்களே விடை கொடுத்து அனுப்பி விட்டு, துருக்கியில் குடியாட்சியை ஏற்படுத்தி விட்டீர்கள். இங்கே, நாங்கள் எல்லாரும் அப்போது சிரித்த அசட்டுச் சிரிப்பைப் பார்க்க வேண்டுமே!

கிலாபத் இயக்கம் சம்பந்தமாக இப்படி எங்களைக் காலை வாரி விட்ட உங்களை அப்புறம் நாங்கள் கண் கொட்டாமல் கவனித்து வந்திருக்கிறோம். நீங்கள் உங்களுடைய நாட்டின் சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொண்டு, ஸ்தாபித்த சுதந்திரத்தை எவ்வளவு சாமர்த்தியமாயும் கண்ணுங் கருத்துமாயும் பாதுகாத்து வருகிறீர்கள் என்பதைப் பார்த்து அதிசயித்திருக்கிறோம். உங்கள் நாட்டில் ஸ்திரீகள் கோஷா முறையை ஒழித்து விட்டார்கள் என்று கேட்டபோது எங்களில் அநேகருக்கு மூர்ச்சை போய்விட்டது! உங்கள் நாட்டில் 'துருக்கிக் குல்லா'வை ஒழித்து விட்டுத் தொப்பி அணிந்து கொண்டீர்கள் என்று கேட்டபோது, இங்கே அநேகருக்குப் பாதிப் பிராணன் போய்விட்டது.

இப்படியெல்லாம் எங்களைத் திணற அடித்து வந்த நீங்கள் கடைசியாக இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து வந்திருக்கிறீர்கள் என்பதை நினைக்க நினைக்க நாங்கள் ஆச்சரியக் கடலிலேயே விழுந்து தத்தளிக்க வேண்டியதாயிருந்தது. இந்த உலகத்திலேயே புத்திசாலியான தேசங்கள் அயர்லாந்தும், துருக்கியுந்தான் என்று பெயர் எடுத்தீர்கள். அதிலும் நீங்கள் சுவர்மேல் பூனையாயிருந்து கொண்டு இரண்டு பக்கத்திலும் கையை நீட்டி யுத்த தளவாடங்களை வாங்கிச் சேகரித்துக் கொண்டிருந்த கெட்டிக்காரத்தனம் உண்டே, ஆகா! அதை என்னத்தைச் சொல்ல?

அப்படிப்பட்ட கெட்டிக்கார தேசத்திலே பத்திரிகை நடத்தும் நீங்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களா யிருக்க வேண்டும்? அத்தகைய அபார கெட்டிக்காரர்கள் இந்தியாவுக்கு வரப் போகிறீர்கள் என்று கேட்டதுமே எங்களுக்கெல்லாம் உடம்பு புல்லரித்தது. அதுவும், நீங்களாகவா வந்தீர்கள்? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சிபார்சின் பேரில் இந்தியா கவர்ன்மெண்டின் விருந்தாளிகளாக அல்லவா வந்திருக்கிறீர்கள்? 'சோழியர் குடுமி சும்மா ஆடாது' என்று எங்கள் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. ஆகவே, உங்களை இந்தச் சமயம் பார்த்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தருவித்திருப்பதற்கும் ஏதோ காரணம் இருக்கவேண்டுமென்று நினைத்தோம். இந்தியா இன்னும் யுத்த களமாகக்கூட ஆகவில்லை. உங்களைத் திரிபோலிக்கோ, ட்யுனிஷியாவுக்கோ, பர்மாவுக்கோ, ஸாலமன் தீவுக்கோ அனுப்பி யிருந்தாலும் அர்த்தமுண்டு; யுத்த வேடிக்கை பார்த்து விட்டு வரலாம். இந்தியாவில் இப்போது என்ன விசேஷம் இருக்கிறது பார்ப்பதற்கு? ஒன்றுமில்லாதபோது உங்களை ஏன் தருவிக்க வேண்டும்? ஆகா! அதன் காரணம் எல்லாம் சென்ற வாரத்தில் சர்ச்சில் துரை உங்கள் நாட்டுக்கு விஜயம் செய்ததிலிருந்து நன்றாய் விளங்கிற்று! சுவர் மேல் பூனையா யிருந்து வரும் துருக்கியை ஒரு வழியாய்த் தங்கள் கட்சிக்கு இழுத்து விடுவதென்று பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்தார்கள். லிபியா வெற்றியும், ஸ்டாலின்கிராட் வெற்றியும் இதற்கு அநுகூலமா யிருக்கின்றன. இந்தியாவின் நிலைமை ஒரு வேளை பிரதிகூலமா யிருக்கப் போகிறதே என்பதற்காக உங்களை நேரில் வந்து பார்த்துப் போகும்படி அழைத்திருக்கிறார்கள். ''இந்தியாவில் ஏதோ நெருக்கடி என்று நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்; நேரிலே வந்து நெருக்கடி ஏதாவது இருக்கிறதா பாருங்கள்'' என்றுதான் உங்களைத் தருவித்திருக்கிறார்கள். சரியான சமயத்தில் சரியான யோசனையோடு காரியம் செய்வதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு மிஞ்சியவர்கள் யார்?

அதன்படியே நீங்களும் வந்திருக்கிறீர்கள். பெஷாவரிலிருந்து சென்னை வரையில் பார்த்து வந்திருக்கிறீர்கள். பார்த்து வந்ததில், பல அதிசயமான விஷயங்களை அறிந்திருப்பீர்கள்.

''இந்திய நெருக்கடி, இந்திய நெருக்கடி என்றார்களே, அந்த நெருக்கடி எங்கே?'' என்று சுற்று முற்றும் பார்த்திருப்பீர்கள். நெருக்கடியைக் காணாமல் ஏமாற்ற மடைந்திருப்பீர்கள்.

அதற்கு மாறாக இந்தியா தேசத்தின் நாற்பது கோடி ஜனங்கள் அன்னிய ஆட்சியின் கீழ் ஆனந்தமாயும் அமைதியாயும் வாழ்ந்து வரும் அதிசயத்தைக் கண்டிருப்பீர்கள்.

''துருக்கியில் நாங்கள் இரண்டு கோடி பேர்கூட இல்லை. எங்களாலேயே சுதந்திரமில்லாமல் வாழமுடியவில்லையே? நாற்பது கோடி ஜனங்கள் எப்படிப் பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடக்கிறார்கள்?'' என்று வியந்திருப்பீர்கள்.

உங்கள் நாட்டில் ஒரே ஒரு சுல்தான் இருந்தார்; அது பொறுக்காமல் அவரை அனுப்பி விட்டீர்கள்! இந்த நாட்டிலோ மூலைக்கு மூலை ராஜாக்களும், நவாபுகளும் — ஆறு குண்டு முதல் முப்பத்திரண்டு குண்டு வரையில் போட்டுக் கொள்கிறவர்கள் — நிறைந்து கிடக்கிறார்கள். இதுவும் உங்களுக்கு ஒரு பெரிய அதிசயமாய்த் தானிருக்கும்.

எல்லாவற்றையும் விட உங்களுக்கு மகத்தான ஆச்சரியம் ஒரு விஷயத்தில் உண்டாகி யிருக்கக் கூடும்.

அதாவது, ''மகாத்மா காந்தி ஜவாஹர்லால் நேரு முதலிய இந்தியத் தலைவர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தோமே? அவர்களை இந்திய மக்கள் பிரமாதமாய்ப் போற்றுகிறார்கள் என்றும் கேள்விப் பட்டிருந்தோமே? — அதெல்லாம் உண்மைதானா?'' என்று ஐயமுற்றிருப்பீர்கள்.

இந்தச் சந்தேகம் உங்களுக்கு உண்டாவது முற்றிலும் இயற்கையே யாகும். வெளிப் படையாக நோக்கும்போது நிலைமை ரொம்பவும் சந்தேகாஸ்பதமாய்த் தானிருக்கிறது. ''இப்படியும் ஒரு தேசமா?'' ''இப்படியும் ஒரு ஜனங்களா?'' என்று நினைக்கும்படி யிருக்கிறது.

மகாத்மாவும், ஜவாஹர்லாலும், மற்றக் காங்கிரஸ் தலைவர்களும் சிறையில் இருக்கிறார்கள்.

இந்தியா தேசத்தின் நாற்பது கோடி ஜனங்கள் அவரவர்கள் காரியத்தை அவரவர்கள் வழக்கம்போல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தி சிறையில் இருக்கிறார்.

லட்சக் கணக்கான இந்தியர்கள் சர்க்கார் உத்தியோகம் பார்க்கிறார்கள்.

காந்தி மகான் சிறையில் இருக்கிறார்.

லட்சக் கணக்கான இந்தியர்கள் பட்டாளங்களில் சேர்கிறார்கள்.

ஜவாஹர்லால் நேரு சிறையில் இருக்கிறார்.

ஜனங்கள் கோடிக் கணக்கில் சர்க்காருக்கு வரி கொடுத்துக் கொண்டுதா னிருக்கிறார்கள்.

வல்லபாய் படேல் சிறையில் இருக்கிறார்.

எல்லாவித யுத்த முயற்சிகளும் திவ்யமாக நடந்துகொண்டிருக்கின்றன,

ராஜேந்திர பிரஸாத் சிறையில் இருக்கிறார்.

எல்லாத் தொழிற்சாலைகளும் வேலைசெய்து கொண்டிருக்கின்றன. எல்லா வக்கீல்களும் கோர்ட்டுகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தி சிறையில் இருக்கிறார்.

கல்யாணம், கார்த்திகைகளும், பண்டிகைகளும் விழாக்களும் நடந்து கொண்டுதா னிருக்கின்றன.

மகாத்மா சிறையில் இருக்கிறார்.

ஆடல் பாடல்கள் குறைவில்லாமல் நடக்கின்றன. புதிய புதிய டாக்கிகள் வந்து கொண்டுதா னிருக்கின்றன.

மகாத்மா காந்தி சிறையில் இருக்கிறார்.

சர்க்காரும் பத்திரிகைச் சங்கத்தாரும் நல் லுறவு பூண்டு, பரஸ்பரம் ஒத்துழைத்து, ஒருவருடைய சௌகரியத்தை ஒருவர் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

மகாத்மாவும் மற்றக் காங்கிரஸ் தலைவர்களும் சிறையில் இருக்கிறார்கள்.

சர்க்கார் விருந்தினராய் வந்திருக்கும் உங்களுக்கு விருந்துக்கு மேல் விருந்தாக நடந்து கொண்டிருக்கிறது.

இதெல்லாம் உங்களுக்கு ரொம்ப ரொம்ப ஆச்சரியமா யிருக்கலாம். ஆனால், கொஞ்சம் பொறுங்கள், ஐயா, பொறுங்கள். யுத்தம் முடியும் வரையில் பொறுத்திருங்கள்.—அப்போது நடக்கப்போகும் அதிசயத்தைக் கேட்டு நீங்கள் இடி விழுந்ததுபோல் திகைக்கிறீர்களா, இல்லையா, பாருங்கள்.

அப்படிப்பட்ட அதிசயம் என்ன நடக்கப் போகிற தென்பதையும் சொல்லி வைக்கிறோம்.

யுத்தம் முடிந்ததோ, இல்லையோ, இங்கிலீஷ்காரர்கள் அவ்வளவு பேரும் சுயநலமற்ற தர்மாத்மாக்களாய் ஆகிவிடப் போகிறார்கள். இந்தியர்களைப் பார்த்து, '' இந்தாருங்கள் சுதந்திரம்; எடுத்துக் கொள்ளுங்கள்; எடுத்துக் கொள்ளாவிடில் விடமாட்டோம் '' என்று சொல்லப் போகிறார்கள். அப்போது ஜனாப் ஜின்னுவோ, முஸ்லிம் லீக்கோ, ஹரிஜனத் தலைவர்களோ, சுதேச ராஜாக்களோ, அவர்களுடைய திவான்களோ, யார் குறுக்கே நின்றாலும் பலிக்காது. இவர்களை யெல்லாம் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டு இங்கிலீஷ்காரர்கள் இந்தியர்களுக்குச் சுதந்திரம் கொடுத்து விடப் போகிறார்கள்!

அப்பேர்ப்பட்ட சுதந்திர இந்தியாவில், மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரங்கள் அதிகம் இருக்க வேண்டுமா, மாகாணங்களுக்கு அதிகம் இருக்க வேண்டுமா—என்னும் ஒரு பிரச்னை தான் பாக்கி இருக்கப் போகிறது.

ஆனால், அந்தப் பிரச்னையையும் தீர்த்து வைப்பதற்கு இப்போதிருந்தே மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் முதலியோர் ஆழ்ந்த யோசனை செய்து வருகிறபடியால் எங்களுக்கு ஒரு கவலையும் கிடையாது.

ஆகவே, நீங்களும் இந்தியாவைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் திரும்பிச் சென்று உங்கள் தலைவர் இனேனுவுக்கு '' இந்தியா பத்திரமா யிருக்கிறது; நாம் பிரிட்டனுடன் உறவு கொள்ளலாம் '' என்று தாராளமாய் ரிபோர்ட் செய்யலாம்.

கடைசியாக உங்களுடைய விஜயத்தினால் எங்களுக்கு ஏற்பட்டுள்ள ஒரு நன்மையைக் குறிப்பிட்டு அதற்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்கள் தமிழ் நாட்டுக் கிராமாந்திரங்களில் எங்களுடைய முஸ்லிம் சகோதரர்களைச் சிலர் '' துருக்கர் '' என்று சொல்வதுண்டு. இது அவர்களுக்கு ஏனே கோபத்தை உண்டாக்கும்.

உங்களைப் பார்த்த பிறகு அப்படி எங்கள் இஸ்லாமிய சகோதரர்களை அழைப்பது தவறுதான் என்று உணர்கிறோம். உங்களுக்கும் எங்கள் முஸ்லிம் சகோதரர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதுதான்.

என்ன? போய் வருகிறீர்களா? ஆகா! தாராளமாய்ப் போய்வாருங்கள். கொஞ்சம் ஜாக்கிரதையாகவே போங்கள். காலம் கெட்டுக் கிடக்கிறது. போய்ச் சேர்ந்ததற்கும் சேராததற்கும் அவசியம் கடுதாசி போடுங்கள். ஆதாப்!

அக்கப் போர்

"காசி"

ஒவ்வொரு தடவை பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கூடும் சமயம் பார்த்துச் சர்ச்சில் துரை எங்கேயாவது போய்ப் புதிதாக ஒரு காரியம் செய்வது வழக்கமாய்ப் போய் விட்டது. இந்தத் தடவை அவர் கஸாபிளாங்காவுக்குப் போய்விட்டுப் பிறகு துருக்கிக்கும் போய், பிரஸிடெண்ட் இனேனுவைப் பேட்டி கண்டார்.

பேட்டி கண்டதன் பயனாக என்ன இஷ்டமான முடிவு ஏற்பட்டது என்று தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். சர்ச்சில் துரையாகட்டும் வேறு யாராகட்டும் தலைவர் இனேனுவுக்குக் குல்லாப் போடுவது மட்டும் முடியவே முடியாது!

துருக்கியர்கள் குல்லாத் தரிக்கும் பழக்கத்தைவிட்டுத் தொப்பி அணியத் தொடங்கிவிட்டதால் இப்படி முடியாதென்று நான் சொல்லவில்லை. இனேனு பக்கா ஆசாமி. அவரை ஏமாற்ற எண்ணிச் சொல்வதெல்லாம் செவிடன் காதில் ஊதின சங்காகவே முடியும். இதற்கு ஓர் உதாரணமும் இருக்கிறது.

லாஸேன் மகாநாட்டில் கர்ஸன் பிரபு துருக்கியின் உரிமைகளைப் பற்றி அலட்சியமாகப் பேசிக் கொண்டிருந்தபோது மேற்படி மகாநாட்டில் துருக்கியின் பிரதிநிதியாக ஆஜராயிருந்த இனேனு பதிலுக்கு ஒன்றுமே சொல்லாமல் மௌனமாயிருந்தாராம். கடைசியில் விசாரித்தபோது, தமக்குக் காது மந்தமென்றும், தம் காதில் ஒன்றுமே விழவில்லையென்றும் சொல்லிவிட்டாராம்!

இனேனுவுக்குக் காது மந்தந்தான் என்றாலும் அவருக்கு அவசியமான விஷயம் மட்டும் காதில் விழுமென்று சொல்கிறார்கள்!

* * *

பர்ல் பக் என்ற பிரபல ஆசிரியை எழுதிய 'நல்ல பூமி' என்ற கதை ஸினிமா படமாக வந்ததைப் பலர் பார்த்திருப்பார்கள். அதில் ஒரு குழப்ப ஸீன் வருகிறது. பொது ஜனங்கள் எல்லாரும் அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். "என்ன குழப்பம்?" என்று ஒருவரை யொருவர் விசாரிக்கிறார்கள். அப்பொழுது ஒருவன் "அதென்னமோ சாப்பாடு சம்பந்தமாகவாம்" என்கிறான்.

இந்தியாவிலுள்ள சர்க்கார்கள் உணவு விஷயத்தில் இப்பொழுது சிரத்தை கொள்ள ஆரம்பித்திருப்பதிலிருந்து அவர்கள் கூட உணவுப் பஞ்சத்தினால் குழப்பம் ஏற்படுமென்று அறிந்து கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது.

* * *

பம்பாயில் எந்த விருந்திலும் 49 பேருக்கு மேல் சாப்பாடு போடுவதைச் சர்க்கார் தடை செய்திருக்கிறார்கள். இந்தச் செய்தியைப் படித்ததும் தம் பெண்களுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயித்திருக்கும் பல பெற்றோர்கள் பம்பாயிலேயே முகூர்த்தத்தை நடத்திவிட நிச்சயித்திருக்கிறார்களாம்.

* * *

சென்னையில் அரிசி பங்கீடு செய்வதைப் பற்றிச் சர்க்கார் யோசித்து வருகிறார்களாம். தலைக்கு 5 ஆழாக்கு அரிசி கொடுக்க வேண்டுமென்று உத்தியோகப் பற்றற்றவர்கள் சொல்கிறார்கள். தலைக்கு 3 ஆழாக்கு அரிசியே போதுமென்று உத்தியோகஸ்தர்கள் அபிப்பிராயப்படுகிறார்களாம்.

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இரண்டு பேருக்கும் மன வருத்தமில்லாமல் உத்தியோகஸ்தர்களுக் கெல்லாம் தலைக்கு 3 ஆழாக்கு வீதமும் மற்றவர்களுக்குத் தலைக்கு 5 ஆழாக்கு வீதமும் கொடுத்து விட்டால் போகிறது!

* * *

"இந்தியாவில் காலணா அகப்படாததைப் பற்றிப் பார்லிமெண்டில் யாராவது கேள்வி கேட்டால் அமெரி துரை அதற்கு என்ன பதில் சொல்வார்?" என்று ஒருவர் கேட்கிறார்.

"இந்தியாவில் ஜனங்களின் பொருளாதார நிலைமை உயர்ந்து போய்விட்டது. அவர்கள் இப்போது காலணா நாணயத்தைக் கேவலமாகக் கருதுகிறார்கள்" என்று சொல்லலாம்.

* * *

வின்ஸ்டன் சர்ச்சில் துருக்கிக்குப் போனபோது அவருடைய குமாரர் ராண்டல்ப் சர்ச்சிலையும் கூட அழைத்துக் கொண்டு போனாராம். "இது யாருடா அது? உற

வினரை உத்தியோகத்தில் வைத்துக் கொள்வதில் நம்முடன் போட்டி போட வருகிறது?” என்று எண்ணியே முஸோலினி தமது மாப்பிள்ளை ஸியானோ பிரபுவை வேலையினின்றும் தள்ளி யிருக்கவேண்டும்.

* * *

“காஸாபிளாங்கா மகாநாட்டுக்கு ஸ்டாலின் ஏன் வரவில்லையென்று கேட்பவர்கள் ரஷ்யாவும் ஜப்பானும் எதிரிகளல்ல என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்” என்று ரூஸ்வெல்ட் கூறுகிறார். ஆனால் மகாநாட்டுக்கு வரும்படி ஸ்டாலினுக்கு அழைப்பு அனுப்பும் போது இந்த விஷயத்தை அவர் ஞாபகப் படுத்திக் கொள்ளவில்லை போலிருக்கிறது.

* * *

“பர்மாவில் நாங்கள் இப்பொழுது மும்முரமாக யுத்தத்தில் ஈடுபடப் போவதில்லை. முதலில் பர்மியப் பிரதேசங்களைப் பற்றிய ரகசியங்களை யெல்லாம் அறிந்துகொள்ளப் போகிறோம்” என்று ஓர் ராணுவ அதிகாரி கூறுகிறார்.

பர்மாவில் நிர்வாகம் செய்துகொண்டிருந்த காலத்தில் பிரிட்டிஷ்காரர்கள் சுரண்டுவதைத் தவிர வேறு என்னதான் செய்தார்களென்று தெரியவில்லை.

பஞ்சாபில் மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர் ஷௌகத் ஹயாத் கானுக்கு 25 வயதுதான் ஆகிறதாம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மிகக் குறைந்த வயதுள்ள மந்திரி இவர்தானாம்.

மாக்ஸ்வெல் துரை போன்ற ஐ. ஸி. எஸ். காரர்கள் இருக்கும்போது 25 மாதக் குழந்தை மந்திரியா யிருந்தால்கூட இந்தியாவில் பிரிட்டிஷ் நிர்வாகம் நடக்காதா, என்ன?

* * *

“துருக்கி தான் இந்தியாவின் மிகச் சிறந்த நண்பன்” என்று துருக்கியப் பத்திரிகைக் கோஷ்டித் தலைவர் ஆட்டே கூறுகிறார். இதைக் கேட்டுப் பிரிட்டன் சண்டைக்கு வந்துவிடப் போகிறது!

* * *

அமெரிக்கத் தலைவரின் சொந்தப் பிரதிநிதியான பிலிப்ஸ் துரை பஞ்சாபில் பல கால்வாய்ப் பிரதேசங்களைப் பார்வையிட்டாராம். இந்த வாரம் சில பாசன வசதிகளைப் பார்வையிடப் போகிறாராம். ராஜ தூதரான அவர் இப்படிப் பாசன வசதிகளையும் நிலங்களையும் பார்வையிடுவதைப் பார்த்தால் நாளைக்குக் கஜானாக்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னாலும் சொல்லலாம்!

HARDWARE, STEEL, COPPER & BRASS RODS & PIPES; LEAD, TIN AND ALL NON-FERROUS METALS, TEXTILE STORES, CHEMICAL FERTILISERS, ELECTRODES, RICE HULLER BLADES: HESSEIN & JUTE, SAWS AND TOOLS BALL & ROLLER BEARINGS, ANGLES, ROUNDS AND BARS ELECTRIC MOTORS, BELTINGS, BOBBINS, RING TRAVELLERS ETC., LEATHER GOODS ETC., ETC.,

ENQUIRIES TO

OVERSEAS REPRESENTATIONS,

Fraser Spuare,
COIMBATORE.

159. Narasimharaja Road,
BANGALORE CITY.

Phone: 98. *Grams*: "RISINGSUN"



ஆடல் பாடல்

"கர்நாடகம்"



தேசிகர் கச்சேரி

சென்றமாசம் 24உ கோகலே மண்டபத்தில் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியின் ஆதரவில் ஸ்ரீ தண்டபாணி தேசிகரின் தமிழிசைப் பொழிவு நடைபெற்றது. மேற்படி ஸொஸைடியார் டிசம்பர் சங்கீத விழாவின் போது (வேறு சில சங்கீத ஸ்தாபனங்களைப் போல்) தங்களுக்குத் தமிழ் பாஷை துவேஷம் கிடையாதென்று காட்டிக்கொண்டு, வித்வான்களுடைய விருப்பத்தின்படி பாடுவதற்குச் சுதந்திரம் கொடுத்திருந்தார்கள். தேசிகரின் கச்சேரியை ஏற்படுத்தியதின் மூலம் மேற்படி தாராளக் கொள்கையை இன்னும் ஸ்திரமாக உறுதிப்படுத்தினார்கள்.

சாதாரணமாய் இந்தக் காலத்தில் சங்கீதக் கச்சேரிகள் நாலு மணி நேரம் நடைபெறுகின்றன. இந்த நாலு மணிக் கச்சேரிகளில் ஸ்வரம் பாடுதலும், பல்லவி பாடுதலும் முக்கிய அம்சங்களாகக் கருதப்படுகின்றன. பாடகரும், பிடில் வித்வானும் மாற்றி மாற்றி ஸ்வரம் பாடும்போது, தாள வாத்தியங்களின் முழக்கமும் சேர்ந்து கச்சேரி களை கட்டுகிறது.

ஒரு கச்சேரியில், ஸ்வரம்—பல்லவி இல்லாமல், ராக ஆலாபனம்—நிரவல் இவையும் குறைவாக இருக்குமானால், முழு நேரக் கச்சேரி செய்ய முடியாது; செய்தாலும் சோபிக்காது. வரிசையாக உருப்படிகளையே பாடிக்கொண்டு வந்தால், ஒரு மணி—ஒன்றரை மணிக்குள்ளேயே பாடுகிறவர்கள், கேட்கிறவர்கள் எல்லாருக்கும் அலுப்பு உண்டாகி, கச்சேரி எப்போது முடியும் என்று தோன்றிவிடும்.

தேசிகர் ஸ்வரம் பாடுவதில்லை; பல்லவி பாடுவதில்லை. ஆலாபனமும், நிரவலும் விஸ்தாரமாகச் செய்வதில்லை. ஆனாலும், கோகலே ஹாலில் அவருடைய கச்சேரி மூன்று மணி நேரத்துக்குமேல் திவ்யமாய் நடந்தது; சபையோர் கடைசி வரையில் இருந்து கேட்டு அநுபவித்தார்கள். பாடியவர் ஸ்ரீ தண்டபாணி தேசிகராகவும், அவர் பாடியவை பெரும்பாலும் தமிழ்ப் பாட்டுக்களாகவும் இருந்தபடியால்தான் இது சாத்தியமாயிற்று.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனங்கள் இரண்டைத் தவிர, மற்றப்படி தமிழ் உருப்படிகளாகவே சுமார் பதினேழு உருப்படிகள் தேசிகர் பாடினார். அப்படியும் சபையோர் அலுக்கவில்லை! அதற்கு மேல் இன்னும் வேண்டுமென்று தமிழ்ப் பாட்டுக்களின் முதலடிகளை நாலா புறத்திலிருந்தும் கூவிக் கொண்டிருந்தார்கள்!

அன்னிய பாஷை உருப்படிகளை மட்டும் இப்படி வரிசையாகப் பாடிக்கொண்டு போயிருந்தால், ஒன்றரை மணி நேரத்தில் சபை காலியாகி யிருக்கும்.

தேசிகர் காம்போதி ராகத்தை வெகு திறமையுடன் ஆலாபனம் செய்து சபையில் 'ஹாஹா' காரம் உண்டாக்கினார். இதிலிருந்து, அவர் மனது வைத்தால் எல்லா ராகங்களையுமே பிரம்மானந்தமாக ஆலாபனம் செய்வாரென்று தெரிந்தது.

தேசிகரிடம் ரேடியோவில் கேட்டு அநுபவித்த "எப்போ காண்பேனோ?" "நாது நீ சொல்லி வாராய்" "காதலாகிக் கசிந்து" முதலிய பாட்டுக்களை நேரில் கேட்க மிகவும் சந்தோஷமாயிருந்தது.

பக்க உதவியாக ஸ்ரீ சேதுராமய்யா பிடிலும், ஸ்ரீ முருகபூபதி மிருதங்கமும், ஸ்ரீ வில்வாத்ரி ஐயர் கடமும் வாசித்தார்கள். ஸ்வரம் — பல்லவி இல்லாதபடியால் பக்க வாத்தியங்கள் அவ்வளவாக சோபிக்க முடியவில்லை. ஆனாலும், ஒரு தடவை முருகபூபதியும் வில்வாத்ரி ஐயரும் தனி ஆவர்த்தம் வாசித்துச் சக்கைப் போடு போட்டார்கள்.

ஸ்ரீ தண்டபாணி தேசிகருக்கு ஏற்கனவே "இசையரசு" என்ற பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் புதுச்சேரியில் தேசிகர் கச்சேரி செய்தபோது, "தேவார மணி" என்ற பட்டத்தை இசை அன்பர்கள் அளித்தார்களாம். பட்டங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் தேசிகருக்கு அளிக்கலாம்; தாங்கக்கூடிய பெரிய தோள்கள்தான்.

‘பாணி’யுள்ள பாட்டு

சங்கீதத்தில் ‘பாணி’ என்பதாக ஒன்று இருக்கிறது. மற்ற எல்லா அம்சங்களும் பொருந்தி யிருந்தாலும், ‘பாணி’ என்பது இல்லாவிட்டால் அந்த சங்கீதம் அவ்வளவு சுகப்படுவதில்லை. ஒரு பாடகர் அல்லது பாடகியினுடைய சாரீரம் திவ்யமா யிருக்கலாம்; நல்ல சங்கதிகளும் பிர்க்காக்களும் பேசலாம். ராகத்திலோ, தாளத்திலோ பிழை யில்லாம லிருக்கலாம். இவ்வளவும் பொருந்தி யிருந்த போதிலும் “எல்லாம் நன்றாய்த்தா னிருக்கிறது; ஆனால் பாணி தான் இல்லை” என்று சொல்லும்படி யிருக்கும். “மனுஷர் ரொம்ப உழைத்துத்தான் பாடுகிறார்; ஆனால் என்ன பிரயோஜனம்? பாட்டில் ஒரு வழி யில்லாம லிருக்கிறது” என்று சொல்லப்படு வதைக் கேட்டிருக்கிறோம். இந்தப் ‘பாணி’ அல்லது ‘வழி’ என்பது என்ன? இதை நேர்முகமாக விளக்குவதைக் காட்டிலும் உதாரண ரூபமாக நன்கு எடுத்துக் காட்ட லாம். பிப்ரவரி 3உ திருச்சி ரேடியோவில் தஞ்சாவூர் எம். தியாகராஜன் பாட்டை நேயர்களில் எத்தனை பேர் கேட்டார்களோ, தெரியாது. நான் இரண்டு தடவையும் கேட் டேன். இவருடைய பாட்டில் ‘பாணி’ இருந்தது. நல்ல வழியான சங்கீதம் என்று கேட்டவுடனே சொல்லும்படியாக இருந்தது.

ஸ்ரீ தியாகராஜனுக்கு நல்ல கம்பீரமான சாரீரம் இருக்கிறது; சாரீரத்தில் ‘குழைவு’ யும் இருக்கிறது. அன்று அவருடைய ‘புரோ கிராம்’ கொஞ்சங் கூடத் திருப்திகரமா யில்லை. 6 மணிக்குக் கச்சேரி ஆரம்பிக்கும் போதே ‘இசை உருப்படிகள்’ வகையைச் சேர்ந்த தமிழ்ப் பாட்டுக்கள். 8-45 க்கு எல்லாம் ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்கள்.



தமிழ்ப் பாட்டுப் போட்டியில் முதல் பரிசு - தங்கமெடல் - பெற்ற குமாரி என். ராஜலக்ஷ்மி.



குமாரி ரங்கநாயகியும், குமாரி ருக்மணியும் ஜனவரி 19உ ரேடியோவில் வெகு நன்றாய்ப் பாடினார்கள். நாட்டக் குறிஞ்சி ராகத்தில் அட தாளத்தில் அவர்கள் பாடிய தமிழ் வர்ணம் விசேஷமாய்க் குறிப்பிடத் தக்கதா யிருந்தது. ஸாஹித்ய கர்த்தா இவர்களுடைய தகப்பனா ரான நெரூர் ஸ்ரீநிவாஸாச்சாரியார் அவர்கள்.

(அப்படி ரொம்ப உயர்வான கீர்த்தனங்களும் இல்லை.) இப்படி அசட்டுப் புரோகிராமா யிருந்தபோதிலும், ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ என்பதற் கிணங்கத் தியாகராஜனு டைய சிறந்த சங்கீதத் திறமை நன்கு வெளி யாகி விட்டது. மாலையில் சங்கராபரணமும், இரவு வாசஸ்பதியும் ஆலாபனம் செய்கையில், “ஆகா! இது உயர்ந்த பாட்டு; பிரமாதமாக முன்னுக்கு வரவேண்டிய பிள்ளை” என்று ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. வாசஸ்பதி கீர்த்த னத்துக்கு ‘வாரியோ வாரி’ என்று ஸ்வரம் பாடி அமர்க்களப் படுத்தி விட்டார்.

இந்தத் தஞ்சாவூர் தியாகராஜன் என்னும் இளைஞர் நல்ல சங்கீத பரம்பரையில் வந்தவ ரென்றும், செம்மங்குடியிடம் சங்கீதம் பயில் கிறார் என்றும் அறிகிறேன். செம்மங்குடி சீனிவாசய்யரின் சாரீர கஷ்டத்தைப் பற்றி நாம் எத்தனையோ துக்கப்பட்டுக் கொண்டி ருக்கையில், அவர் இத்தகைய சிஷ்யர் ஒரு வரைத் தயார் செய்வதறிந்து ரொம்பவும் மகிழ்ச்சி யுண்டாகிறது. பிள்ளையாண்டான் நாளுக்கு நாள் வித்தையை வளர்த்துக் கொண்டு குருவின் புகழையும் ஓங்கி வளரச் செய்யவேண்டும்.

* * *

நல்ல ‘பாணி’யுள்ள மற்றொரு பாட்டை இந்தமீ 6உ யன்று சென்னை ரேடியோவில் கேட்டேன். சில பேர் சாதுவாய் இருப்பது போல் இருந்து திடீரென்று ஒரு நாள் ‘பொல்லாதவர்’கள் ஆகிவிடுகிறார்கள். இந்த வர்க்கத்தில் சங்கீதபூஷணம் எஸ். வி. பார்த்த சாரதியையும் சேர்க்க வேண்டுமென்று தோன்றுகிறது.

6உ கச்சேரியில் அவர் பந்துவராளி ராகம், கீர்த்தனம், ஸ்வரம் பாடும்போது,



மகாராஜபுரம் வி. கோதண்டராமன்

"அடேடே அப்பா! பொல்லாதவரா யிருக்கிறாரே!" என்று சொல்லித் தீரவேண்டி யிருந்தது. பிறகு தன்யாஸியும், சங்கராபரணமும் ஒன்றை யொன்று தூக்கி அடித்தது.

பனி காலத்தில் சங்கீத வித்வான்களுக்குத் தொண்டை கட்டுவது வழக்கமா யிருக்க, இந்த இளம் பாடகருக்கு அன்று தொண்டை வழக்கத்தை விடத் தெளிவாயிருந்தது: ரேடியோவில் இவ்வளவு நன்றாய் ஏற்கெனவே அவர் குரல் சோபித்ததில்லை.

இன்னொரு விஷயம் சொல்லியாக வேண்டும். இந்த இளம்பாடகர், புகழ்பெற்ற ஹாஸ்ய எழுத்தாளரான எஸ். வி. வி. யின் புதல்வர் என்பது நேயர்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம். "தமிழுக்கும் சங்கீதத்துக்கும் அவ்வளவாகப் பொருத்தமில்லை" என்ற கருத்தை "ஜாம்பவான்" என்ற பெயரில் எஸ். வி. வி. சில சமயம் வெளியிட்டிருக்கிறார். ஆனால் அவருடைய புதல்வருக்கு அந்த அபிப்பிராயம் இல்லை, அதாவது "தமிழுக்கும் சங்கீதத்துக்கும் சத்துரு" என்று ஸ்ரீ எஸ். வி. பார்த்தசாரதி கருதவில்லை என்று தெரியவருகிறது. அவருடைய இரண்டு மூன்று ரேடியோக் கச்சேரிகளைக் கேட்டு விட்டுத்தான் இப்படிச் சொல்லத் துணிந்தேன்.

அன்றையக் கச்சேரியில் ஸ்ரீ கோபால கிருஷ்ணன் வயலினும், ராமநாதபுரம் ஈசுவரன் மிருதங்கமும் வாசித்தார்கள். இரண்டு பேரும் திறமை வாய்ந்த கைகள். ஈசுவரனுடைய தனி ஆவர்த்தனத்துக்குச் 'சபாஷ்' போட்டுத் தீரவேண்டியிருந்தது. மொத்தத்தில் நல்ல ஜமா.

கேட்டுப் பாருங்கள்!

பிப்ரவரி 11உ திருச்சி ரேடியோவில் பெரிய கோஷ்டி: ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு, இராஜமாணிக்கம் பிள்ளை வயலின், பழனி சுப்பிரமணியப் பிள்ளை மிருதங்கம்.

12உ 7—45 க்குத் திருச்சியைத் திருப்பிப் பாருங்கள். ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையின் கவிகளைத் தொகுத்து இசைச் சித்திரமாக்கித் தரப்போகிறார்களாம்.

13உ சென்னையில் சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளையின் கச்சேரி. திருவையாற்றில் பாடிய இரண்டு அழகான தமிழ்க் கீர்த்தனங்களை அவர் இங்கேயும் பாடினால் கேட்கலாம்.

அன்று திருச்சியில் மகாராஜபுரம் வி. கோதண்டராமன் மத்தியானம் 1-மணிக்கும் மாலை 5-மணிக்கும் பாடுகிறார். 'மகாராஜபுரம்' என்றதும் குலம், கோத்திரம் விசாரிக்கத் தோன்றுகிறதல்லவா? ஆமாம்; சங்கீத பூபதி மகாராஜபுரம் விசுவநாதய்யரின் பிள்ளை தானும்! தந்தையை மிஞ்சும் பிள்ளையாக ஏன் இருக்கக் கூடாது?

14உ சென்னையில் ராமநாதபுரம் வி. கிருஷ்ணன் 4-மணிக்கும் 10-மணிக்கும் பாடுவதை அவசியம் கேட்டுப் பாருங்கள். பாட்டு பேஷாயிருக்கும்.

15உ திருச்சியில் வேலூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை பாடுகிறார்.

16உ திருச்சியில் ஸ்ரீமதி கமலா அனந்தகிருஷ்ணனின் செவிக்கு இனிய பாட்டு.

அன்றிரவு சென்னையில் ஸ்ரீ கே. பி. சுந்தராம்பாள் பாடுகிறார்.

18உ திருச்சியில் தஞ்சாவூர் காணுவின் நட்சத்திரக் கச்சேரி.

19உ சென்னையில் மருத்துவக்குடி ஸ்ரீ ராஜகோபாலய்யர் வித்வத் ததும்பப் பாடுவார். திருச்சியில் ஸ்ரீ நடராஜ சுந்தரம் பிள்ளையின் நாதஸ்வரத்தில் சில அபூர்வ ராகங்களைக் கேட்கலாம்.

20உ சென்னையில் மதுரை மணி ஐயர் ஜமாய்க்கப் போகிறார்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழ்க் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: க. மு. சொக்கலிங்கம், செட்டி நாடு கார்ப்பொரேஷன் லிமிடெட், 93, 95. லீ ஸ்ட்ரீட், கொழும்பு.

தைரியசாலி

"பூரி"

நான் அன்று வெளியிலிருந்து வீடு திரும்பியபோது குழந்தை கமலி அவளுடைய உதட்டைப் பிடித்துக் கொண்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். "கமலிக்கு என்ன உடம்பு?" என்று என் மனைவியை விசாரித்தேன்.

"பாவம், பல்வலி தாங்காமல் துடியாய்த் துடிக்கிறது!" என்று சொல்லி விட்டுக் கமலியைக் கட்டிக்கொண்டாள்.

"ஊ, ஊ!" என்று கமலி வலி தாங்காமல் முனகினாள்.

நான் உடனே ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். நான் எப்பொழுதும் பிறர் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருவதில் காலதாமதம் செய்வதில்லை. அதனாலேயே பல சோம்பேறி நண்பர்களுக்கு என்னைக் கண்டால் பிடிப்பதில்லை. "பல்லைப் பிடுங்கி விட்டு மறுகாரியம் பார்க்க வேண்டியதுதான்" என்று கண்டிப்பாய்ச் சொன்னேன். "ஊ! ஊ! ஊ!" என்று கமலி மறுபடியும் முனகினாள்.

என் மனைவி என்னுடைய தீர்மானத்தை மெச்சி என்னை அன்பு கனிய நோக்கிப் புன்னகை புரிந்தாள். "நீங்கள் சொல்வது ரொம்ப சரி! பல்லைப் பிடுங்கிவிட வேண்டியதுதான். அவள் கஷ்டப்படுவதைப் பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. எப்போது அழைத்துக்கொண்டு போகிறீர்கள்? நம்ம டாக்டர் சந்துருவிடமே அழைத்துக்கொண்டு போகலாமே" என்றாள். "அவரிடந்தான் போகப் போகிறேன். இதோ கிளம்புகிறேன்" என்றேன். சிலரைப்போல் காரியங்களை ஒத்திப் போட்டுக்கொண்டே போகும் கெட்ட வழக்கம் என்னிடம் கிடையாது.

என்னுடைய தீர்மானத்தைக் கேட்டதும் கமலி "ஊ, ஊ, ஊ" என்று கூவிக் கொண்டே வாயைப் பொத்திக் கொண்டு ஓட ஆரம்பித்தாள். பல்லைப் பிடுங்கிக் கொள்வதை நினைத்தாலே அவளுக்குப் பயம். ஆனால் நானா விடுகிறவன்? "கமலி! இங்கே வா" என்று கூப்பிட்டேன். அவள் வந்தாள். வந்ததும் "ஏன் இப்படி நடுங்குகிறாய்? கண் மூடிக் கண் திறப்பதற்குள் டாக்டர் பல்லை எடுத்து விடுவார். நீ என் பெண்ணாயிருந்து கொண்டு இப்படிப் பயப்படுகிறது எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்றேன்.

"என் பெண் கூடத்தான்" என்று என் மனைவி நாஸூக்காகச் சொன்னாள். "ஊ ஊ......ஊ......ஊ!" என்று கமலி இன்னும் இரண்டு மூன்று 'ஊ' சேர்த்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள். ஆனால் அதற்கெல்லாம் நானா விட்டுக் கொடுத்து விடுகிறவன்?

நானும் கமலியும் டாக்டர் வீட்டுக்குக் கிளம்பினோம். டாக்டர் எங்கள் குடும்ப வைத்தியர். அவர் என் மனைவிக்கு ஏதோ ஒரு விதத்தில் பந்துகூட. நான் டாக்டர் ரொம்ப நல்லவரென்றும், வலிக்காமல் பல்லை எடுத்துவிடுவாரென்றும் கமலிக்குத் தைரியம் சொல்லிக் கொண்டே போனேன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் டாக்டர் வீடு வந்துவிட்டோம். அவர் எங்களை வரவேற்று உட்கார வைத்ததும் "கமலி வந்து........" என்று ஆரம்பித்தேன், அதற்குள் டெலிபோன் மணி அடிக்கவே அவர் "இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லி எழுந்திருந்து போனார்.

அப்பொழுது பல்லைப் பிடுங்கிக் கொள்வதற்காக உட்காரும் நாற்காலியை அகஸ்மாத்தாய்க் கண்டதும் என்னை யறியாமலே எனக்கு வெடவெடத்தது. தொண்டைத் தண்ணீர் வற்றிப் போயிற்று. பேச முடியாமல் நாக்குக் குழறிற்று. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "கமலி!" என்றேன்.

அவளோ தைரியசாலியான என் பெண் என்பதை அடியோடு மறந்து போய் எழுந்திருந்து ஓட ஆரம்பித்தாள். அதைப் பார்க்க எனக்கு அவமானமாய் இருந்தது. எழுந்திருந்து போய் அவளை அழைத்துக் கொண்டு வந்து உட்கார வைத்து "கமலி! இப்படிப் பயப்படுவாளா! அப்பா எவ்வளவு தைரியமாயிருக்கார், பார்த்துக் கொள்!" என்று சொல்லி நான் அந்த நாற்காலியில் போய் ஜோராக உட்கார்ந்து கொண்டு "கொஞ்சங் கூட வலிக்காது" என்று தைரியம் கூறினேன்.

டாக்டர் வந்ததும் "நான் இப்படி வாயைத் திறந்து காண்பிப்பேன்" என்று வாயைத் திறந்தேன். அப்பொழுது டெலிபோனில் பேசிவிட்டு வந்த டாக்டர் நான் தமாஷ் செய்வதைப் பார்த்துச் சிரித்தார். கமலிக்கு மேலும் தைரியமூட்டுவதற்காகவோ என்னமோ அவர் ஒரு மருந்து பாட்டிலை எடுத்துக் கொண்டு வந்து என் வாயில் அதிலிருந்து கொஞ்சம் மருந்தைப் போட்டார். "வலிக்கவில்லை, பார்த்தாயா!" என்று கமலியிடம் டாக்டர் சொல்லி விட்டுச் சட்டைப் பையிலிருந்து குறடு மாதிரி ஒன்றை எடுத்தார்.

நான் திகிலடைந்து அவரைத் தடுப்பதற்குள் அவர் என் பல் ஒன்றைச் சட்டென்று பிடுங்கி எடுத்து விட்டார். 'அப்பாடா' என்றேன்.

அந்தப் பல் தான் ஒரு மாத காலமாக எனக்குத் தொந்தரவு கொடுத்து வந்தது. ஆனால் வலிக்கிறது என்று என் மனைவியிடம் சொன்னால் உடனே அவள் டாக்டரிடம் போகச் சொல்லிப் பிராணனை வாங்கி விடுவாளே யென்று பல்லைக் கடித்துக்கொண்டு வலியைப் பொறுத்திருந்தேன்.

"என் பல்?" என்றாள் கமலி.

ஆனால் டாக்டர் அவள் பற்களைப் பார்த்துவிட்டு "உனக்கு ஒன்றுமில்லை. வலி நாளைக்குச் சரியாய்ப் போய் விடும்" என்றார்.

சற்று முன் வரையில் 'ஹா, ஹா' என்று புலம்பிக் கொண்டிருந்த கமலி "எனக்கு இப்போ கொஞ்சங் கூட வலிக்கவே இல்லை" என்று சொன்னாள். இதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

நாங்கள் வீடு திரும்பிப் போகும் வழியில் கமலியின் பல்லுக்குப்பதிலாக டாக்டர் என் பல்லைப் பிடுங்கி விட்டதைப் பற்றித் தமாஷாகப் பேசிக்கொண்டே போனோம். "ஆனால், அப்பா! நீங்கள் நிஜமாகவே கொஞ்சங் கூடப் பயப்படவில்லையே?" என்றாள் குழந்தை.

நான் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் சிரித்தேன்.

அன்று மத்தியானம் நான் வீட்டு ஹாலில் உட்கார்ந்திருந்த போது உள்ளே என் மனைவியும் கமலியும் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. "ஏன், அம்மா! அதெல்லாம் கிடக்கட்டும். டாக்டர் மாமாவுக்கு அப்பாவின் பல்லைத்தான் பிடுங்கணும்னு எப்படித் தெரியும்?" என்று கமலி கேட்டாள்.

"இரைந்து பேசாதே! நான் முதல் நாளே டாக்டரிடம் சொல்லி யிருந்தேன். இந்த அப்பாக்களுக்கெல்லாம் தங்கள் உடம்பைப் பார்த்துக்கத் தெரியறதில்லை" என்று என் மனைவி சொன்னாள்.

"அப்படியா! ஊ, ஊன்னு சொல்றதுக்கு எனக்கு அரை ரூபாய் கொடுக்கிறேன்னு சொன்னாயே, எங்கே?" என்று கமலி கேட்டாள்.

"இந்தா!" என்று அவள் தாயார் பணம் கொடுத்தாள்.

சிறிது நேரம் வரை நிச்சப்தமாயிருந்தது. பிறகு என் மனைவி "கமலி! ஆனால் நீ இதுமாதிரி எப்பொழுதும் பல் வலிக்கிறது என்று பொய் சொல்கிற வழக்கம் வைத்துக் கொள்ளக் கூடாது ... இருந்தாலும் ......" பிறகு தாயும் பெண்ணும் களுக்கென்று சிரிக்கும் சப்தம் கேட்டது.

நானும் அன்று முதல் நன்றாகச் சிரிக்க ஆரம்பித்தேன். பல் வலியால் ஒரு மாதகாலம் தூக்கமில்லாமலிருந்தவன் அன்றுதான் நன்றாகத் தூங்கினேன்.

32,000 பிரதிகள் விற்பனை!

விளம்பர சார்ஜ்:—பக்கம் 1, ½, ¼, ரூ. 20, 10, 5 தான். உங்கள் விளம்பரமும் பணமும் அனுப்புக.

"வஸந்த மோஹினி"


இது இரண்டு வர்ண சித்திர ரசப்படங்களும் டிம்மி 1×8ல், பல கட்டுரைகள், கதைகள், போட்டிகளுடன் 1, 15, தேதி தோறும் வருகிற பத்திரிகை. அணா 2½. வருடச் சந்தா ரூ. 3—8—0. ஆறு மாதம் ரூ. 1—12—0. இனாம் பிரதி யாருக்கும் இல்லை. மூன்றணா M.O. செய்க. ஸ்டாம்புகள் கூடா.

வஸந்த மோஹினி ஆசிரியர் எழுதியவை.

(1) மதுரையில் தங்க மழை (நாவல்) அணா 5. (2) மிஸ் கோகிலா (நாவல்) அணா 5. (3) ரூபவாணி (உத்தியோகம் சம்பாதிக்க வழி) அணா 5. (4) விளம்பர மனைவி (நவீன நாகரீக நாவல்) அணா 10. டெ நான்கும் தபால் செலவு உள்பட ரூ. 1—14—0 M.O. செய்தால், வஸந்த மோஹினி பிரதி இனாம். வி. பி. இல்லை.

டிபாஸிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை!

"வஸந்த மோஹினி" ஆபீஸ், 14டீ. லக்ஷ்மிபுரம் 2வது தெரு. மதுரை (S.I.)



காலக்ஷேபம்

தடுக்காத காரணம்

மாஜிஸ்டிரேட் (சாட்சியைப் பார்த்து):—இரண்டு எதிரிகளும் நாற்காலிகளை உபயோகித்துச் சண்டை பிடித்ததைப் பார்த்துக் கொண்டிருந்த நீ, ஏன் இவர்களை அப்பொழுதே தடுத்திருக்கக் கூடாது?

சாட்சி:—அந்த சமயம் அங்கே வேறு நாற்காலி ஒன்றும் இல்லை, ஸார்!

—சா. சுப்பிரமண்யம்.

* * *

கவனிக்கவில்லை!

தாத்தா (பேரனைப் பார்த்து):—ஏண்டா, சோமு! இன்னிக்குப் பள்ளிக்கூடத்தில் உன் முதுகிலே எத்தனை அடி விழுந்தது?

பேரன்:—போ, தாத்தா! பின்னடி நடக்கிறதையெல்லாம் யார் அவ்வளவு சிரத்தையுடன் கவனிச்சுக் கொண்டு இருக்கா! —கே. சுப்ரமண்யம்.

* * *

பதிலுக்குப் பதில்

வாடிக்கைக்காரர்:—இதென்ன ஐயா, நாலணுவுக்குப் பூசணிக்காய் ரொம்பச் சின்னதாக இருக்கிறதே?

கடைக்காரர்:—அவ்வளவுக்குத் தூக்கிக் கொண்டு போகச் சிரமம் குறைச்சல்தானே?

வாடிக்கைக்காரர்:—இந்தாரும், மூன்றணா. உமக்கும் காசு எண்ணுகிற தொல்லை குறைவுதான்!

—ஆ. தேவர்சேனாபதி.

* * *

பிரஹஸ்பதி

தகப்பனார்:—ஏண்டா, சோமு, ஆத்திலே இரண்டு பஞ்சாங்கம் உண்டு. இப்போ ஒன்று கூடக் காணவில்லையே.

சோமு:—அப்பா, நேற்று ஆத்தில் சாம்பிராணி இருக்கவில்லை. இரண்டு பஞ்சாங்கம் சேர்ந்தால் தசாங்கம் ஆச்சே என்று இரண்டையும் கிழித்துத் தணலில் போட்டு சுவாமிக்குக் காட்டிவிட்டேன். —எம். கே. வெங்கடேசன்.

கெட்ட காலம்தான்

நண்பர்:—நான் 'ராமு' என்ற புனை பெயருடன் நாவல் எழுதப் போறேன்.

மற்றவர்:—அட பாவமே! அப்படீன்னா ராமு என்ற பெயருள்ளவர்களுக்கெல்லாம் கெட்ட பெயர் ஏற்படும் போலிருக்கே?

—வி. எஸ். ஸ்ரீநிவாசன்.

* * *

பலே வித்தை

யானைப்பாகன் "இந்த யானை பலே பலே வித்தைகளைச் செய்யும்" என்றான். அதைக் கேட்ட கிராமவாசிகள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

யானைப்பாகன் "அதோ அங்கு வைத்துள்ள பெட்டியில் பணம் போட யானைக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன். வேண்டுமானால் ஒரு ரூபாய் கொடுத்துப் பாருங்கள்" என்றான்.

கிராம வாசி ஒரு ரூபாய் கொடுத்தான். யானை அதைப் பெட்டியில் போட்டு விட்டது.

கிராமவாசி:—ரூபாயை எடுத்துக் கொடுக்கச் சொல்லுங்கள்!

யானைப்பாகன்:—அந்த வித்தையை இன்னும் கற்றுக் கொடுக்கவில்லை.

—ஜெ. கே. நீலகண்டன்.

* * *

பலிக்காத ஜோஸ்யம்

வந்தவர்:—ஓய் ஜோஸ்யரே, நான் ஒண்ணு யோசிச்சுண்டிருக்கேன். அது பலிக்குமான்னு ஒரு ஆரூடம் சொல்லும்.



ஜோஸ்யர்:—நூத்தி எட்டுக்குள்ளே ஒரு எண் சொல்லுங்கோ.

வந்தவர்:—அறுபத்தினாலு.

ஜோஸ்யர்:—ஊம், பலிக்கவே பலிக்காது! நீர் அதைப் பற்றி யோசிக்கவே வேண்டாம்.

வந்தவர்:—உங்கள் ஜோஸ்யம் பலிக்குமோன்னுதான் யோசிச்சுண்டிருந்தேன். —எஸ். தேவராஜன்.

திண்ணை ரஸாயனம்

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

ஆறாவது நாள்

நீ :—அனலமும் நீரகமும் சேர்ந்து ஜலம் ஆகிறது என்றீர்களே, இவையிரண்டும் வாயுக்கள் ? இரண்டு வாயு பதார்த்தங்கள் கூடி ஒரு திரவபதார்த்தம் ஆகிறது என்கிறீர்கள். இதை எப்படி நம்புகிறது ? இரண்டு வாயுக்களினின்று ஒரு திரவம் எவ்வாறு தோன்றும் ?

சே :—விறகுக் கட்டை எரிந்தால், கட்டை எல்லாம் வாயுவாகப் போகிறதோ இல்லையோ ?

நீ :—ஆமாம் ; துளி சாம்பல் தவிர எல்லாம் காற்றில் சேர்ந்து வாயுவாகத்தான் போகிறது.

நீ :—கட்டிப் பொருள் வாயுவாகப் போவதைக் கண்ணால் பார்க்கிறோம். அதே மாதிரி வாயுப் பொருளிலிருந்து ஏன் கட்டிப் பொருள் உண்டாகக் கூடாது ? நேற்று சொன்னேனே, காற்றிலிருக்கும் கரியாமில வாயுவிலிருந்து மரங்கள் தங்கள் யாக்கையைச் செய்து கொள்ளுகின்றன வென்று. வாயு திரவமாகிறதும் திரவம் வாயுவாகிறதும் வாயு கட்டிப் பொருளாகிறதும் கட்டிப் பொருள் வாயுவாகிறதும் ஒன்றும் ஆச்சரியமில்லை,

நீ :—மெழுகுவர்த்தி எரிந்து சாம்பல் கூட இல்லாமல் எல்லாம் வாயுவாகத்தான் போகிறது. உண்மைதான். ஒன்று உண்மையானால், மற்றொன்றும் கூடும் என்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும். நீரானது ஆவியாகும், ஆவியானது நீராகும். சொல்லுங்கள்.

சே :—இரண்டு வாயுக்கள் சேர்ந்து நீராவியாகிறது. அந்த ஆவி வெப்பம் தணிந்து நீராகிறது. ஒன்று அனலம். ஒன்று நீரகம். இரண்டு வாயுக்களையும் தனியாகப் பிரித்தெடுக்கலாம்.

நீ :—நீரக வாயுவின் இலக்கணங்கள் என்ன ?

சே :—நீரகம் தீப்பற்றி எரியும். நீராவியை எரிக்க முடியாது. அனலத்தை விட்டுப் பிரிந்த நீரகம் அனலத்தைத் தேடிக்கொண்டேயிருக்கும். சுலபமாகத் தீப்பற்றிக் கொள்ளும்.

நீ :—கெட்ட பேர் வழி போலிருக்கு !

சே :—நீரக வாயு மிக லேசான வாயு. மேலே கிளம்பும். ஆகாய விமானங்கள் செய்ய உதவும்.

நீ :—இப்போது ஆகாய விமானங்கள் நீரக வாயுவினால்தான் பறக்கின்றனவோ ?

சே :—இல்லை, இல்லை. இப்போது பறக்கும் விமானங்கள் எல்லாம் பட்சிகள் காற்றில் சிறகுகளைக் கொண்டு பறப்பதுபோல பறக்கின்றன. தண்ணீரில் நீந்துவதுபோல் விமானங்கள் காற்றில் நீந்துகின்றன. மிகவும் வேகமாகச் சுற்றும் சுழல் விசிறிகளைக் கொண்டு பறக்கின்றன. பட்சிகளின் தேக அமைப்பைப் பார்த்து விமானங்கள் செய்திருக்கிறார்கள். தம் ஜீவ சக்தியால் பட்சிகள் சிறகுகளை அடித்துக் காற்றில் கிளம்புகின்றன. அதற்குப் பதில் கல்லெண்ணெய் எரித்து, அதைக் கொண்டு யந்திரத்தை இயக்கி, விசிறிகள் சுழன்று, விமானங்கள் மேலே கிளம்பிப் பறக்கின்றன. நீரகத்தைக் கொண்டு மேலே கிளம்பும் விமானங்களும் உண்டு. அது அவ்வளவு சவுகரியமில்லை.

நீ :—இன்னும் ஏதாவது வாயுக்கள் உண்டோ ? நம்ம சாஸ்திரத்தில் ஐந்து வாயுக்கள் சொல்லுவார்கள்.

சே :—பிராண அபான சமான வியான உதான வாயுக்கள் என்று நம் பெரியவர்கள் வகுத்தது, தேகத்தில் நடைபெறும் அங்க இயக்கங்களைப் பற்றிய விஷயம். ரசாயனத்தில் வாயுக்கள் முக்கியமாக நான்கு என்று சொல்லலாம். மூன்று சொல்லியாயிற்று. நான்காவது பையம். அனலம், வளிரம், நீரகம் இந்த மூன்றும் கண்ணுக்குப் புலப்படாத நிறமற்ற பொருள்கள். பையம் நிறம் கொண்ட வாயு. ஆகையால் கண்ணுக்குப் புலப்படும்.

நீ :—இது என்ன வியப்பாக இருக்கிறது ! வாயுவுக்கு நிறம் எப்படியிருக்கும் ?

சே :—பைய வாயு பச்சை நிறங் கொண்டது. சாதாரணக் காற்றைவிட மூன்று மடங்குக்குமேல் பாரம் கொண்

டது. நீரகம் காற்றை விட 15 மடங்கு லேசானது.

நீ:—பைய வாயுவை எங்கே காண லாம்?

சே:—பையம் தினமும் நம் உணவில் சேருகிறது. ஆனால் வேறு ஒரு தாதுவுடன் புணர்ந்துதான் இருக்கிறது. நாம் ஆகாரத்தில் தினமும் சேர்த்துக் கொள்ளும் உப்பு இருக்கிறதே அது ஒரு புணர் பொருள். ஒரு உலோகமும், பைய வாயுவும் புணர்ந்தது உப்பு.

நீ:—தண்ணீரில் கரையும் உப்பில் உலோகமா இருக்கிறது?

சே:—ஆமாம். அது ஒரு வியப்பான உலோகம். தண்ணீரில் போட்டால் அது தண்ணீரிலுள்ள அனலத்தையும் பிரித்துத் தன்னோடு சேர்த்துக் கொண்டு நீரகத்தைத் துரத்திவிடும்.

நீ:—என்ன உலோகம் இது? வேடிக்கையா யிருக்கிறது.

சே:—நாம் உண்ணும் உப்பில் அந்த உலோகமும் பையவாயுவும் புணர்ந்து நிற்கின்றன. ஸோடா உப்பு தெரியுமோ?

நீ:—ஆகா, தெரியும். பருப்பு நன்றாக வேகுவதற்குப் போடுகிறார்களே அது தானே?

சே:—அந்த உப்பிலும் இந்த உலோகம் இருக்கிறது. ஆனால் அதில் பையம் இல்லை. வேறு தாதுக்கள் சேர்ந்திருக்கின்றன. பைய வாயுவைப் பிரித்தெடுக்கலாம். அது மஞ்சளும் பச்சையும் கலந்த நிறம்கொண்ட ஒரு காரமான வாயு. காரமும் நாற்றமும் கொண்டு மூக்கில் திட்சணமாக ஏறும். சென்னைக் குழாய் நீரில் ஒவ்வொரு நாள் அந்த வாயு அதிகமாகக் கலந்திருக்கும்.

(மூக்கு என்ற பேச்சு வந்த உடனே தீக்ஷிதர் பொடி டப்பியைத் திறந்தார்.)

நீ:—இதென்ன? தண்ணீரில் என்னத்திற்கு அந்த வாயுவைக் கொண்டு போய்க் கலக்கிறார்கள்?

சே:—நீரிலுள்ள விஷக் கிருமிகளையெல்லாம் இந்தப் பைய வாயு சுலபமாகக் கொன்று விடும். பிறகு தண்ணீரை நாம் தாராளமாகக் குடிக்கலாம்.

நீ:—செத்த கிருமிகள் கலந்திருந்தால் ஒன்றும் தோஷமில்லையோ?

சே:—அப்படித்தான்.

நீ:—சிவ, சிவா! போதும், நமக்குக் கிணற்று நீரே போதும்.

சே:—அப்படியில்லை, தீக்ஷிதர்வாள்! காலரா, விஷ சுரம் முதலிய வியாதிகள் மிகச் சிறிய அணுரூபமான விஷக்கிருமிகளின் வேலை. அந்தக் கிருமிகளை மருந்து போட்டோ, தண்ணீரைக் கொதிக்க வைத்தோ கொன்றுவிட்டோ மானால் வியாதி வராது. இதில் என்ன அருவருப்பு?

நீ:—செத்த கிருமிகளைத் தண்ணீருடன் விழுங்குவதாக ஒரு ஏற்பாடா?

சே:—உயிரோடு கிருமிகளை விழுங்குவது ஆசாரமோ?

நீ:—கூடாதுதான். வடிகட்டினால் போச்சு.

சே:—இந்தக் கிருமிகள் கண்ணுக்குக் காணாத அணுப்பிரமாணமான கிருமிகள். எந்தத் துணியிலும் வடிகட்டிப் பிரிக்க முடியாது. பார்ப்பதற்கு நல்ல சுத்தமான தண்ணீரைப் போலிருக்கும். வாயில் விட்டாலும் ருசியாகத்தானிருக்கும். தண்ணீரில் மருந்து போட்டோ கொதிக்க வைத்தோ தான் சுத்தப்படுத்த முடியும்.

சே:—கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் தண்ணீரில் இருக்கிறதாக ஏன் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்? வியாதி எத்தனையோ காரணங்களினால் வரலாம்.

நீ:—பூதக் கண்ணாடி வைத்தும் பார்க்கலாம். வேறு பரீட்சைகளும் உண்டு. தண்ணீரை அப்படியே குடித்தால் வியாதி வருவதும், கிருமி சுத்தம் செய்த தண்ணீரைக் குடித்தால் வியாதி வராமலிருப்பதும் பிரத்தியட்சப் பிரமாணம்.

நீ:—அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள். இந்தக் கிருமியைக் கொல்லும் வாயுவின் பெயர் என்ன?

சே:—பையம்.

நீ:—பெயர் சின்னதாகத்தானிருக்கிறது. பை என்றால் அதன் நிறத்தைக் குறிக்கிறதோ?

சே:—அதுவே விஷயம். ஆங்கிலத்தில் "க்ளோரீன்" என்பார்கள். அந்த மொழியின் தாதுவும் மேல் நாட்டு பாஷையில் பச்சை நிறத்தைக் குறிக்கும் மொழிதான்.

நீ:—வேறு என்ன வாயுக்கள் உண்டு பிரபஞ்சத்தில்? நீங்கள்தான் எல்லாம் பார்த்து முடித்திருப்பதாகத் தெரிகிறதே!

சே:—நான் என்ன பார்த்தேன்? ரசாயன சாஸ்திர ஆராய்ச்சிக் காரர்கள் பல

நூற்றுண்டாக எல்லாம் சோதித்துப் பார்த்து நூல்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். உலகத்தில் கண்ட தாதுக்கள் 92 என்றேன். உலகத்திலுள்ள சகல வஸ்துக்களும் இந்தத் தொண்ணூற்றிரண்டில் ஏதோ சில தாதுக்கள் கூடி ஆனதுதான். 92 தாதுக்களில் சுமார் 10 தாதுக்கள் வாயு ரூபிகள். இந்தப் பத்து வாயுக்களில் முக்கியமானவை அனலம், நீரகம், வளிரம், பையம். சில புணர்வாயுக்களும் உண்டு அதாவது வாயு ரூபமான புணர் பொருள்கள். கரியும் அனலமும் புணர்ந்து உண்டான கரியாமில வாயுவைப்பற்றி முந்தியே சொன்னேனல்லவா?

நீ:—சுவாசத்தில் வெளியேறும் வாயு தானே?

சே:—ஆமாம். கரியீரனலதை அல்லது கரியாமிலம் அந்த வாயுவின் பெயர்.

நீ:—கரியாமிலவாயு விஷந்தானே.

சே:—அப்படி ஒன்றுமில்லை, சுவாசத்திற்கு அது உதவாது. அனல வாயு தான் பிராணனைத் தாங்கும். அனலம் இல்லாத எந்த வாயுவும் சுவாசத்திற்குப் பயனில்லை. வயிற்றுக்குள் போனால் கரியாமில வாயு நம்மைக் கொல்லாது. சோடா தண்ணீர் குடிக்கிறார்களே, அதில் பொங்கும் வாயு கரியாமில வாயுதான். அது வயிற்றில் போய்க் கொஞ்சம் அலசிவிட்டு தூர் வாயுக்களைத் தள்ளிக் கொண்டு ஏப்பமாக வரும். கரியாமில வாயு வயிற்றுக்குள் சென்று வேலை செய்வதால் ஒன்றும் தீங்கில்லை. சுவாசத்திற்குத்தான் உதவாது. சோடா குடித்தால் யாரும் சாவதில்லை.

நீ:—சுவாசத்தில் வெளிப்படும் கரியாமிலமா சோடா தண்ணீரிலிருப்பதும்? ஒன்றும் வித்தியாசமே யில்லையா?

சே:—சுவாசத்தில் வெளிப்படும் வாயுவில் ஒரு பங்கு கரியாமிலவாயு. மீதி உள் சென்ற வளிரம், மாறுபடாமல் வெளிவரும். உடலினின்று வெளியேறும் சில மலப் பொருள்களும் கொஞ்சம் கலந்திருக்கும். சோடா நீரிலிருக்கும் கரியாமிலவாயு அதற்கென்று சுத்தமாகச் செய்யப்பட்டது.

நீ:—சோடா என்னத்திற்காகக் குடிக்கிறது?

சே:—உங்களுக்கும் எனக்கும் அது வேண்டியதே யில்லை.

(அடுத்த இதழில் முடியும்)



கர்வபங்கம்

ஆசிரியர்: சரத் சந்திர சட்டர்ஜி] [மொழிபெயர்ப்பு: ஆர். ஷண்முகசுந்தரம்

அத்தியாயம் 7.

"என் பேச்சைக் கேளு, மன்னி. அவர் காலில் விழுந்து ஒருதரம் மன்னிப்புக் கேட்டுக் கொள்."

"ஏன்? எதற்காக? என் தலையைத் துண்டாக வெட்டிப் போட்டாலும் நான் அப்படிச் செய்யமாட்டேன்."

"ஏன் செய்யமாட்டாய்? கணவன் காலைத் தொடுவதில் என்ன வெட்கம்? உன் குற்றத்தை ஒப்புக் கொள்ளா விட்டாலும் போகிறது. ஆனால் அவரை மனங் குளிரச் செய்வது எல்லாவற்றிலும் முக்கியமானதல்லவா?"

"முடியாது! என்னால் அது முடியாது! நான் ஆண்டவன் ஒருவனுக்கே அஞ்சி நடப்பேன். அவரிடத்தில் ஒரு குற்றமும் செய்யாத வரையில் நான் யாருக்கும் பயந்து நடக்கமாட்டேன்!"

விமலாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "மன்னி, இப்படி நீள நீளமாகப் பேசுவதற்கு எனக்குக் கூடத் தெரியும். இதெல்லாம் கவைக்கு உதவாது. நாம் கண்ணை மூடிக் கொள்வதால் உலகமே அஸ்தமன மடைந்துவிடாது! அண்ணா நிஜமாகவே உன்னிடம் வெறுப்புக் கொண்டிருக்கிறான்."

இந்துமதி உதாசீனத்துடன், "அது அவர் இஷ்டம்" என்றாள்.

விமலா மனதிற்குள்ளாகவே கொதிப்படைந்தாள். "அவர் இஷ்டம் என்பதெல்லாம் அழிந்துபோகும் அன்றைக்குத்தான் தெரியும். அண்ணா எவ்வளவு கோமளமானவனோ அவ்வளவு கடூரமானவனும் கூட. நீ அவனை ஒரு கோணத்திலிருந்து தான் பார்த்திருக்கிறாய். மற்றப் பக்கங்களைப் பார்க்கவில்லை."

"சரி, பார்க்கும்போது உனக்குத் தகவல் கொடுக்கிறேன்."

விமலா மேலே ஒன்றும் பேசவில்லை. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு பெருமூச்சு விட்டுக் கொண்டே மெதுவாக, "அது நிஜம். கணவனுடைய அன்பு 'மாறாமலே இருக்கும்' என்ற நம்பிக்கை உனக்கு இருக்கிறது. ஆனால் அண்ணா அந்த ரகத்து மனிதன் அல்ல. அவன் நோயுற்றிருந்தபோது நான் நன்கு அவனை உணர்ந்திருக்கிறேன். அவனுடைய இதயக் கதவு ஒருதரம் மூடுண்டதானால் பிறகு என்றென்றைக்கும் திறக்கவே திறக்காது" என்றாள்.

இந்து கம்பீரமாகவே, "திறக்காவிட்டால் வெளியிலேயே நிற்கிறேன். கதவு திறக்கட்டும் என்பதற்காக அவர் காலில் விழுந்து வணங்கமாட்டேன். அதற்காக உன்னையும் சிபார்சுக்கு அழைக்கமாட்டேன்!......என்ன இது? கோபித்துக் கொண்டு போகிறாயா?" என்றாள்.

விமலா திரும்பி நின்று, "கோபத்தோடு அல்ல மன்னி. துக்கத்தோடு போகிறேன். என்னுடைய தங்கையைவிட உன்னை நான் அதிகமாக நேசித்தேன். இதனால் எனக்குத் துக்கம் பொங்கிப் பீறிட்டுக் கொண்டு வருகிறது. அண்ணாகூட இப்படிச் சொல்வானா என்பதை நான் காதால் கேட்டிருக்கா விட்டால் நம்பக் கூடமாட்டேன்" என்றாள்.

இந்துமதி சிரித்துக் கொண்டு, "இந்தப் பெரிய பீடிகையை இனி எப்பொழுதும் அவரிடமிருந்து நீ கேட்கப் போவதில்லை" என்றாள்.

"பீடிகை விஷயத்தில் நீயும் ஒன்றும் குறைந்தவள் அல்ல, மன்னி. இனி அவர் அப்படிப் பேசமாட்டார் என்பது எனக்கும் தெரியும். ஒரு சங்கதியைப் பன்னிப் பன்னிச் சொல்கிற ஆசாமி அல்ல அவர்."

இந்து மறுபடியும் சிரித்துவிட்டு, "அது சரிதான். அதை விட இன்னொரு காரணத்தினால் எப்பொழுதும் அவர் கோபத்துடன் பேசத் துணியமாட்டார். என் அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. என் பெயருக்கு அப்பா பத்தாயிரம் ரூபாய்க்கு உயில் எழுதி வைத்திருக்கிறார். என்ன சொல்கிறாய், மன்னி? இனியும் கூடக் காலைப் பிடிக்க வேண்டுமா?" என்றாள்.

விமலாவின் முகம் மிகக் கடுமையாக இருண்டுவிட்டது. "மன்னி! இதற்கு முன் எப்பொழுதும் அவர் உன்னிடம் கோபமாக நடந்து கொண்டது கிடையாது. அவரை எந்த நிலைமையில் விட்டு நீ மிதினப்பூர் சென்றாய் என்பது எனக்கு ஒருத்திக்குத்தான் தெரியும். அதற்காக அவர் உன்னை ஒரு நாளும் குறை கூறியது கிடையாது. சிரித்த முகத்துடன் என்னிடம் கூட எல்லாவற்றையும் சொல்லாமல் மறைத்து வந்தார். இவைகளெல்லாம் உன்னுடைய பணத்தை உத்தேசித்தா? மன்னி, சிரத்தை இல்லாத காதல் நிலைப்பதில்லை. நீ எந்த வஸ்துவைப் பொருட்படுத்தாமல் இழந்து கொண்டிருக்கிறாயோ, அதைப் பூரணமாக இழந்த பிறகேதான் உன் மனதில் தைக்கும். ஆனால் என்னுடைய அண்ணா அவ்வளவு அற்பமானவன் அல்ல என்பதை மனதில் வைத்துக் கொள்ளு. இப்போது நேரமில்லை, நாழியாகி விட்டது. நான் போகிறேன். நாளை மறு நாள் ஓய்வு கிடைக்கிறபோது, வீட்டுக்கு வா" என்றாள்.

"சரி" என்று கூறிவிட்டு இந்துமதி வெளிக் கதவு வரை பின்னால் வந்தாள். அவள் பின்னால் வருகிற காலடி ஓசை கேட்டும், கேட்காதவள் போல் நடந்தாள் விமலா.

வண்டியில் ஏறிய பிறகு கூட இருவரும் அளவளாவிக் கொள்வார்கள். இன்று வண்டியில் உட்கார்ந்ததும், விமலா வண்டிக் கதவை மூடி விட்டாள்.

வீட்டிற்குள் வந்ததும் இந்துமதி குழந்தையை மார்போடு அணைத்துப் படுத்துக் கொண்டாள்.

விமலா சென்று விட்டாள். ஆனாலும் அவளுடைய கடுமையான பேச்சுக்கள் ரீங்காரம் செய்து கொண்டே இருந்தன. அதில் எவ்வளவு கடுமையிருந்தது என்பது இப்போதுதான் இந்துவுக்குத் தெரிய வந்தது. அந்தக் கோபத்தால் இவள் உள்ளமே கனலாகக் காய்ந்தது. அந்த அனல் ஓட்டத்துக்கு அடியில் மண்டிக் கிடந்த குப்பை கூளம், செத்தை சருகு எல்லாவற்றையும் இவள் கனவில்கூடக் கருதிப் பார்க்கவில்லை.

திடீரென உள்ளத்துக் குள்ளிருந்து யாரோ கேட்பது போலிருந்தது. "இந்துமதியின் கதி என்ன? உள்ள படியே கணவன் கைவிட்டு விட்டால்! நீ அருகில் சென்று உட்காரு. ஆனால் அவர் வெறுப்புடன் எழுந்து சென்று விட்டால்?"

அவளுடைய தேகத்தில் மயிர்க் கூச்செறிந்தது. "என்னம்மா?" என்று கமலா கேட்டாள்.

இந்து அவளை இறுகத் தழுவி முத்தமிட்டு, "உன்னுடைய அத்தை என்னவெல்லாம் பயங் காட்டுகிறாள் தெரியுமா?" என்றாள்.

"என்ன பயம் அம்மா?"

"ஒன்றுமில்லை கண்ணே! எல்லாம் விளையாட்டுப் பேச்சுத்தான். வெறும் விளையாட்டே தான்! போ அம்மா! போய், அப்பா என்ன செய்கிறார் என்று பார்த்து விட்டு வா."

அப்பாவிடம் குழந்தை ஓட்டமாக ஓடியது.

இந்த இரண்டு நாளாகத் தம்பதிகளுக்குள் பேச்சு வார்த்தை இல்லை. கமலா திரும்பி வந்து, "அப்பா பேசாமே தூங்கறார் அம்மா" என்றாள்.

"பேசாமலா? சரி, நீ இங்கேயே தூங்கு அம்மா. நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு இந்து எழுந்து போனாள். கதவருகே போய் எட்டிப் பார்த்தாள். குழந்தை சொன்னது சரிதான். சோபாவில் மேலே பார்த்தபடியே அவர் படுத்துக் கொண்டிருந்தார். இன்று அறைக்குள் பிரவேசிப்பதற்கு அவ



"ஏன் தலை வலிக்கிறது, அப்பா?"

னுக்குத் துணிவு உண்டாகவில்லை. இது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"கமலா!"

"என்ன அம்மா?"

"உங்க அப்பாவுக்கு ரொம்பத் தலையை வலிக்கும் போலிருக்கிறது. போய்க் கொஞ்சம் தலையைப் பிடித்து விடு அம்மா" என்றாள்.

பெண்ணை அனுப்பிவிட்டு இந்து மறைவில் நின்றுகொண்டு உற்சாகமாக இருவரும் சம்பாஷிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஏன் தலை வலிக்கிறது, அப்பா?"

"இல்லையே? வலி இல்லையே அம்மா!"

"ரொம்பத் தலை வலிக்கிறதென்று அம்மா சொன்னாளே?"

அப்பா சற்று நேரம் குழந்தையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். கொஞ்சம் பொறுத்து, "உன் அம்மாவுக்குத் தெரியாது" என்றான்.

அறைக் கதவைத் திறந்துகொண்டு ஒன்றும் தெரியாதவள்போல் இந்து உள்ளே நுழைந்தாள். மேஜை மீதிருந்த விளக்கை சற்று மட்டுப்படுத்தி விட்டு, "பலவீனமான உடம்போடு இப்படி உழைத்தால் தாங்குமா? போ கமலா, மேலே மருந்துப்புட்டி இருக்கிறது. எடுத்துக்கொண்டு வா" என்றாள்.

பெண்ணை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, தலைப்புறமாகப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் இந்து. தலையைக் கோதி விட்டுக் கொண்டே, "நெருப்பாகக் கொதிக்கிறது" என்றாள்.

நரேந்திரன் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டிருந்தான். ஒன்றும் பேசவில்லை. இந்து மௌனமாகத் தலையைக் கோதி விட்டுக் கொண்டே அன்புடன், "மார்பு வலி இன்று எப்படி இருக்கிறது?" என்றாள்.

"அப்படியேதான் இருக்கிறது."

"இரண்டு நாளாகக் கோபத்தில் மருந்து குடிக்கவில்லையே? வலி அதிகரித்து விட்டால் என்ன செய்வது?"

நரேந்திரன் மெதுவாக, "எனக்கு உடம்புக்கு சரியில்லை. கொஞ்சம் அமைதியாக இருக்க விரும்புகிறேன், இந்து" என்றான்.

அந்தக் கேள்விக்கு இந்தப் பதில் தானா!

இந்துமதி சடக்கென மின்னல்போல் எழுந்து நின்றாள்.

"சரி, படுத்துக் கொள்ளுங்கள். உங்கள் அறைக்குள் நுழைந்தது என் குற்றம்" என்றாள்.

பிறகு கதவருகில் வந்து நின்று கொண்டு, "நீங்கள் இறப்பதால் என்னைத் தண்டிக்க முடியாது. இந்தக் கடிதத்தைப் படித்துப் பாருங்கள். அப்பா என் பெயருக்குப் பத்தாயிரம் ரூபாய் உயில் எழுதி வைத்திருக்கிறார்" என்று கூறி, தன் இடது கையில் இருந்த கடிதத்தை வீசி யெறிந்து விட்டு, வெளியே வந்தாள். பின்பு முந்தானையால் பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தன் அறைக்குள் வந்து கதவை இழுத்துச் சாத்திப் படுத்துக் கொண்டாள். எதையும் பொறுத்துக் கொள்ளவோ அல்லது தோல்வியை ஒப்புக் கொள்வதோ அவளால் முடிகிற காரியம் அல்ல. பெரும்பாலான பெண்களாலேயே முடிவதில்லை! இன்றைக்கு அவள் என்னவெல்லாமோ எண்ணியிருந்த உயர் எண்ணங்கள் கூட இதனால் தடைப்பட்டுப் போச்சு! அவள் என்ன செய்ய வந்தாள்? என்ன செய்து விட்டுப் போனாள்?


(தொடரும்)

வாஸ்தவந்தான்!



தாத்தா:—அடே பயலே, நீ பொய் சொல்லவே கூடாது. என் வாயாலே நான் பொய் சொன்னதே கிடையாது. தெரியுமா?

பையன்:—ஆமாம், அது வாஸ்தவந்தான். நீங்கள் மூக்காலே தானே பேசுகிறீர்கள்?



சூரியனை நோக்கி . . .

தினசரி அருணோதயத்தில் ஏராளமான விமானங்கள் இந்திய விமான நிலையங்களிலிருந்து கிளம்பி கிழக்கு நோக்கிச் செல்கின்றன. ஏன் தெரியுமா? ஜப்பானியரின் "உதய சூரிய"க் கொடி இந்தியாவில் நாட்டப்படாமலிருப்பதற்காகத்தான். நமது தினசரி உபயோகத்திற்காக நாம் வாங்கும் பல் வேறு சாமான்களும்கூட விமான உற்பத்திக்கும், விமானிகளின் பயிற்சிக்கும் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. ஆகவே இச் சாமான்களை நாம் குறைத்து வாங்க வாங்க நமது பாதுகாப்பாளர்களான நமது படைகளுக்கு அவை அதிகமாகக் கிடைக்கும். இதே மாதிரி நமது செலவுகளைக் குறைக்கக் குறைக்க தேசத்திற்குக் கடன் கொடுத்துதவுவதற்கு அதிகப்பணம் மீதப்படும்.

நாம் வேலை செய்கையிலும்சரி, உறங்குகையிலும்சரி, நமது வீரவிமானிகள் அல்லும் பகலும் ஆகாசத்திலிருந்து காவல் புரிந்துகொண்டிருக்கின்றனர். அதுபோல் நாமும் நமது பங்குக்கு ஓரளவு யுத்தசேவைபுரியவேண்டாமா? அதற்கு நமது ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, அதனால் மீதப்படும் பணத்தை தேசத்திற்கு கடன் கொடுத்து உதவுவோமாக.

டிபென்ஸ் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகள்

...அல்லது டிபென்ஸ் லோன்களை த்தவிர

வேறெதையும் வாங்குமுன் — சற்றே யோசியுங்கள்

ஸர்ட்டிபிகேட்டுகள் உங்கள் தபாலாபீஸில் கிடைக்கும் ரூ. 10-க்கு பத்துவருடத்தில் 3-9-0 லாபம் கிடைக்கிறது.

CPU-28-TM

வெஜிடபில் கதம்ப ஊறுகாய்



★

வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கீரைத்தண்டு, வாழைத்தண்டு, கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு - சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது - முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜாமிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர். உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்.

★

டி. எஸ். ஆர். அண்டு கோ.,

வாஸனை திரவிய வியாபாரிகள்,

கும்பகோணம்.

மதராஸ் சோல் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

ஸ்டாக்கிஸ்டுகள் :

சுவாமிநாதய்யர் அண்டு சன்ஸ்.,

புதுக்கோட்டை

சாரதா ஸ்டோர்ஸ்

காரைக்குடி

மெஸர்ஸ். சண்டிகா அண்டு கோ.,

முதல் அக்ரஹாரம், சேலம்

குழந்தை வளர்ப்பு

[ஸ்ரீமதி சுந்தரம்மாள்]

2

“சில சமயங்களில் சில குழந்தைகள் இரண்டு மூன்று ஆண்டுக்குமேல் ஐந்து வயது வரையில், கட்டுக்கு உட்படாமல் அழத் தொடங்குவார்கள். அச்சமயங்களில் நாம் கோபிக்கவே கூடாது. புத்தியுள்ளவர்களிடம் காரணங்களைச் சொல்லுவதுபோல, குழந்தைகளிடம் புரியும்படி அழகாய் எடுத்துக் கூறி, குழந்தையை மெச்சிச் சில வார்த்தைகளைச் சொன்னால் உடனே அவர்கள் மாறுவது நமக்கு ஆச்சரியமாகவே யிருக்கும். இதுதான் என் அநுபவம். பெரியவர்களைவிடக் குழந்தைகளுக்கே நியாயம் அதிகம் தெரிகிறது என்றுகூட எனக்குத் தோன்றி யிருக்கிறது. எல்லாவற்றிலும் அவர்களுக்கு நாம் ஒரு உயர்ந்த ஸ்தானம் கொடுத்து நம்முடன் கலந்து கொண்டால் குழந்தைகளுக்கு இருக்கும் திருப்தி யாருக்குமே யிராது.

என் குழந்தை மிகவும் சிறுவனா யிருக்கும் பொழுது என் நண்பர் ஒருவர் வந்திருந்தார். இவன் கையில் ‘சாக்லெட்’ துண்டு ஒன்று வைத்துக் கொண்டிருந்தான். அதை அவர் பார்த்து ‘உனக்கு சாக்லெட் ரொம்பப் பிடிக்குமோ?’ என்றார். ‘ம்-ரொம்ப புக்கும்’ —(‘ரொம்பப் பிடிக்கும்’ என்று அர்த்தம்!) என்றான். ‘எனக்கு கொப்பயோ?’ என்று கை நீட்டினார். ‘ம்-இந்தா—’ என்று எச்சில் செய்ததைக் கொடுக்கப் போனான்! அவர் ஆச்சரியப்பட்டார். பிறகு ‘இது வேண்டாம். நிறையக் கொடுப்பியா?’ என்றார். ‘ஓ!’ வென்று ஓடிப்போய் டப்பாவுடன் கொண்டு வந்து விட்டான்! ‘உனக்கு வேண்டாமா?’ என்று அவர் கேட்டபொழுது ‘அப்பா கொப்பா!’ என்றான். அந்த நண்பர் இன்னமும் அதைச் சொல்லி ஆச்சரியப் படுவார்!

தனக்குப் பிடிக்கும் பண்டத்தைப் பிறருக்குக் கொடுத்துவிட்டால் தனக்கு இராதே என்ற எண்ணம் குழந்தை மனதில் விழாமல் பார்த்துக் கொள்வது அவசியம். தனக்கு எப்பொழுதும் அவை கிடைக்கும் என்ற நம்பிக்கை வேண்டும்.

குழந்தைகளுக்குக் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ள ஆவல் அதிகம். அவர்கள் கேட்கும் சலிக்காத கேள்விகளுக்கு நாம் கட்டாயம் பதில் சொல்லத்தான் வேண்டும். தெரியாத விஷயங்களைப் பற்றிச் சமயோசிதப் பொய் சொல்லிக் குழந்தையைத் திருப்தி செய்யக்கூடாது. தெரியாத விஷயத்தைத் தெரியாது என்று சொல்லி விடுவதே நலம். இல்லாவிடில், குழந்தையின் தூய மனத்தைக் களங்கப்படுத்துவதாகும். “குழந்தைக் கேள்விகளுக்கு பதில்” என்றே ஆங்கிலத்தில் அநேக புஸ்தகங்கள் இருக்கின்றன.

சில சமயங்களில் குழந்தை ஏதாவது இச்சித்து நாம் எவ்வளவு சொன்னாலும் கேட்காமல் அழுது தன் காரியத்தை ஜெயிக்க முயலும். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. அழுதால் காரியம் முடியும் என்ற நம்பிக்கையையே மனதில் வளரவிடக் கூடாது. இரண்டொரு தடவை கவனியாமல் பாராமுகமாய் விட்டு விட்டோமானால் இயற்கையாகவே அந்த வழக்கத்தைப் பின்பற்றாது. அப்படிச் செய்யாமல் அந்த அழுகைக்கு இணங்கி உட்பட்டால் போதும் — எப்பொழுதும் அந்த விசையை வைத்துக் கொண்டு குழந்தை நம்மை ஜயிக்கப் பார்க்கும்.

இதுவரை குழந்தைகளின் மன ஆரோக்யத்தைப் பற்றிப் பேசினோம். இப்பொழுது சற்று தேகாரோக்யத்தைக் கவனிப்போம். சின்ன வயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஆரோக்யத்தின் முக்கியத்தைக் காரணங்களோடு விளக்கிக் காட்டி வளர்க்க வேண்டும். சுத்தமான இடம், சுத்தமான உடுப்பு, உணவு, சுத்தமான சகவாசம் இவைகளில் நாம் கண்டிப்பா யிருக்க வேண்டும். மூன்று வயதுக்கு மேல் ஐந்து வயதுக்குள் எல்லாம் புரிந்து கொள்ளச் சக்தி வந்து விடுகிறதல்லவா? அப்பொழுதுதான் நம் கடமை முக்கியமாகிறது.

அழுக்குக் கைகளுடன் சாப்பிடவிடக் கூடாது. தெருவில் விற்கும் தின்பண்டங்



தானே செய்து கொள்ளப் பழக்கவேண்டும்....

களையோ, வேறு கண்டதுகளையோ வாயில் போட்டுக் கொள்ளக் கூடாது என்பதற்குக் காரணங்களை விளக்கி, அதனால் வியாதி எப்படி வரும் என்பதைக் குழந்தைகளுக்குப் புரியுமாறும், பயமுறுத்தாமலும் தெரியப் படுத்தவேண்டும். சாதாரணமாய் வீட்டைத் தவிர எங்கும், யார் கொடுப்பதையும் வாங்கிச் சாப்பிடக் கூடாதென்று என் பையனுக்குச் சொல்லியிருந்தேன். என் கருத்து என்ன வென்றால், அசுத்தமான இடங்களிலிருந்து ஈ மொய்த்துள்ள பெப்பரமிட்டு, பிஸ்கோத்து முதலிய தின்பண்டங்களை வாங்கித் தின்னக் கூடாதென்பதுதான்.


ஆனால் என் போதனை என்னையே தர்ம சங்கடத்தில் கொண்டு வந்து விட்டது ஒரு சமயம்! ஒரு தடவை என் குழந்தையை ஒரு ஆப்த நண்பர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போயிருந்தபொழுது அந்தம்மாள் பிரியத்துடன் ஒரு பிஸ்கோத் கொடுத்தாள். குழந்தை அதை வாங்கி உடனேயே தோட்டத்தில் எறிந்து விட்டான்! அதை அவர் கவனித்து அவனை 'ஏன் எறிந்து விட்டாய்? பிடிக்காதா?' என்று கேட்டதற்கு, 'அம்மாதான் யாராவது கண்ட இடத்தில் கொடுத்தால், தின்னாதே, எறிந்து விடு என்று சொன்னான்' என்று என்னைச் சந்தியில் இழுத்து விட்டான்!

கேட்கவேணுமா அந்தம்மாளுக்கு வந்த கோபத்தை? 'நீ தான் அதிசயமாப் பிள்ளை பெற்று விட்டாயோ, பொன்னான கையில் குடுத்தால் இப்படிச் சொல்லி வைத்திருக் கிறாயே?' என்றெல்லாம் என்னைப் பேச ஆரம்பித்து விட்டார்! அவர் கோபம் தணிந்த வுடன் நான் என் கருத்தை வெளியிட்டு, "குழந்தைக்குப் பகுத்தறிவு ஏற்பட நாளாக வில்லை. கண்டதை யெல்லாம் சாப்பிட்டுக் குழந்தைகள் அவஸ்தைப் படுவதைப் பார்த் திருந்தபடியால் அப்படி நேராமல் தடுப்பதற் காகப் பொதுவாகச் சொன்ன விஷயம்" என்று கூறி, மனஸ்தாபத்திற்கு இடம் கொடுக்காமல் என்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அவரும் நல்லவரானபடி யால் அதைப்பற்றி சந்தோஷித்தார்!


மேற்படி பழக்கத்தினால் என் குழந்தை பள்ளிக்கூட வாசலில் சகஜமாய் விற்கும் தின்பண்டங்களையோ 'ஐஸ் ப்ரூட்' அல்லது வேறு பதார்த்தங்களையோ வாங்கித் தின்னவே மாட்டான். மற்றவர்கள் சாப் பிட்டால்கூட இப்பொழுது அவர்களைத் தடுத்துப் புத்தி சொல்லுகிறான்!

சின்ன வயதிலேயே குழந்தைகளுக்குச் சரியான வாடிக்கைகள் படியவைக்கவேண்டும். ஒழுங்கானபடி நேரத்தை வகுத்துக்கொண்டு அதற்கேற்றாப்போல் ஆகாரம், கல்வி, விளை யாட்டு எல்லாவற்றையும் கிரமச் செய்யப் பழக்கவேண்டும். நல்ல சகவாசம் மிகவும் முக்கியம். வெளியில் நல்ல காற்றில் விளை யாடுவது தேக சௌக்கியத்திற்கு ரொம்ப அவசியம். மற்றவர்களுடன் கூடி விளையாடும் போது தோல்வியினால் பொறுமைப்படாம லிருத்தல், எல்லோருடனும் சகோதர பாவத் துடனும் ஒற்றுமையுடனும் இருப்பது இதெல் லாம் தெரிந்து கொள்வதைப் பற்றி நாம் கவனிக்க வேண்டும்.

தன் சொந்தக் காரியங்களைப் பிறர் உதவி யின்றிச் செய்யக் கூடியவைகளைத் தானே செய்து கொள்ளப் பழக்கவேண்டும். சுமார் ஐந்து வயதுக்குள்ளேயே தானே உடுப்புப் போட்டுக் கொள்வது, சாப்பிடுவது எல்லாம் சுமாராய்த் தெரிந்து பழகிக் கொள்ளவேண் டும். ஆனால் முழுவதையும் குழந்தை கையில் விட்டு விடக்கூடாது. ஆரம்பத்தில் சிரமப்படு மாதலால் நாம் அடிக்கடி கவனித்துக்கொண்டு நாளடைவில் நன்றாய்ப் பழக்கி விடலாம்.



கண்ணீர் விடும்படி கல்வி கற்பிக்கக் கூடாது...



கர்வத்தோடு நடப்பது வருந்தத்தக்கது ......


உடுப்புகளை வைக்க உதவியாகச் சிறிய அலமாரிகளும், தாழ்வாக எட்டக்கூடிய இடத்தில் ஆணிகளோ, கொடிகளோ வைத்து அவ்வப்பொழுது கழற்றி வைக்கப் பழக்க வேண்டும். அப்பொழுதுதான் வீட்டில் கண்ட இடங்களெல்லாம் துணியைப் போடமாட்டார்கள். அவர்களுக்குப் பிரத்தியேகமாய் ஒரு அறையைக் கொடுத்தோமானால் அதைச் சுத்தமாகவும், தன் சாமான்களை ஒழுங்காயும் வைத்துக் கொண்டிருப்பார்கள். சாமான்களைச் சரிவர வைக்கா விட்டால் கோபிக்கவேண்டாம். குழந்தையையே சாமான்களை எடுத்துக் கொடுக்கச் சொல்லி, நாமே ஒழுங்காய் வைத்தோமானால் அதுவாகவே பிறகு வைத்துக் கொள்ளும். இதுவும் என் அநுபவம்தான்.

வீட்டிற்கு யாராவது புது மனிதர்கள் வந்தால் நடந்து கொள்ளும் விதம் கற்றுக் கொடுக்கவேண்டும். வந்தவர்கள் கூப்பிட்டால் ஓடி ஒளிந்து கொள்ளாமல் கிட்டே போய் தைரியமாய்ப் பேசப் பழக்கவேண்டும். நாமும் குழந்தைகளை வெளியே அழைத்துக் கொண்டு போய் அங்கங்கே நடந்து கொள்ள வேண்டிய மாதிரியைக் கற்பிக்கவேண்டும். கடை கண்ணிகளுக்கு அழைத்துச் சென்று பார்க்கும் சாமான்களையெல்லாம் வாங்கிக் கொடுக்கச் சொல்லி ரோதனை செய்யாமலிருப்பதற்குப் பழக்கம் செய்யவேண்டும். இந்தப் பழக்கம் நம்முடைய உறுதியில்தான் இருக்கிறது. அப்பொழுதுதான் எல்லாவற்றையும் கேட்காமல், நாம் ஏதாவது வாங்கிக் கொடுத்தால் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளும்!

ஐந்து வயதுவரை வீட்டில் தாய்மார்கள் தம்மாலியன்ற வரையில் குழந்தைகளுக்கு அசட்டுச் செல்லம் கொடுத்துக் கெடுக்காமல் வளர்த்தார்களானால், பிறகு, பள்ளிக்கூடம் சென்றால் நல்ல வாடிக்கைகளுடன் படிப்பும் விளையாட்டாகவே வந்துவிடும். உபாத்தியாயர்களுக்கும் தொந்தரவு கொடுக்காமல் சந்தோஷமாய்க் கற்றுக் கொள்வார்கள். இப்பொழுது அநேக பள்ளிக்கூடங்கள் சிறுவர் மனப்பான்மையை அறிந்து பாடம் போதிக்கும் முறையை அநுசரித்து வருகின்றன. அந்த ஸ்தாபனங்களுக்கு அனுப்பிக் கல்வியை இளம் வயதிலேயே கற்பிக்க வேண்டும். சில குழந்தைகளுக்குச் சிற்சில விஷயங்களில் தான் மனது செல்லும். அதன் போக்கை அறிந்து கற்பிக்க வேண்டுமேயன்றி இஷ்டமில்லாததில் கட்டாயம் செய்யக் கூடாது. கண்ணீர் விடும்படி கல்வி கற்பிக்கக் கூடாது.

சில குழந்தைகள் மற்றவர்களை விட அறிவு குறைவாகக் காணப்படலாம். ஆனாலும் குழந்தைகளின் குறையைக் குறித்துக் காட்டி அழ விடவே கூடாது. மற்றவர்களை விட அவர்கள் தாழ்வு என்பதாகத் தோன்றச் செய்யாமலிருப்பது ரொம்பவும் அவசியம். மனப்பான்மையை அறிந்து பயிற்சி கொடுத்தால், வெகு சீக்கிரத்தில் மந்தமாகக் காணப்படும் குழந்தை கூடப் புத்திசாலிக் குழந்தையாக நாளடைவில் விளங்கும்.

சிறு வயதிலேயே வீண் கர்வம், உயர்வு தாழ்வு என்ற பேதமெல்லாம் பாராட்டாமலிருப்பதற்குக் கற்பிக்கவேண்டும். அநேக செல்வந்தர்களின் குழந்தைகள் பிறவியிலிருந்தே இந்த வேற்றுமையை வளர்த்து மற்றக் குழந்தைகளை ஏளனம் செய்வதும், கர்வத்தோடு நடப்பதும் மிகவும் வருந்தத்தக்கது. எனக்குத் தெரிந்து ஒரு பெரிய தனவானின் குழந்தை தன் தகப்பனாரின் அதிகார அகத்தினாலும், செல்வச் செருக்கினாலும் மற்றக் குழந்தைகளை அடிப்பதும் நிந்திப்பதும் வழக்கமாயிருக்கிறது. உபாத்திமார்களையும் சட்டை செய்வதில்லை. கடைசியில்



இந்த மாதிரி கல்வி கற்பிக்கவேண்டும்............

ஒரு நல்ல பள்ளிக்கூடத்திலிருந்து அவன் விலக்கப்பட்டான்!

குழந்தைகள் ஏன் கதை கேட்பதில் அதிகப் பிரியம் வைத்திருக்கிறார்களென்று எப்பொழுதாவது யோசித்திருக்கிறாயா?" என்று இவ்வளவு தூரம் சொன்ன பிறகு கோமளம் சௌந்திரத்தைக் கேட்டாள்.


"குழந்தைகள் கதை கேட்க விரும்புவதில் என்ன ஆச்சரியம்? பாட்டிமார்களிலிருந்து குழந்தை வரையில் எல்லோருக்கும் தான் கதை கேட்கச் சுவாரஸ்யமாயிருக்கிறது. அதில் எனக்கு ஒன்றும் விசேஷமோ, ஆச்சரியமோ தோன்ற வில்லையே!" என்றாள் சௌந்திரம்.

"இல்லை—அப்படியில்லை. கடவுள் குழந்தைகளுக்குத்தான் அந்த ஆவலை அதிகமாய் வைத்திருக்கிறார். கதைகள் மூலமாய்த்தான் நாம் ரொம்ப நல்ல போதனைகளைச் செய்யலாம். விசேஷமான கதைகளைச் சொல்வதினால் குழந்தைகளின் மனம் சுலுவாய்ப் பதமாகின்றது.

பஞ்ச தந்திரத்தின் கதைகளுக்குச் சமானம் வேறு கிடையாது. எல்லாம் மிருகங்களையும் ஜந்துக்களையும் பற்றிச் சொல்லுவது போலவே பெரிய நீதி நெறிகள் அடங்கிய கதைகள். குழந்தைகளுக்குத் தெரிவிப்பது மிகவும் அவசியம். அதைத் தவிர ஆங்கிலத்தில் ஈஸாப் கதைகள் முதலிய அநேக குழந்தைக் கதைப் புத்தகங்கள் இருக்கின்றன. இவைகளை வாசித்துக் குழந்தைகளுக்குச் சொன்னால் அவாவுடன் கேட்டுச் சந்தோஷித்துப் பயனும் அடைவார்கள்.

குழந்தைகளின் மனப்பான்மையை அறிந்து கொண்டு வளர்த்தோமானால் அதைத் தவிர சந்தோஷம் வேறில்லை என்றே கூறுவேன்!" என்றாள் கோமளம்.

"கோமளம்! நீ சொன்னதெல்லாம் மிகவும் நன்றாயிருந்தது. கட்டாயம் இதைப் பற்றி சரளாவுக்கும், மற்றத் தாய்மார்களுக்கும் நான் எடுத்துக் கூறுகிறேன். ஆனால், குழந்தை வளர்ப்பு ஒரு பெரிய விஷயம் என்று சொன்னாயே? ஏன் இந்த விஷயத்தைப் பற்றி ஆங்கிலத்திலுள்ள புத்தகங்களைப் போல் நீயும் தமிழில் ஒரு புத்தகமே எழுதக் கூடாது?" என்றாள் சௌந்திரம்.



அப்பாவிகள்!

[து. ரா.]

ரயில் வண்டி "கூ!—" என்று கத்தி விட்டது. அது உடனே புறப்பட்டுக் கூட இருக்கும். ஆனால் கார்டுக்கும் ஸ்டேஷன் மாஸ்டருக்கும் ஸ்வாரஸ்யமான சம்பாஷணை ஒன்று நடந்து கொண்டிருந்ததால் இரண்டு நிமிஷம் தாமதமாயிற்று.

"தெரியும், தெரியும்! வாலை ஒட்ட அறுத்து விடுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே கார்டு ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குள்ளிருந்து வெளியே வந்து கொடி காண்பித்தார். இரண்டு பேருக்கும் என்னமோ சண்டை நடக்கிறது என்று நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு, வண்டியிலிருந்து வெளியே தலையை நீட்டிப் பார்த்தவர்கள் கார்டின் கையில் ஒரு சின்ன குச்சு நாய்க்குட்டி இருந்ததைப் பார்த்து ஏமாந்துபோய்த் தலையை உள்ளே இழுத்துக் கொண்டார்கள்.

அதே சமயத்தில், "நாசமாய்ப் போக!" என்று அந்த ரயில் வண்டியைச் சபித்துக்கொண்டே வைத்தா டிக்கட்டை வாங்கிக்கொண்டு, "ஓடு! ஓடு!" என்று சாமான் தூக்கிக்கொண்டு வந்தவனைத் துரிதப்படுத்திக் கொண்டே ஓடி வந்தான். தினம் ஒன்பதே கால் மணிக்கு வரும் எட்டு மணி வண்டி இன்று ஒன்பதடித்துப் பத்து நிமிஷத்துக்கே வந்து விட்டதால் தான் அவனுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

கூலிக்காரன் ஜன்னல் வழியாய்ப் பெட்டியையும் படுக்கையையும் ஒரு வண்டிக்குள் போட்டுவிட்டு, "சாமி! ஏறுங்க, ஏறுங்க!" என்று கத்தின சமயத்தில் வண்டி புறப்பட்டு விட்டது. வைத்தா ஓடுகிற ரயிலில் தொத்திக் கொண்டான். ஆனால் இந்தக் கதவு ஏன் திறக்க மாட்டேன் என்கிறது? வண்டிக்குள், ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருக்கும் வாண்டுப் பயல் ஏன் இப்படி சிரிப்பை அடக்க முடியாமல் அவஸ்தைப்படுகிறான்?

வைத்தா கதவைப் பலமாகப் பிடித்து ஆட்டினபோது உள்ளேயிருந்து உச்சிக் குடுமியுடன் கூடிய ஒரு தலை வெளியே வந்து அவனை முறைத்துப் பார்த்தது. "ஏன் ஓய்! இங்கே இடம் எங்கே இருக்கிறது என்று உள்ளே வரப் பார்க்கிறீர்?" என்று கேட்டது.

"இந்தக் கதவு பூட்டியிருக்கிறதா என்ன? இதைக் கொஞ்சம் திறந்து விடுமே" என்றான் வைத்தா.


"இங்கே சாவி யாரிடம் இருக்கிறது?" என்று கையை விரித்து விட்டு அந்த மனிதர், "சிலுசிலு என்று காற்றடிக்கிறதே; மழைத் தூறல் போடுகிறதா என்ன பாருமே" என்றார்.

மழை பெய்கிறதா என்று வைத்தா கையை நீட்டிப் பார்க்கவில்லை. கோபத்தோடு, "இந்தக் கதவை யார் பூட்டினார்கள்?" என்றுதான் கேட்டான்.

அப்போது, "அதுவே பூட்டிண்டுடுத்து மாமா" என்று சொல்லி விட்டு வாண்டுப் பயல் தன் காலடியில் கிடந்த வைத்தாவின் சாமான்களைப் பார்த்துச் சிரித்தான். இதைக் கேட்டதும், அந்த பெஞ்சியின் இன்னொரு கோடியில் உட்கார்ந்திருந்த பதினைந்து வயதுப் பெண்ணுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. "கிக்—கிக்—கிக்" என்று திணறிக் கொண்டு அவள் ஜன்னலுக்கு வெளியே முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

வைத்தா அவனை எரித்து விடுவது போல் ஒரு பார்வை பார்த்து விட்டு, 'உம்'மென்று ஒரு மூச்சுப் பிடித்துத் தன் சாமான் போன வழியே தானும் ஜன்னல் வழியாய் உள்ளே குதித்தான்.

எட்டே பேர் உட்காரக்கூடிய அந்தச் சின்ன வண்டியில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல் தோன்றிற்று. உச்சிக் குடுமிக்காரரும் அந்த வாண்டுப் பயலும் இந்தண்டைப் பக்கம் ஜன்னலருகில் எதிர் எதிராக உட்கார்ந்திருந்தார்கள். வாண்டுப் பயல் உட்கார்ந்திருந்த பெஞ்சியின் இன்னொரு கோடியில் நாற்பது வயது ஸ்திரீ ஒருத்தியும், அவள் பக்கத்தில், எதையோ நினைத்து நினைத்து இன்னும் சிரித்துக்கொண்டே இருந்த அந்தப் பதினைந்து வயதுப் பெண்ணும் இருந்தனர். இவர்களுக்கு நடுவில் ஓர் உருவம் தலையிலிருந்து கால் வரையில் பச்சைக் கம்பளியால் போர்த்திக்கொண்டு படுத்திருந்தது. எதிர்



எதிர் பெஞ்சியில் உச்சிக் குடுமிக்காரர் படுக்கையை நீளமாகப் போட்டுக் கொண்டு ......

பெஞ்சியில் உச்சிக் குடுமிக்காரர் படுக்கையை நீளமாக விரித்துப் போட்டுக் கொண்டு அதன்மேல் காலை சப்பளங் கூட்டிக்கொண்டு கம்பீரமாய் அமர்ந்திருந்தார். இன்னொரு கோடியில், பல்லுப் போன கிழவர் ஒருவர், அது வரையில் நடந்த தொன்றுமே தமக்குத் தெரியாதவர்போல், என்னவோ மந்திரத்தை வாய்க்குள் முணுமுணுத்தபடி உட்கார்ந்திருந்தார்.

வைத்தா, ஒவ்வொருவர் முகத்தையும் இரண்டு நிமிஷம் பார்த்து விட்டுக் கடைசியில், படுத்திருந்த உருவத்தின் காலைத் தொட்டு, "ஸார்! காலைக் கொஞ்சம் மடக்கிக் கொள்கிறீரா, உட்கார்ந்து கொள்கிறேன்?" என்றான்.

"ஸார்" பச்சைக் கம்பளியை விலக்கிக் கொண்டு அவனை முழித்துப் பார்த்தார். அவர், தலை நரைத்த ஒரு பாட்டியம்மாளாக இருந்ததைக் கண்டதும் வைத்தா திடுக்கிட்டுப் போனான்.

"இந்த வண்டியில் இடம் இல்லை என்று சொன்னேனே இல்லையோ?" என்று ஆறுதல் வார்த்தை சொன்னார் உச்சிக் குடுமிக்காரர்.

ஜன்னல் அருகில் உட்கார்ந்திருந்த பெண்ணுக்கு மறுபடி "சிக்—சிக்—சிக்" என்று கேவிக் கொண்டே போயிற்று.

வைத்தா அவனைத் திரு திரு என்று இன்னொரு பார்வை பார்த்து விட்டுப் படுக்கையில் காலியாக இருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

"ஸார்! பையன் படுத்துக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் படுக்கை போட்டிருக்கிறேன்!" என்றார் அந்த மனிதர்.

"பேஷாய்ப் படுத்துக் கொள்ளட்டுமே, நான் அந்த இடத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறேன்."

"வேண்டாம்பா. நான் இங்கேயே உக்காந்துண்டு வேடிக்கை பார்க்கிறேன்" என்றான் வாண்டுப் பயல்.

தகப்பனார் பல்லைக் கடித்துக்கொண்டு எதிரே உட்கார்ந்திருந்த தம் மனைவியைக் கடு கடு என்று பார்த்தார். "இந்த மாதிரி அசட்டுக் குழந்தை நமக்கென்று வந்து பிறந்திருக்கிறதே!" என்ற அர்த்தம் அதில் தொனித்தது.

"நீர் எது வரையில் போகிறீர்?" என்றார் மறுபடி வைத்தா பக்கம் திரும்பி. சேலம் "என்றதும் அவர் முகம் இன்னும் கறுத்தது. வைத்தா "யமலோகம் வரையில் போகிறேன்" என்று சொல்லி யிருந்தால் சந்தோஷமாக அவனை வழி கொண்டு போய் விட்டிருப்பார் போல் தோன்றியது.

"சேலமா? சேலத்திலே யார் வீடு?"

"யார் வீடும் இல்லை. பத்து நாள் லீவில் போகிறேன். எங்கேயாவது ஹோட்டலில் இருந்து கொண்டு மேட்டூர் முதலிய இடங்களைப் பார்க்கலாம் என்று உத்தேசம்."

இது பெரிய புளுகுதான். வைத்தாவும் தன்னுடைய சொந்தக் கல்யாணத்துக்குத்தான் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தான். ஆனால் அந்த மனிதரிடம் ஏற்பட்டிருந்த கோபத்தில், அவரிடம் ஏன் உண்மையைச் சொல்ல வேண்டும் என்று தோன்றியதால் ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்லி வைத்தான்.

"நாங்களும் சேலத்துக்குத்தான் போகிறோம்" என்று சொல்லிவிட்டு அந்த மனிதர் தலையை ஆட்டிக் கொண்டே சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார். "'நீங்கள் சேலத்துக்குப் போகவில்லை. பொய் சொல்கிறீர்கள்' என்று யாராவது சொல்லட்டும், அவர்களை என்ன பண்ணுகிறேன் பார்!" என்று ஒவ்வொருவரையும் பார்த்து அவர் பயமுறுத்துவதுபோல் இருந்தது.

இந்த சமயத்தில் வாண்டுப் பயல் தூங்கி விழவே, வைத்தாவும் அவனும்



பச்சைக் கம்பளியை விலக்கிக் கொண்டு ......

இடம் மாற்றிக் கொண்டார்கள். இதில் உச்சிக் குடுமிக்காரர் கோபம் பாதி தணிந்தது.

"ஏன் ஸார்? இன்றைய பேப்பர் பார்த்தீர்களோ? என்ன போட்டிருக்கான்?" என்று கேட்டார்.

"என்ன இருக்கு? எங்கே பார்த்தாலும் இப்போது கம்பளவனுக்குத் தான் ஜயமாம்."

"ஆமாமாம்! — அதைக் கேட்கவில்லை நான். என்னமோ வால் நட்சத்திரம் வரப் போகிறது என்று போட்டிருந்ததே, அதைப் பற்றி இன்னும் ஏதாவது வந்திருக்கோ என்கிறேன்."

"உம் — ஒன்றும் காணோம். வாலாவது நட்சத்திரமாவது!"

"என்ன ஓய், இப்படிச் சொல்கிறீர்? உலகமே தலை கீழாய்ப் போகப் போகிறதாம். ஒரு படி பால் வாங்கினால் இரண்டரைப் படி இருக்குமாம்! எட்டுப் பேர் உட்காரக் கூடிய இந்த வண்டியில் எண்பது பேர் உட்காரலாமாம்! அப்பொழுது நீர் கூட எகிறிக் குதிக்காமல் தாராளமாய் வந்து உட்காரலாமாங் காணும்!" என்றார்.

அவர் சிரித்துக்கொண்டே இதைச் சொன்னதால் வைத்தாவுக்கும் சிரிப்பு வந்தது. "ஆமாம்; ஒரு படி பால் வாங்கினால் இப்பவேதான் இரண்டரைப் படி தண்ணீர் இருக்கிறதே!" என்றான்.

அந்தப் பொல்லாத மனிதர் இந்த ஹாஸ்யத்தைக் கேட்டு "ஓஹோ — ஹோ!" என்று இரைந்து சிரித்தார். உச்சிக் குடுமியைத் தட்டி முடிந்து கொண்டு, "அதெல்லாம் சரிதான் ஐயா! வாய் கூசாமல் நாலாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடு என்று கேட்கிறார்களே, அவர்களிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்தால் அது நாலாயிரமாக ஆகிவிடுமா என்று யாரும் சொல்லவில்லையே. அதைச் சொல்ல வேண்டாமா?" என்று கேட்டார்.

வைத்தா திடுக்கிட்டுப் போனான். ஆனால் சமாளித்துக் கொண்டு, "வரதக்ஷிணையா? எவ்வளவு? நாலாயிரமா? அடேயப்பா!" என்றான்.

"பயந்து போய் விடாதேயும். நான் பொய் சொல்லவில்லை, வாஸ்தவமாகத் தான் சொல்லுகிறேன். ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் லக்ஷக்கணக்கில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். வீடுகளும் பட்டணங்களும் இடிந்து எரிந்து சாம்பலாய்ப் போய்க் கொண்டிருக்

ஹார்லிக்ஸ் சாப்பிடத் தொடங்குமுன் ஒரு ஆகாரமும் உட்கொள்ள முடியவில்லை

ஜுரம் 104° என்றால் அபாயத்தின் அறிகுறியாம், ஆகாரமொன்றும் உட்கொள்ள முடிகிறதில்லை. காய்ச்சலோ மும்முரமாகி தசைக் குழாய்களை அழித்து நாசமாக்குகின்றன.

இந்நிலைமையில் ஹார்லிக்ஸே தகுந்த உணவென்று டாக்டர்கள் கூறுகின்றனர். அது சுலபத்தில் ஜீரணமாகி பலவீனமடைந்த தேகத்திற்கு மீண்டும் போஷணையளித்து வலுவூட்டுகிறது. நரம்புகளையும் தசை நார்களையும் உயிர்ப்பித்து தேகம் குணமடையவிருக்கும் வேளையில் வேறு நோய்கள் அணுகாமல் பாதுகாக்கிறது. நம் நாட்டில் முக்கிய ஆஸ்பத்திரிகளிலெங்கும் ஹார்லிக்ஸை ஜுரத்திற்குப் பத்திய ஆகாரமாக ஆதரித்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான பெயர்கள் ஹார்லிக்ஸினாலேயே உயிர் பிழைத்து விரைவில் மீண்டும் பூரண ஆரோக்கியமும் பலமும் பெற்றிருக்கிறார்கள்.

HORCKS

பலமும் வீரியமும் திரும்பவும் மூட்டுகிறது.

H. 2578

இன்றனை. ஆனால் இங்கே இந்த யுத்த காலத்திலேயும், 'என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறாயா?' என்று கேட்டால் 'நாலாயிரம் வைக்கிறாயா' என்கிறார்களே, இதற்கு என்னத்தைச் சொல்கிறது?"

"அக்கிரமம்!" என்றான் வைத்தா. ஆனால் அவன் இதை வெறுமனே 'உளஉளாக் காட்டி'க்காகத்தான் சொல்லி வைத்தான். அவனுக்கும் ஆயிரக் கணக்கில் வரதக்ஷிணை சம்பந்திகளிடம் வாங்கப் போவதாகத்தான் அவன் தகப்பனார் எழுதி யிருந்தார். அதனால்தான், பெண்ணைக் கூடப் போய்ப் பார்க்காமல் அவன் கல்யாணத்துக்குச் சம்மதித்தது கூட. ஆனால் இதையெல்லாம் சொல்லிக்கொண்டு அந்தப் பொல்லாத மனிதரிடம் யாராவது சண்டைக்குப் போவார்களா என்ன?

நள்ளிரவில் ரயில் எங்கேயோ ஒரு சின்ன ஸ்டேஷனில் நின்றது. உச்சிக் குடுமிக்காரர் அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து தர்மாஸ் பிளாஸ்கை எடுத்தார். பிறகு வைத்தா பக்கம் பார்த்தார். வைத்தா உட்கார்ந்தபடியே கண்ணை மூடிக் கொண்டு தூங்க முயற்சித்துக் கொண்டிருந்த போதிலும் அரைக் கண்ணால் அவரைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். இடுப்பில் கை விட்டு அவர் ஒரு ரயில் சாவியை எடுத்துப் பூட்டியிருந்த கதவைத் திறந்துகொண்டு குடுகுடு என்று கீழே இறங்கி ஓடினதைப் பார்த்ததும் அவனுக்கு வயிற்றைப் பற்றிக்கொண்டு எரிந்தது.

வெளியே போனவர் ரயில் நகரும் போது ஓடி வந்து மறுபடி உட்கார்ந்து கொண்டார். தர்மாஸ் பிளாஸ்கில் வாங்கி வந்த காப்பியில் கொஞ்சம் டம்ளரில் ஊற்றி, சிரித்துக் கொண்டே முதலில் வைத்தாவிடம் நீட்டினார்.

"காப்பியா? எனக்கென்னத்துக்கு? வேண்டாம் ஸார், இத்தனை நாழிக்கு மேலே" என்றான் அவன்.

"பரவாயில்லைங்காணும்! காப்பிக்கு வேளை உண்டா என்ன? சாப்பிடும்; சங்கோஜப் படாதேயும்!" என்று அவனிடம் கொடுத்து விட்டுத் தாமும் சாப்பிட்டார். காப்பி வயிற்றில் போனதும் இன்னும் கொஞ்சம் குஷி கிளம்பி விட்டது. எதிர்க் கோடியில் உட்கார்ந்திருந்த பெண்ணைக் காண்பித்து, "நம்ப மூத்த பெண். அவளுக்குத்தான் நாளனிக்கிப் பொழுது விடிந்தால் கல்யாணம்" என்றார்.

வைத்தா திரும்பி அந்தக் குறும்புக்காரப் பெண்ணைக் கவனித்தான். ஜன்னலில் தலை வைத்துச் சாய்ந்துகொண்டு அரைத் தூக்கமாய் இருந்தாள் அவள். "எந்த அப்பாவி இவளைக் கட்டிக் கொண்டு குடித்தனம் பண்ணப் போகிறானோ, பாவம்! நம்மைப்போல் சரியான ஆசாமியாய் வாய்த்து, இவளுடைய துஷ்டத்தனத்துக்கு இவளைப் பாக்கு வெட்டியில் வைத்து நறுக்குவது போல் நறுக்க வேண்டும்!" என்று நினைத்துக் கொண்டான்.

வெளிக்குச் சிரித்துக் கொண்டே அவன், "நாளனிக்குக் கல்யாணம் என்கிறீர், இன்றைக்கு எங்கேயோ பிரயாணம் போய்க் கொண்டிருக்கிறீர்களே?" என்றதும், "ஏன் ஐயா; சேலத்தில்தான் கல்யாணம் நடக்கிறது. அங்கே என் மாமனார் வீடு இருக்கிறது. பெரிய வீடு. சௌகரியமான இடம். அங்கே அவருக்கு நல்ல ஹோதா. ரிடயர்ட் ஜில்லா முன்சீப் சாம்பசிவ சாஸ்திரி என்று கேள்விப்பட்டிருப்பீரே—" என்று ஆரம்பித்தார்.

அன்று ரயில் ஏறிய பின் மூன்றாவது தடவையாக வைத்தாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அசடு வழியும் முகத்துடன் அவன் "நீங்கள் மகாலிங்க ஐயரா?—நான்தான் ஜகன்னாத ஐயர் பிள்ளை வைத்தியநாதன். இன்று சாயங்காலம்தான் எனக்கு ஆபீஸில் லீவ் 'ஸாங்ஷன்' ஆயிற்று. அதனால்தான் நான் மட்டும் இந்த ரயிலில் வருகிறேன். மற்றவர்கள் எல்லாம் முன்னாடி எக்ஸ்பிரஸில் போய்விட்டார்கள்" என்றான்.

அந்தப் பொல்லாத பேர்வழியும் திடுக்கிட்டுத்தான் போனார். ஆனால் உடனேயே சமாளித்துக் கொண்டு, "என்ன மாப்பிள்ளை! இப்படித்தானா பொய் சொல்லி எங்களை ஏமாற்றுகிறது?" என்று கேட்டார் கோபத்தோடு.

கோடியில் சிவனே என்று உட்கார்ந்திருந்த கிழவருக்கு அப்போதுதான் உயிர் வந்தது. பொக்கை வாயை இரண்டு தரம் மென்றுவிட்டு, "யாரு? மாப்பிள்ளையா? ஏண்டாப்பா, இங்கே பக்கத்திலே வா, பார்ப்போம்" என்று கூப்பிட்டார் அவர்.

வைத்தாவுக்கும் அதுதான் சௌகரியம் என்று பட்டது. — கிழவர் தன்னைப் பார்ப்பதற்கு அல்ல; தான் அந்தக் குறும்புக்காரப் பெண்ணைச் சரியாய்ப் பார்ப்பதற்குத்தான்!

உடனே போய்ப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.



மாலைவடி வேலவர்க்கு
வரிசையாய் நான் எழுதும்
ஓலை கிறுக் காச்சடி — கிளியே
உள்ளமும் கிறுக் காச்சுதே!

கவிச் சித்திரம்—7

—கிளிக் கண்ணி.





ஏமாந்த பூனைகள்

[ராஜி]

ஒரு கருப்புப் பூனையும் ஒரு வெள்ளைப் பூனையும் குளக்கரையில் வேடிக்கையாக விளையாடிக் கொண்டிருந்தன. அப்பொழுது சில வாத்துக்கள் தண்ணீரில் நீந்திக் கொண்டும் மீன்களைத் தேடிக் கொண்டும் இப்படியும் அப்படியுமாக வந்து கொண்டிருந்தன. வாத்துக்களைப் பார்த்த பூனைகளுக்கு ஒரு யோசனை தோன்றிற்று.


“ஏன் நாம் இவ்வாத்துக்களின் உதவியைக் கொண்டு தண்ணீரில் கப்பல் சவாரி செய்யக்கூடாது?” என்றது கருப்புப் பூனை. “அதுதான் சரியான யோசனை என்றது” வெள்ளைப் பூனை. உடனே இரண்டும் ஓடோடியும் சென்று குளக் கரையில் நின்று வாத்துக்களைக் கூப்பிட்டன.

இரண்டு வாத்துகளும் பூனைகளின் எதிரில் வந்து, “ஏன் கூப்பிட்டீர்கள்?” என்று கேட்டன. உடனே அவ்விரு பூனைகளும் “வாத்துக்களே! எங்களுக்குக் குளத்தில் கப்பல்விட வேண்டும் என்ற ஆசை. எங்களுக்கு உதவி செய்தால் உங்களுக்கு நிரம்பப் பட்சணம் தருவோம்” என்றன.


அதற்கு அவ்விரு வாத்துகளும் சந்தோஷமாக, “அதற்கென்ன? இப்பொழுதே நீங்களிருவரும் எங்கள் முதுகின்மீது உட்கார்ந்து கொள்ளுங்கள். மெதுவாக நீந்திக் குளத்தை ஒருமுறை அல்ல, பலமுறை சுற்றி வருகிறோம். நீங்கள் சந்தோஷமாகச் சவாரிசெய்து காலத்தைக் கழிக்கலாம்” என்றன.

அதைக் கேட்ட பூனைகள் சந்தோஷமடைந்து வாத்துக்களைத் தடவிக் கொடுத்தன.

“வாத்துக்களே! நீங்கள் சம்மதித்ததற்கு மிகவும் வந்தனம். ஆனால் நாங்கள் இருவரும் தனித் தனியாகச் சவாரி செய்யாமல் சேர்ந்தாற்போல் சவாரி செய்ய ஆசைப் படுகிறோம். ஆதலால், அதற்கு நீங்கள் இருவரும் சம்மதிக்க வேண்டும். அதோ இருக்கிற பலகையை உங்களிருவருடைய முதுகில் வைத்து அதில் நாங்களிருவரும் உட்கார்ந்து கொள்ளுகிறோம். நீங்கள் இருவரும் ஒரே சமயத்தில் நீந்திச் சென்றால் கப்பல் பிரயாணம் செய்வது போல் வெகு குஷியாக இருக்கும்” என்றன கருப்புப்பூனையும் வெள்ளைப்பூனையும்.



அதற்கு இரண்டு வாத்துக்களும் “அப்படியே செய்யுங்கள். ஆனால் பல



கையை எங்களுடன் சேர்த்துக் கட்டக் கூடாது. பலகையை எங்கள் முதுகின் மீது வையுங்கள்" என்றன. அடுத்த நிமிஷம் இரண்டு பூனைகளும் ஓடோடியும் சென்று பலகையை எடுத்து வந்து குளத்திலிருந்த இரண்டு வாத்துக்களின் முதுகிலும் சேர்ந்தாற் போல வைத்தன. பிறகு பலகையின் மீது இரண்டு பூனைகளும் உட்கார்ந்து கொண்டன. இரண்டு வாத்துக்களும் மெதுவாக நகர்ந்தன.

"ஆஹா! ஆஹா! என்ன ஜோராயிருக்கிறது! நிஜக் கப்பல் கூட இவ்வளவு குஷியாக இருக்காது!" என்று பூனைகள் ஆனந்தத்தால் கத்தின.

அச்சமயத்தில் "நில்லுங்கள்! நில்லுங்கள்! நானும் வருகிறேன்" என்ற ஒரு குரல் கேட்டது. "யானைதான் தங்களுடன் சவாரிசெய்ய வருகின்றதோ?" என்று பூனைகளும் வாத்துக்களும் பயமடைந்து திகைத்தன. ஆனால் அதிர்ஷ்டவசமாக, ஓடி வந்தது யானை அல்ல. கருப்புப் புள்ளி போட்ட ஒரு பூனைதான்.


"சிநேகிதர்களே! நானும் உங்களுடன் வேடிக்கையாக வருகிறேன். எல்லோரும் சாப்பிடுவதற்கு ரொட்டி கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லிற்று. ஆனால் இரண்டு பூனைகளும் அதற்குச் சம்மதிக்கவில்லை. "இந்தப் பலகையில் உனக்கு இடமில்லை" என்று சொல்ல, கருப்புப் புள்ளிப் பூனைக்கு மிகவும் கோபம் வந்தது.

இரு வாத்துகளும் சேர்ந்தாற்போல வேகமாகப் போக இரு பூனைகளும் கரையில் நிற்கும் பூனையைப் பார்த்துப் பரிகசித்துக்கொண்டே சென்றன. வாத்துக்கள் குளத்தை ஒரு முறை சுற்றி வந்தன. இரண்டாம் முறையும் ஆயிற்று. மூன்றாம் முறையிலாவது தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி கரையில் இருந்த பூனை இரண்டு பூனைகளையும் வேண்டிற்று.

ஆனால் இரண்டு பூனைகளும் இணங்காமல் மூன்றாவது முறையும் சுற்ற ஆரம்பித்தன. அச்சமயத்தில் கோபத்துடன் கரையிலிருந்த பூனை ஒரு வேலை செய்தது. தன் கையிலிருந்த ரொட்டித் துண்டுகளைக் குளத்தில் வாத்துகளுக்குச் சமீபத்தில் விட்டெறிந்தது. பூனை ரொட்டியை விட்டெறிந்ததுதான் தாமதம்; ஒரு வாத்து தன் மீது பூனைகள் பலகையில் உட்கார்ந்திருப்பதைக் கவனிக்காமல் ஒரு தாவுத் தாவி ரொட்டித் துண்டுகளைக் கவ்வப் பாய்ந்தது.

பலகை நழுவ இரண்டு பூனைகளும் 'தடால்!' என்று ஜலத்தில் விழுந்தன. மூச்சுத் திணறிக் கொண்டு மெதுவாகக் கரையை நோக்கித் தத்தளித்துக் கொண்டு சென்றன. உடம்பு முழுவதும் ஜலம் சொட்ட அவமானத்தினால் தலை குனிந்த வண்ணமாகக் கரையிலிருந்த பூனைக்கு எதிரில் வந்து நின்றன. தன்னிடம் மிகுதியுள்ள ரொட்டித் துண்டுகளை அவ்விரு பூனைகளுக்கும் கொடுத்துக் கரையிலிருந்த பூனை சமாதானம் செய்தது. அது முதல் மூன்று பூனைகளும் மிகவும் சிநேகமாக இருந்தன.




CAUVERY BRAND
CAUVERY BRAND
காவேரி பிராண்ட
BLEACHING POWDER
STANDS between CHOLERA & YOU
THE METTUR CHEMICAL & INDUSTRIAL CORPORATION LTD.
METTUR DAM, SOUTH INDIA.



முப்பத்தெட்டாம் அத்தியாயம்

— என்ன தண்டனை? —

அமாவாசை யன்றைக்கு மறுநாள் பொழுது புலர்ந்ததிலிருந்து மாமல்லபுரத்து அரண்மனையில் குந்தவி தேவிக்கு ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்து கொண்டிருந்தது. அடிக்கடி அரண்மனை உப்பரிகை மாடத்தின் மேல் ஏறுவதும், நாலாபுறமும் பார்ப்பதும், மறுபடி அவசரமாகக் கீழிறங்குவதும், பணியாட்களுக்கு ஏதேதோ கட்டளை யிடுவதும், உறையூரிலிருந்து அவளுடன் வந்திருந்த வள்ளியிடம் இடையிடையே ஏதோ பேசுவதுமா யிருந்தாள். என்ன பேசினாலும், எதைச் செய்தாலும், அவளுடைய செவிகள் மட்டும் குதிரைக் குளம்படியின் சத்தத்தை வெகு ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தன. பணியாட்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே சட்டென்று பேச்சை நிறுத்திக் காது கொடுத்துக் கேட்பாள். விக்கிரமனையும் பொன்னனையுந்தான் அவள் அவ்வளவு ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் என்று சொல்ல வேண்டியதில்லை.

உப்பரிகையிலிருந்து நாலாபுறமும் பார்க்கும்போது கடற்கரையோரத்தில் புலிக்கொடி பறந்து கொண்டிருந்த கப்பல் ஒன்று நிற்பது அவளுடைய கவனத்தை அடிக்கடி கவர்ந்தது. அந்தக் கப்பலின் தலைவனுக்கு விக்கிரமன் வருகையைப் பற்றி ஒரு தூதனிடம் அந்தரங்கச் செய்தி சொல்லி யனுப்பியிருந்தாள். இருந்த போதிலும், அந்தக் கப்பல் திடீரென்று புறப்பட்டுப் போய்விடுமோ என்ற திகில் அவளுக்கு அடிக்கடி உண்டாகிக் கொண்டிருந்தது.

விக்கிரமனும் பொன்னனும் வந்தவுடனே என்ன செய்யவேண்டுமென்று குந்தவி தீர்மானித்து வைத்திருந்தாள். விக்கிரமனுடன் அதே கப்பலில் தானும் போய்விடுவது என்ற எண்ணத்தை அவள் மாற்றிக் கொண்டு விட்டாள். அதனால் பலவித சந்தேகங்கள் தோன்றி மறுபடியும் விக்கிரமன் பிடிக்கப் படுவதற்கு ஏதுவாகலாம். இது மட்டுமல்ல. தந்தையிடம் சொல்லிக் கொள்ளாமல் அவ்விதம் ஓடிப் போவதற்கும் அவளுக்கு மனம் வரவில்லை. நரசிம்ம சக்கரவர்த்தியின் பரந்த கீர்த்திக்குத் தன்னுடைய செயலால் ஒரு களங்கம் உண்டாகலாமா? அதைக் காட்டிலும் விக்கிரமன் முதலில் கப்பலேறிச் சென்ற பிறகு, தந்தையிடம் நடந்ததையெல்லாம் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, விக்கிரமனையே தான் பதியாக வரித்துவிட்டதையும் தெரிவிப்பதே முறையல்லவா? அப்போது சக்கரவர்த்தி தன்னைக் கட்டாயம் மன்னிப்பதுடன், கப்பலில் ஏற்றித் தன்னைச் செண்பகத் தீவுக்கும் அனுப்பி வைத்து விடுவார். ஒரு வேளை அவரே தன்னுடன் கப்பல்

ஏறிச் செண்பகத் தீவுக்கு வந்தாலும் வரக்கூடும். "உன்னுடைய கல்யாணத்துக்காக நான் ஒரு பிரயத்தனமும் செய்யப் போவதில்லை. உன்னுடைய பதியை நீயே தான் ஸ்வயம்வரம் செய்து கொள்ளவேண்டும்" என்று சக்கரவர்த்தி அடிக்கடி கூறிவந்திருக்கிறாரல்லவா? அப்படியிருக்க, இப்போது தன் இஷ்டத்திற்கு அவர் ஏன் மாறு சொல்லவேண்டும்?

இத்தகைய தீர்மானத்துடன் குந்தவி விக்கிரமனுடைய வரவுக்கு வழி நோக்கிக் கொண்டிருந்தாள். வான வெளியில் சூரியன் மேலே வர வர, குந்தவியின் பர பரப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. கடைசியாக, கிட்டத்தட்ட நடு மத்தியானத்தில், தூரத்தில் குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்டபோது, குந்தவியினுடைய இருதயம் விம்மி எழுந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. மறுபடியும் ஒரு தடவை விக்கிரமனைக் கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டுத் தான் பின் தங்குவதா? கதையிலே, காவியத்திலே வரும் வீரப் பெண்மணிகள் எல்லாரும் அவ்விதந் தானா செய்திருக்கிறார்கள்? அர்ச்சுனனோடு சுபத்திரை கிளம்பிப் போய்விடவில்லையா? கிருஷ்ணனோடு ருக்மணி போகவில்லையா? — தான் மட்டும் எதற்காகப் பின் தங்கவேண்டும்? விக்கிரமனுக்கு விடை கொடுத்தனுப்புவது தன்னால் முடியாத காரியம் என்று அவளுக்குத் தோன்றிற்று. குதிரைகளின் காலடிச் சத்தம் நெருங்க நெருங்க அவளுடைய மனக் குழப்பம் அதிகமாயிற்று.

வந்த குதிரைகள் அரண்மனை வாசலில் வந்து நின்றன. வாசற் காப்பாளருக்கு, இரத்தின வியாபாரி தேவஸேனர் வந்தால் உடனே தன்னிடம் அழைத்து வரும்படி குந்தவி ஆக்ஞாபித்திருந்தாள். இதோ, குதிரையில் வந்தவர்கள் இறங்கி உள்ளே வருகிறார்கள்! அடுத்த விநாடி அவரைப் பார்க்கப் போகிறோம்! ...

ஆகா! இதென்ன? உள்ளே வருகிறது யார்? சக்கரவர்த்தியல்லவா? ... குந்தவியின் தலை சுழன்றது. எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு சமாளித்துக் கொண்டாள். சிறிது தடமாட்டத்துடன் "அப்பா! வாருங்கள்! வாருங்கள்! இத்தனை நாளாய் எங்கே போயிருந்தீர்கள்?" என்றாள்.

சக்கரவர்த்தி ஆவலுடன் குந்தவியின் அருகில் வந்து அவளைத் தழுவிக் கொண்டார். உடனே, திடுக்கிட்டவராய் "ஏன் அம்மா! உன் உடம்பு ஏன் இப்படிப் பதறுகிறது?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை, அப்பா! நீங்கள் திடீரென்று வந்தீர்களல்லவா?" என்றாள் குந்தவி.

"இவ்வளவுதானே? சரி, உட்கார், குழந்தாய்! நீ உறையூரிலிருந்து எப்போது வந்தாய்? எதற்காக இவ்வளவு அவசரமாய் வந்தாய்?" என்று கேட்டுக் கொண்டே சக்கரவர்த்தி அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

குந்தவிக்கு அப்போது ஏற்பட்ட இருதயத் துடிப்பைச் சொல்லி முடியாது.

"அப்பா இங்கே இருக்கும்போது அவர்கள் வந்து விட்டால் என்ன செய்கிறது? இப்பொழுது வருகிற சமயமாச்சே? அரண்மனைக்குள் வராமல் நேரே போய்க் கப்பலேறச் சொல்வதற்கு வழி என்ன?" என்றெல்லாம் எண்ணி அவள் உள்ளம் தவித்தது.

அவளுடைய தவிப்பைக் கவனியாதவர் போல் சக்கரவர்த்தி, "குழந்தாய்! இன்று சாயங்காலம் நான் உறையூருக்குக் கிளம்புகிறேன். நீயும் வருகிறாயா? அல்லது உறையூர் வாசம் போதுமென்று ஆகிவிட்டதா?" என்றார்.

"உறையூருக்கா? எதற்காக அப்பா?" என்றாள் குந்தவி.

"ரொம்ப முக்கியமான காரியங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன, அம்மா! அருள்மொழி தேவி அகப்பட்டு விட்டார்."

"ஆஹா!" என்று அலறினாள் குந்தவி.

"ஆமாம்; அருள்மொழி தேவியைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தது யார் தெரியுமா? நீ அடிக்கடி சொல்வாயே, யாரோ வேஷதாரி சிவனடியார் என்று, அவர்தான்."

"என்ன! என்ன? ... தேவி எங்கே இருந்தார்? யார் கொண்டு போய் வைத்திருந்தார்கள்? அந்தப் போலிச் சிவனடியார் ... ஒரு வேளை அவரே தான் ,..."

சக்கரவர்த்தி புன்னகையுடன், "இன்னும் உனக்குச் சந்தேகம் தீர வில்லையே, அம்மா! இல்லை, அந்தச் சிவனடியார் அருள்மொழி ராணியை ஒளித்து வைத்திருக்கவில்லை. ராணியைக் கொண்டுபோய் வைத்திருந்தவன்—நான் முன்னமேயே ஒரு தடவை சொன்னேனே — அந்தக் காபாலிகக் கூட்டத்தின் பெரிய பூசாரி — மகா கபால பைரவர் என்பவன்."

"ஐயோ!"

"சிவனடியார் அருள்மொழி ராணியைக் காப்பாற்றிக்கொண்டு வந்ததின் பலன், அவருடைய உயிருக்கே ஆபத்து வருவதா யிருந்ததாம். நேற்று இராத்திரி மகா கபால பைரவர் சிவனடியாரைக் காளிக்குப் பலி கொடுப்பதாக இருந்தாராம். அவரைக் கட்டிப் பலி பீடத்தில் கொண்டு வந்து போட்டாகி விட்டதாம். கழுத்தில் கத்தி விழுகிற சமயத்தில் சிவனடியாரை யார் வந்து காப்பாற்றினார்களாம், தெரியுமா?"

"யார் அப்பா?"

"செண்பகத் தீவிலிருந்து வந்திருந்தானே—இரத்தின வியாபாரி தேவ ஸேனன்—அவனும் படகோட்டி பொன்னனும் சரியான சமயத்தில் வந்து காப்பாற்றினார்களாம்!"

குந்தவி ஏதோ சொல்வதற்கு வாயைத் திறந்தாள். ஆனால், வார்த்தை ஒன்றும் வெளியில் வரவில்லை. அவளுடைய அழகிய வாய், மாதுளை மொட்டின் இதழ்கள் விரிவதுபோல் விரிந்து, அப்படியே திறந்தபடி இருந்தது.

"இன்னும் ஒரு பெரிய அதிசயத்தைக் கேள், குழந்தாய்! இரத்தின வியாபாரி தேவஸேனன் என்பது உண்மையில் யார் தெரியுமா? அவனும் ஒரு வேஷதாரிதான். தேசப் பிரஷ்டனை சோழநாட்டு இளவரசன் விக்கிரமன்தான் அம்மா திரி வேஷம் போட்டுக்கொண்டு அவனுடைய தாயாரையும் தாய்நாட்டையும் பார்ப்பதற்காக வந்தானும்? என்ன தைரியம், என்ன துணிச்சல், பார்த்தாயா, குழந்தாய்?"

குந்தவி, குரலில் விம்மலுடன் "அப்பா! அவர்கள் எல்லாரும் இப்போது எங்கே?" என்று கேட்டாள்.

"யாரைக் கேட்கிறாய், அம்மா! விக்கிரமனையும், பொன்னனையுமா? விக்கிரமன் இன்னானென்பதைக் கண்டு பிடித்தவன் மாரப்ப பூபதி. அவனை விசாரணைக்காகக் காஞ்சிக்கு அனுப்பும் படி உன் தமையன் கட்டளை அனுப்பி யிருந்தான். நான் அந்தக் கட்டளையை மாற்றி உறையூருக்கே அவர்களைக் கொண்டு போகச் சொல்லி யிருக்கிறேன். நானே நேரில் வந்து உறையூரில் விசாரணை நடத்துவதாகச் சொல்லி யிருக்கிறேன். அதற்காகத்தான் முக்கியமாக உறையூர் போகிறேன். நீயும் வருகிறாயா, குழந்தாய்?"

இத்தனை நேரமும் குந்தவி அடக்கி வைத்துக் கொண்டிருந்த துக்கமெல்லாம் இப்போது பீறிக்கொண்டு வெளியில் வந்தது. தந்தையின் மடியில் தலையை வைத்துக்கொண்டு 'கோ' என்று கதற ஆரம்பித்தாள்.

இவ்வளவு நேரமும் புன்னகை பொலிந்து கொண்டிருந்த சக்கரவர்த்தியின் முக பாவத்தில் இப்போது மாறுதல் காணப்பட்டது. அவருடைய கண்களின் ஓரத்தில் ஒரு துளி ஜலம் முத்துப்போல் பிரகாசித்தது. குந்தவியின் தலையையும் முதுகையும் அவர் அன்புடன் தடவிக் கொடுத்து, "குழந்தாய்! உனக்கு என்ன துக்கம்? உன் மனதில் ஏதோ வைத்துக்கொண்டு சொல்லாமலிருக்கிறாய். என்னிடம் மறைப்பானேன்? எதுவா யிருந்தாலும் சொல்!" என்றார்.

குந்தவி கொஞ்சங் கொஞ்சமாக எல்லாவற்றையும் சொன்னாள். காஞ்சி நகரின் வீதியில் சங்கிலிகளால் கட்டுண்டு சென்ற விக்கிரமனைச் சந்தித்ததிலிருந்து தன்னுடைய உள்ளம் அவனுக்கு வயமானதைத் தெரிவித்தாள். பிறகு, மகேந்திர மண்டபத்தில் சுரத்துடன் ஸ்மரணை யிழந்து கிடந்த விக்கிரமனைப் பல்லக்கில் ஏற்றி அழைத்துச் சென்றதிலிருந்து இன்று அவனைக் கப்பலேற்றி அனுப்ப உத்தேசித்திருந்தது வரையில் எல்லாவற்றை

யும் கூறினள். கடைசியில், "அப்பா! அந்தச் சோழ ராஜகுமாரனையே என் நாதனாக வரித்துவிட்டேன். வேறொருவரை மனதினாலும் நினைக்க மாட்டேன்" என்று கூறி விம்மினள்.

சக்கரவர்த்தி அப்போது அன்பு கனிந்த குரலில் கூறினார்:—"குழந்தாய்! இந்த உலகில் அன்பு ஒன்றுதான் சாசுவதமானது; மற்றதெல்லாம் அநித்தியம். இரண்டு இளம் உள்ளங்கள் அன்பினால் ஒன்று சேரும்போது, அங்கே அன்பு வடிவமான கடவுளே சாந்நித்யமா யிருக்கிறார். அவ்விதம் அன்பினால் சேர்ந்த உள்ளங்களுக்கு மத்தியில் நின்று தடை செய்ய யாருக்குமே பாத்தியதை கிடையாது; தாய் தகப்பனுக்குக் கூடக் கிடையாதுதான். ஆகையால், நீ சோழநாட்டு இளவரசனை மணம்புரிய விரும்பினயானல், அதை ஒரு நாளும் நான் தடை செய்யேன். ஆனல், குழந்தாய்! நமது பல்லவ வம்சம் நீதி நெறி தவருதது என்று புகழ்பெற்றது. பல்லவ சாம்ராஜ்யத்தில் ராஜகுலத்தினருக்கும் ஒரு நீதிதான்; ஏழைக் குடியானவனுக்கும் ஒரு நீதிதான். ஆகையால், சோழ ராஜகுமாரன் விஷயத்தில் ராஜ்ய நீதிக்கிணங்க விசாரணை நடைபெறும். குற்றத்துக்குத் தகுந்த தண்டனை கிடைக்கும். அதற்குப் பிறகும், நீ அந்த ராஜகுமாரனை மணக்க விரும்பினல், நான் குறுக்கே நிற்கமாட்டேன்."

இதைக் கேட்ட குந்தவி, "அப்பா! தேசப் பிரஷ்டமானவர்கள் திரும்பி வந்தால் தண்டனை என்ன?" என்ருள்.

"சாதாரணமாக, மரண தண்டனைதான். ஆனல், சோழ ராஜகுமாரன் விஷயத்தில் யோசிக்க வேண்டிய அம்சங்கள் இருக்கின்றன."

"என்ன, அப்பா!"

"நீதான் அடிக்கடி சொல்வாயே, அந்த ராஜகுமாரனுடைய காரியங்களுக்கெல்லாம் அவன் பொறுப்பாளியல்ல, — யாரோ ஒரு போலிச் சிவனடியாருடைய போதனைதான் காரணம் என்று. அது உண்மைதான் என்று தோன்றுகிறது. அந்தச் சிவனடியாரும் இப்போது அகப்பட்டிருக்கிருர். அவரையும் விசாரித்து உண்மை யறிய வேண்டும்."

அப்போது, குந்தவி, மனதிற்குள், "ஆமாம்; அந்தப் போலிச் சடைச்சாமியாரால்தான் எல்லா விபத்துக்களும் வருகின்றன. அவர் அநாவசியமாக நேற்றிரவு ஒரு ஆபத்தில் சிக்கிக் கொண்டிராவிட்டால், இந்த நேரம் அந்த வீர ராஜ குமாரர் கப்பலில் ஏறி யிருப்பாரல்லவா?" என்று எண்ணமிட்டாள்.

"அதோடு, இன்னும் ஒரு விஷயமும் யோசிக்க வேண்டியிருக்கிறது. செண்பகத் தீவின் இரத்தின வியாபாரிக்குக் குதிரை கொடுத்துச் சோழநாட்டுக்கு அனுப்பி வைத்தது யார்? ஞாபகம் இருக்கிறதா, குழந்தாய்?"

"அப்பா!" என்று வியப்பும் ஆனந்தமும் கலந்த குரலில் குந்தவி கூச்சலிட்டாள். ஒற்றர் தலைவன் வேஷத்திலிருந்த சக்கரவர்த்தி அனுப்பி வைத்துத்தானே விக்கிரமன் சோழ நாட்டுக்குப் போனது என்பது அவளுக்கு நினைவு வந்தது.

"அப்படியானல், தண்டனை எப்படி ஏற்படும், அப்பா?" என்ருள்.

"எல்லாம் விசாரிக்கலாம், குழந்தாய்! விசாரித்து எது நியாயமோ, அப்படிச் செய்யலாம். பல்லவ ராஜ்யத்தில் நீதி தவறி எதுவுமே நடக்காது" என்ருர் சக்கரவர்த்தி.

முப்பத்தோன்பதாம் அத்தியாயம்

— சிரஸாக்கினை —

"ஆகா! இது உறையூர்தானு?" என்று பார்த்தவர்கள் ஆச்சரியப்படும்படியாகச் சோழநாட்டின் தலை நகரம் அன்று அலங்கரிக்கப்பட்டு விளங்கிற்று. பார்த்திப மகாராஜா போர்க்களத்துக்குப் புறப்பட்டபோது அவருடன் புடைபெயர்ந்து சென்ற லக்ஷ்மீ தேவி மீண்டும் இன்றுதான் உறையூ

ருக்குத் திரும்பி வந்திருக்கிறான் என்று சொல்லும்படி யிருந்தது. உறையூர் வாசிகளிடையே வெகு காலத்திற்குப் பிறகு இன்று கலகலப்பும் உற்சாகமும் காணப்பட்டன. வெளியூர்களி லிருந்து ஜனங்கள் வண்டிகளிலும், பலவித வாகனங்களிலும், கால் நடையாகவும் வந்து கொண்டிருந்தார்கள். வீதிகளில் ஆங்காங்கு ஜனங்கள் கூட்டமாய் நின்று கிளர்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று காஞ்சி நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தி உறையூரில் பொதுஜன சபை கூட்டுகிறார் என்றும், இதற்காகச் சோழ நாட்டின் பட்டணங்களிலும் கிராமங்களிலும் உள்ள பிரமுகர்களை யெல்லாம் அழைத்திருக்கிறார் என்றும் பிரஸ்தாபமா யிருந்தது. அன்று நடக்கப் போகும் சபையில் பல அதிசயங்கள் வெளியாகு மென்றும், பல விசேஷ சம்பவங்கள் நிகழுமென்றும் ஜனங்கள் எதிர்பார்த்தார்கள். அருள்மொழி தேவியும், இளவரசர் விக்கிரமரும் உறையூருக்குத் திரும்பி வந்திருக்கிறார்க ளென்னும் செய்தியும் பரவி யிருந்தது. இன்னும், இளவரசர் இரத்தின வியாபாரி வேஷத்தில் வஸந்த மாளிகையில் வந்திருந்தாரென்றும், குந்தவி தேவிக்கும் அவருக்கும் காதல் உண்டாகிக் கல்யாணம் நடக்கப் போகிறதென்றும், இதனால் உறையூரும் காஞ்சியும் உறவு கொள்ளப் போகிறதென்றும் சிலர் சொன்னார்கள். வேறு சிலர் இதை மறுத்து, "தேசப் பிரஷ்டத் தண்டனைக் குள்ளான இளவரசரைச் சக்கரவர்த்தி விசாரணை செய்து பொதுஜன அபிப்பிராயத்தை யொட்டித் தீர்ப்புக் கூறப் போகிறார்" என்றார்கள். நாலு நாளைக்கு முன்னால், அமாவாசை யிரவில், கொல்லி மலைச் சாரலில் நடந்த சம்பவங்களைப் பற்றியும், மாரப்ப பூபதியின் மரணத்தைப் பற்றியும் ஜனங்கள் கூட்டியும் குறைத்தும் பலவாறாகப் பேசிக் கொண்டார்கள்.

பொன்னனும் வள்ளியும் அன்று உறையூர் வீதிகளின் வழியாக வந்த போது, ஆங்காங்கே ஜனங்கள் அவர்களை நிறுத்தி, "பொன்னா! இன்று என்ன நடக்கப் போகிறது?" என்று விசாரித்தார்கள். பொன்னனோ, தலையை ஓரே அசைப்பாக அசைத்து "எனக்கு ஒன்றும் தெரியாது. சாயங்காலமானால், தானே எல்லாம் வெளியாகிறது. ஏன் அவசரப் படுகிறீர்கள்?" என்றான். வள்ளியை அழைத்துக் கேட்ட பெண் பிள்ளைகளிடம் வள்ளியும் அதே மாதிரி தான் மறுமொழி சொன்னாள். பொன்னனுக்கும் வள்ளிக்கும் அன்று இருந்த கிராக்கிக்கும், அவர்களுக்கு அன்று ஏற்பட்டிருந்த பெருமைக்கும் அளவேயில்லை.

* * *

தேவலோகத்தில் தேவேந்திரனுடைய சபை கூடியிருப்பதைப் பார்த்தவர்கள் யாரும் திரும்பி வந்து நமக்கு அந்த சபையைப் பற்றிக் கூறியது கிடையாது. ஆனால், அன்று உறையூரில் கூடிய மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியின் சபையைப் பார்த்தவர்கள், "தேவேந்திரனுடைய சபை கிட்டத்தட்ட இந்த மாதிரிதான் இருக்க வேண்டும்" என்று ஏகமனதாக முடிவு கட்டினார்கள். அவ்வளவு விமரிசையாக அலங்கரிக்கப் பட்டிருந்த சபா மண்டபத்தில் சபை கூடிற்று. குறிப்பிட்ட நேரத்துக்குள் தேவேந்திரனைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் வந்து தத்தம் ஆசனங்களில் அமர்ந்து விட்டார்கள். சக்கரவர்த்தியின் சிம்மாசனத்துக்கு ஒரு பக்கத்தில், வசிஷ்டரையும் வாமதேவரையும் போல், சிவனடியாரும் சிறுத்தொண்டரும் வீற்றிருந்தார்கள். சிம்மாசனத்தின் மற்றொரு பக்கத்தில் சக்கரவர்த்தியின் குமாரன் மகேந்திரனும், குமாரி குந்தவியும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு அடுத்தாற் போல் அருள்மொழி தேவியும் சிறுத்தொண்டரின் தர்மபத்தினி திருவெண்காட்டு நங்கையும் காணப்பட்டனர். அவர்களுக்கு மத்தியில், சிறுத்தொண்டரின் அருமைப் புதல்வன் சீராளதேவன் உட்கார்ந்து, அதிசயத்தினால் விரிந்த கண்களினால் நாலா புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். இவர்களுக்குப் பின்னால் பொன்னனும் வள்ளியும் அடக்க ஒடுக்கத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். சக்கரவர்த்தியின் சிம்மாசனத்துக்கு நேர் எதிரே, சற்று தூரத்தில், பல்லவ சேனாதிபதியும்

இன்னும் சில பல்லவ வீரர்களும் சூழ்ந்திருக்க, விக்கிரமன் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து உட்கார்ந்திருந்தான். குந்தவி இருந்த பக்கம் பார்க்கக் கூடாதென்று அவன் எவ்வளவோ பிடிவாதமாக மனதை உறுதிப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தானென்ருலும், சில சமயம் அவனை அறியாமலே அவனுடைய கண்கள் அந்தப் பக்கம் நோக்கின. அதே சமயத்தில் குந்தவியும் தன்னை மீறிய ஆவலினால் விக்கிரமனைப் பார்க்கவும், இருவரும் திடுக்கிட்டுத் தங்களுடைய மன உறுதி குலைந்ததற்காக வெட்கப்பட்டுத் தலை குனிய வேண்டியதா யிருந்தது.

இன்னும் அந்த மகத்தான சபையில், மந்திரிகளும் படைத் தலைவர்களும் தனதிகாரிகளும் பண்டிதர்களும் கலைஞர்களும் கவிராயர்களும் பிரபல வர்த்தகர்களும் கிராமங்களிலிருந்து வந்த காட்டாண்மைக் காரர்களும் அவரவர்களுக்கு ஏற்பட்ட இடத்தில் அமர்ந்திருந்தார்கள். இவர்கள் எல்லாரையும் காட்டிலும் அந்த சபையில் அதிகமாக அனைவருடைய கவனத்தையும் கவர்ந்த ஒருவர் சக்கரவர்த்தி குமாரன் மகேந்திரனுக்குப் பின்னால் அமர்ந்திருந்தார். அவருடைய உருவமும் உடையும் அவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவரல்ல என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறின. சபையினர் அவரைச் சுட்டிக் காட்டித் தங்களுக்குள்ளே, "சீன தேசத்திலிருந்து வந்திருக்கும் உலக யாத்ரீகர் இவர்தான்" என்று பேசிக் கொண்டார்கள். ஹியூன் த்ஸாங் என்னும் அவருடைய பெயரைப் பலரும் பலவிதமாக உச்சரித்து நகையாடினார்கள்.

இந்தச் சீன யாத்திரீகரைத் தவிர இன்னும் சில அயல்நாட்டாரும் அந்த சபையில் ஒரு பக்கத்தில் காணப்பட்டார்கள். அவர்கள் நடை உடையினால் அயல் நாட்டாராகத் தோன்றினாலும், அவர்கள் பேசுகிற பாஷை தமிழாகத்தான் தெரிந்தது. சற்றே அவர்களை உற்றுப் பார்த்தோமானால், ஏற்கெனவே பார்த்த முகங்கள் என்பது நினைவு வரும். ஆம்; செண்பகத் தீவிலிருந்து வந்த கப்பலில் இரத்தின வியாபாரி தேவஸேனனுடன் வந்தவர்கள்தான் இவர்கள். இந்த சபைக்கு அவர்களும் வரவேண்டு மென்பது சக்கரவர்த்தியின் ஆக்ஞை போலும். தங்கள் மகாராஜாவுக்கு, சக்கரவர்த்தியின் விசாரணையின் முடிவாக, என்ன கதி நேரப் போகிறதோ என்று தெரிந்து கொள்ளும் ஆவல் அவர்களுக்கிருப்பது இயற்கையே யல்லவா?

சபை முழுவதிலும் ஆங்காங்கு பணியாட்களும் பணிப் பெண்களும் நின்று வெண்சாமரங்களினால் விசிறியும், சந்தனம் தாம்பூலம் முதலியவை வழங்கியும் சபையினருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

*　　*　　*

குறிப்பிட்ட நேரம் ஆகியும் சக்கரவர்த்தி வராதிருக்கவே, சபையில் "ஏன் சக்கரவர்த்தி இன்னும் வரவில்லை?" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் சப்தம் எழுந்தது. இவ்விதம் பல குரல்கள் சேர்ந்து பெரும் இரைச்சலாகி விடும்போல் தோன்றிய சமயத்தில், சிறுத்தொண்டர் எழுந்திருந்து, கையமர்த்தி, "சபையோர்களே! சக்கரவர்த்தி சபைக்கு வருவதற்கு இன்னும் சிறிது நேரம் ஆகும் என்று செய்தி வந்திருக்கிறது. அது வரையில், இந்த சபை கூடியதின் நோக்கம் இன்னதென்பதை உங்களுக்கு எடுத்து உரைக்கும்படி என்னைச் சக்கரவர்த்தி ஆக்ஞாபித்திருக்கிறார்" என்று இடிமுழக்கம் போன்ற குரலில் கூறியதும், சபையில் நிசப்தம் உண்டாயிற்று. எல்லாரும் பயபக்தியுடன் சிறுத்தொண்டருடைய முகத்தையே பார்க்கலானார்கள்.

சிறுத்தொண்டர் மேலும் கூறினார்:

"வீர சொர்க்க மடைந்த என் அருமைத் தோழரான பார்த்திப சோழ மகாராஜாவின் புதல்வர் விக்கிரம சோழர், இன்று உங்கள் முன்னால் குற்ற விசாரணைக்கு நிறுத்தப் பட்டிருக்கிறார். சக்கரவர்த்தியின் தேசப் பிரஷ்டத் தண்டனையை மீறி அவர் இந் நாட்டுக்குள் பிரவேசித்துக் கையும் மெய்யுமாய்க் கண்டு பிடிக்கவும் பட்டார். அவர் இவ்விதம் சக்கரவர்த்தியின் ஆக்ஞையை மீறி வந்ததின் காரண காரியங்களை விசாரணை செய்து, உங்கள் எல்லாருடைய அபிப்பிராயத்தையும் கேட்டு, சர்வ சம்மதமான நியாயத் தீர்ப்புக் கூற வேண்டு மென்

பது சக்கரவர்த்தியின் விருப்பம். இதற்காகத்தான் இந்த சபை கூடியிருக்கிறது. நீங்கள் அபிப்பிராயம் கூறுவதற்கு முன்னால் எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். விக்கிரம சோழர் சக்கரவர்த்தியின் கட்டளையை மீறியது குற்றமானாலும், அதற்கு அவர் மட்டும் பொறுப்பாளியல்ல. இதோ என் பக்கத்தில் வீற்றிருக்கும் என் தோழர் அதற்குப் பெரும்பாலும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன் வந்திருக்கிறார்" என்று சிறுத்தொண்டர் கூறியதும் சபையில் எல்லோருடைய கவனமும் சிவனடியார்மேல் திரும்பியது. அவருடைய முகத்தில் குடி கொண்டிருந்த தேஜஸைப் பார்த்து அனைவரும் பிரமித்தார்கள். "இவர் யார் இந்தப் பெரியவர்? அப்பர் பெருமானோ இறைவன் பதம் அடைந்து விட்டார்; சம்பந்த ஸ்வாமியோ இளம் பிராயத்தவர். மகான் சிறுத்தொண்டரோ இங்கேயே இருக்கிறார். இவர் வேறு யாராயிருக்கும்? விக்கிரம சோழர் விஷயத்தில் இவர் பொறுப்பு ஏற்றுக்கொள்ளக் காரணம் என்ன?" என்று எண்ணமிட்டனர்.

பிறகு, சிறுத்தொண்டர், பத்து வருஷங்களுக்கு முன் பார்த்திப மகாராஜா போர்க்கோலம் பூண்டு உறையூரிலிருந்து கிளம்பியதையும் வெண்ணாற்றங் கரையில் நடந்த பயங்கர யுத்தத்தையும் சபையோருக்கு ஞாபகப் படுத்தினார். பார்த்திப மகாராஜாவுடன் கிளம்பிய பத்தாயிரம் பேரில் ஒருவர் கூடத் திரும்பாமல் போர்க்களத்திலேயே மடிந்ததைச் சொன்னபோது சபையோர் புளகாங்கிதம் அடைந்தனர். அந்தப் புரட்டாசி பௌர்ணமி யன்றிரவு, இந்தச் சிவனடியார் போர்க் களத்தில் பிரவேசித்து, அத்தகைய வீர மரணமடைந்த தீர மன்னரின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று அவருடைய உடலைத் தேடியதை எடுத்துக் கூறினார். கடைசியில் அவருடைய முயற்சியில் வெற்றி யடைந்ததையும், பார்த்திப மகாராஜாவின் உடலில் இன்னும் உயிர் இருந்ததையும், மகாராஜா சிவனடியாரிடம் "என் மகனை வீர சுதந்திர புருஷனாக வளர்க்க வேண்டும்" என்று வரம் கேட்டதையும், சிவனடியார் அவ்விதமே வரம் கொடுத்ததையும் எடுத்துக் கூறியபோது, அந்தப் பெரிய சபையின் நாலு பக்கங்களிலும் 'ஆஹா' காரம் உண்டானதுடன், அநேகருடைய கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று.

பின்னர். சிவனடியார் உறையூருக்கு வந்து அருள்மொழி தேவியைப் பார்த்துத் தேற்றியது முதல், விக்கிரமன் சுதந்திரக் கொடியை நாட்ட முயன்றது, தேசப் பிரஷ்ட தண்டனைக்குள்ளானது, செண்பகத் தீவின் அரசனானது, தாயாரையும் தாய்நாட்டையும் பார்க்க வேண்டுமென்ற ஆசையினால் திரும்பி வந்தது, வழியில் அவனுக்கு ஏற்பட்ட இடையூறுகள் எல்லாவற்றையும் சிறுத்தொண்டர் விவரமாகக் கூறினார். இதற்கிடையில், நீலகேசி 'மகா கபால பைரவர்' என்ற வேஷத்தில் செய்த சூழ்ச்சிகளையும், ராணி அருள்மொழி தேவியை அவன் கொண்டுபோய் மலைக் குகையில் வைத்திருந்ததையும், சிவனடியாரின் தளரா முயற்சியினால் அவனுடைய சூழ்ச்சிகள் வெளிப்பட்டதையும், சென்ற அமாவாசை இரவில் நடந்த சம்பவங்களையும், விக்கிரமன் தன் உயிரைப் பொருட்படுத்தாமல் சிவனடியாரைக் காப்பாற்ற முன் வந்ததையும் விவரித்தார். இவ்வளவையும் சொல்லிவிட்டுக் கடைசியாக, "சபையோர்களே! உங்களையெல்லாம் ஒன்று கேட்க விரும்புகிறேன். என் தோழர் சிவனடியார் போர்க்களத்தில் பார்த்திப மகாராஜாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டதாக நீங்கள் அபிப்பிராயப் படுகிறீர்களா? பார்த்திப மகாராஜாவின் குமாரர் விக்கிரமர் வீர சுதந்திர புருஷராக வளர்க்கப் பட்டிருக்கிறாரா?" என்று கேட்டார்.

அப்போது சபையில் ஏகமனதாக, "ஆம், ஆம்" என்ற மகத்தான பெருங் கோஷம் எழுந்து, அந்த விசாலமான மண்டபம் முழுவதும் வியாபித்து, வெளியிலும் சென்று முழங்கியது.

கோஷம் அடங்கியதும் சிறுத்தொண்டர் கையமர்த்தி, "இன்னும் ஒரு முக்கிய விஷயம் உங்களுக்குச் சொல்ல மறந்து விட்டேன். போர்க்களத்தில் பார்த்திப மகாராஜாவுக்கு இந்த மகா

புருஷர் வாக்குறுதி கொடுத்த பிறகு, மகாராஜா இவரைப் பார்த்து, 'ஸ்வாமி! தாங்கள் யார்?' என்று கேட்டார். அப்போது இந்த வேஷதாரி, தமது பொய் சடா மகுடத்தை எடுத்து விட்டு உண்மை ரூபத்துடன் தோன்றினார். இவர் யார் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு பார்த்திப மகாராஜா தம் மனோரதம் நிறைவேறும் என்ற பூரண நம்பிக்கை பெற்று நிம்மதியாக வீர சொர்க்கம் அடைந்தார்!" என்று கூறியபோது, அச்சபையில் ஏற்பட்ட கிளர்ச்சியைச் சொல்ல முடியாது. பொன்னன் வள்ளி இந்த இருவர் முகத்திலும் மட்டும் அப்போது புன்னகை தவழ்ந்தது. மற்றவர்கள் எல்லாரும் அளவற்ற ஆவலுடன் சிவனடியாரையே நோக்கிய வண்ணம் இருந்தார்கள்.

அப்போது சிறுத்தொண்டர் "இந்த வேஷதாரியின் உண்மை ஸ்வரூபத்தைப் பார்க்க நீங்கள் எல்லாருமே ஆவலாயிருக்கிறீர்கள். இதோ பாருங்கள்!" என்று கூறி, சிவனடியார் பக்கம் திரும்பி, ஒரு நொடியில் அவருடைய ஜடாமகுடத்தையும் தாடி மீசையையும் தமது இரண்டு கையினாலும் நீக்கி விடவே, மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியின் தேஜோ மயமான கம்பீர முகத்தை எல்லாரும் கண்டார்கள்.

அப்போது அச்சபையில் மகத்தான கிளர்ச்சி ஏற்பட்டது. குந்தவி அவளுடைய ஆசனத்திலிருந்து எழுந்து "அப்பா!" என்று கதறிக்கொண்டே ஓடிவந்து வேஷம் பாதி கலைந்து நின்ற சக்கரவர்த்தியின் தோள்களைக் கட்டிக் கொண்டாள். உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சையாகி விழும் நிலைமையில் இருந்த அருள்மொழி தேவியைச் சிறுத்தொண்டரின் பத்தினி தாங்கிக் கொண்டு ஆசுவாசம் செய்தாள்.



விக்கிரமன் கண்ணிமைக்காமல், திறந்த வாய் மூடாமல், உருவம் மாறிய சிவனடியாரைப் பார்த்துக் கொண்டு நின்றான். அந்தப் பரபரப்பில் இன்னது செய்கிறோமென்று தெரியாமல், பொன்னன் வள்ளியைத் தழுவிக் கொண்டான்!

"தர்ம ராஜாதி ராஜ மாமல்ல நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தி வாழ்க!" என்று ஒரு பெரிய கோஷம் எழுந்தது. "ஜயா விஜயீபவா!" என்று சபையினர் அனைவரும் ஒரே குரலில் முழங்கினார்கள். சிறிது நேரம் இத்தகைய கோஷமே முழங்கிக் கொண்டிருந்த பிறகு பொன்னனுக்கு என்ன தோன்றிற்றோ, என்னமோ, திடீரென்று உரத்த குரலில் "விக்கிரம சோழ மகாராஜா வாழ்க!" என்று கோஷித்தான். அதையும் சபையோர் அங்கீகரித்து "ஜயா விஜயீபவா!" என்று முழங்கினார்கள்.


இந்தக் குழப்பமும் கிளர்ச்சியும் அடங்கியபோது, இத்

தனை நேரமும் சிவனடியார் அமர்ந்திருந்த இடத்தில் அவர் இல்லை என்பதைச் சபையோர் கண்டார்கள். சிறுத்தொண்டர், "சபையோர்களே! நீங்கள் கலைந்து போவதற்கு முன்னால் இன்னும் ஒரே ஒரு காரியம் பாக்கியிருக்கிறது. மாமல்ல சக்கரவர்த்தி தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்து விக்கிரம சோழரின் குற்றத்தைப் பற்றி முடிவான தீர்ப்புக் கூறுவார்" என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சக்ரவர்த்தி தமது இயற்கையான ஆடை ஆபரணங்களைத் தரித்தவராய்க் கம்பீரமாக அச் சபைக்குள் பிரவேசித்தார். அவர் சபைக்குள் பிரவேசித்த போதும், சபையில் நடு நாயகமாக இருந்த தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்த போதும், "ஜயா விஜயீபவா!" என்னும் முழக்கம் வானளாவ எழுந்தது. சப்தம் அடங்கியதும், சக்ரவர்த்தி எழுந்து, "விக்கிரம சோழரைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் இன்னதென்பதைத் தெரிந்து கொண்டேன். தேசப் பிரஷ்ட தண்டனைக்குள்ளானவர்கள் திரும்பி வந்தால், அதற்குத் தண்டனை சிரஸாக்கினைதான். ஆகவே, விக்கிரம சோழருக்கும் சிரஸாக்கினைதான் கொடுத்தாக வேண்டும். இதோ இந்தப் புராதனமான சோழ மன்னர்களின் மணி மகுடத்தை விக்கிரம சோழர் இனிமேல் தனியாகவே தலையில் தாங்க வேண்டுமென்னும் சிரஸாக்கினையை அவருக்கு விதிக்கிறேன். இன்று முதல் சோழ நாடு சுதந்திர ராஜ்யமாகி விட்டது. இதன் பாரம் முழுவதையும் விக்கிரம சோழரும் அவருடைய சந்ததிகளுந்தான் இனிமேல் தாங்கியாக வேண்டும்!" என்று கூறியபோது, அந்த சபையில் உண்டான உற்சாக ஆரவாரத்தை வர்ணிக்க, புராண இதிகாசங்களில் சொல்வதுபோல், ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷன்தான் வந்தாக வேண்டும்.

நாற்பதாம் அத்தியாயம்
கனவு நிறைவேறியது

நல்ல சுப யோக, சுப லக்னத்தில் விக்கிரமன் சோழநாட்டின் சுதந்திர அரசனாக முடி சூட்டப்பட்டான். அவ்விதமே நல்ல சுப முகூர்த்தத்தில் விக்கிரமனுக்கும் குந்தவிக்கும் திருமணம் விமரிசையாக நடந்தேறியது. திருமணத்துக்குப் பிறகு விக்கிரமன் நரசிம்ம பல்லவரிடம் சென்று அவருடைய ஆசியைக் கோரியபோது, சக்கரவர்த்தி, "குழந்தாய்! எக்காலத்திலும் 'பார்த்திப மகாராஜாவின் புதல்வன்' என்னும் பெருமைக்குப் பங்கமில்லாமல் நடந்துகொள்வாயாக. அதற்கு வேண்டிய மனோதிடத்தைப் பகவான் உனக்கு அருளட்டும்" என்று ஆசீர்வதித்தார். அவ்விதமே குந்தவி



"உனக்கு சகல சௌபாக்கியங்களும் உண்டாகட்டும். 'பார்த்திப மகாராஜாவின் மருமகள்' என்னும் பெருமைக்கு உரியவளாக எப்போதும் நடந்து கொள்."

அருள்மொழி தேவியை நமஸ்கரித்த போது, "அம்மா! உனக்கு சகல சௌபாக்கியங்களும் உண்டாகட்டும். 'பார்த்திப மகாராஜாவின் மருமகள்' என்னும் பெருமைக்கு உரியவளாக எப்போதும் நடந்துகொள்" என்று ஆசி கூறினான்.

விக்கிரமனும் குந்தவியும் உறையூர் சிம்மாசனத்தில் வீற்றிருந்த போது, சோழவளநாடு எல்லாத் துறைகளிலும் செழித்தோங்கியது. மாதம் மும்மாரி பொழிந்து நிலங்கள் மூன்று போகம் விளைந்தன. கிராமந்தோறும் சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் நிர்மாணிக்கப்பட்டன. சிற்பம், சித்திரம் முதலிய கலைகள் சிறந்தோங்கின. திருமகளும் கலைமகளும் காவேரி நதிக் கரையில் கை கோத்துக் கொண்டு குலாவினார்கள்.


விக்கிரமன் சோழர் குலத்தின் பழைய வீர வாளை ஏந்தி, தமிழ் மறையில் கண்ட ராஜ நீதிப்படி அரசு செலுத்திப் பெயரும் புகழும் அடைந்தான். அவனுடைய காலத்தில் செண்பகத் தீவு புலிக் கொடியின் கீழேதான் இருந்து வந்தது. புலிக் கொடி தாங்கிய சோழநாட்டுக் கப்பல்கள் அடிக்கடி செண்பகத் தீவுக்கும் அதற்கு அப்பாலுள்ள தீபாந்திரங்களுக்கும் சென்று பல்வகைச் செல்வங்களையும் கொண்டு வந்து குவித்தன.

ஆனாலும், பார்த்திப மகாராஜாவின் கனவு விக்கிரமனுடைய காலத்தில் பூரணமாக நிறைவேறவில்லை. சூரியனுக்குப் பக்கத்தில் மற்றக் கிரகங்களெல்லாம் ஒளிமங்கி விடுவதுபோல், காஞ்சி நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தியின் மகிமையானது விக்கிரமனுடைய புகழ் ஓங்குவதற்குப் பெரிய தடையாயிருந்தது. பார்த்திப மகாராஜாவின் வீர மரணமும், விக்கிரமனுடைய வீரச் செயல்களும் கூட ஒரு வழியில் நரசிம்ம சக்கரவர்த்தியின் மகிமையையே அதிகமாக்கின. சக்கரவர்த்தி சிவனடியாராக வேஷம் தரித்துப் பார்த்திப மகாராஜாவுக்கு வாக்குறுதியளித்த கதையும், அதை அவர் நிறைவேற்றிய வரலாறும் எங்கெங்கும் பரவி, மாமல்லரின் புகழ் வளர்வதற்கே காரணமாயிருந்தன.

நரசிம்மவர்மருக்குப் பின்னரும் வெகு காலம் பல்லவர் பெருமை குன்றவில்லை. இதனால் சோழநாடு ஒரு குறுகிய எல்லைக்குள் கட்டுப்பட்டுக் கிடந்தது. ஆனால், விக்கிரமனும் அவனுடைய சந்ததியார்களும் பார்த்திப மகாராஜாவின் கனவை மட்டும் மறக்கவில்லை. வழி வழியாக அவரவர்களுடைய புதல்வர்களுக்குப் பார்த்திப மகாராஜாவின் வீர மரணத்தைப் பற்றிச் சொல்லி, உறையூர் சித்திர மண்டபத்தின் அந்தரங்கப் பகுதியில் இருந்த பார்த்திப மன்னரின் கனவுச் சித்திரங்களைக் காண்பித்து வந்தார்கள்.

சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் சோழ நாட்டின் வீர சிம்மாசனம் ஏறிய இராஜ ராஜ சோழன், அவனுடைய புதல்வனான இராஜேந்திர சோழன்—இவர்களுடைய காலத்திலேதான் பல்லவர் பெருமை குன்றிச் சோழ நாடு மகோன்னத மடையத் தொடங்கியது. சோழநாட்டு வீரர்கள் வடக்கே கங்கை வரையிலும், தெற்கே இலங்கை வரையிலும், கிழக்கே கடல்களுக்கு அப்பாலுள்ள கடாரம் வரையிலும் சென்று வீரப் போர் புரிந்து புலிக் கொடியை வானளாவப் பறக்க விட்டார்கள். புலிக் கொடி தாங்கிய கப்பல்களில் சோழ நாட்டு வீரர்கள் கடல்களில் நெடுந் தூரம் பிரயாணம் செய்து சாவகம், புஷ்பகம் முதலிய தீவுகளைக் கைப்பற்றிச் சோழர்களின் ஆதிக்கத்துக்கு உட்படுத்தினார்கள். சோழவள நாடெங்கும் அற்புதமான கோவில்களும், கோபுரங்களும், சோழ மன்னர்களின் வீரப் புகழே போல் வானளாவி எழுந்து, அக்காலத்திய சோழ சாம்ராஜ்யத்தின் மகோன்னதத்துக்கு அழியாத ஞாபகச் சின்னங்களாக இன்றைக்கும் விளங்குகின்றன. இவ்வாறு, பார்த்திப சோழன் கண்ட கனவு, அவன் வீர சொர்க்கம் அடைந்து முந்நூறு வருஷங்களுக்குப் பிறகு பரிபூரணமாக நிறைவேறியது.

மங்களம்



நல்ல சுகத்தை விரும்புவோருக்கு

நமக்குக் கட்டாவிடினும் நாம் எல்லோரும் சுகத்தைத் தான் விரும்புகிறோம். பரம சுகம் நிறைந்த சிகரெட்டான டிலக்ஸ் டெனாரை இப்போது நம்மில் பலரும் சுலபமாக வாங்கி வெகு ஆனந்தமாக அனுபவிக்கலாம்.

ரஸிகர்களுக்கும் மெல்லிய தொண்டையுடையவர்களுக்கும் நாம் சொல்வது "ஒரு முறை நீங்கள் டெனார் சிகரெட்டை அனுபவித்துப் பார்த்தால் என்ன?" அதை நீங்கள் நிச்சயமாக விரும்புவீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

பெரிய அல்லது ஸ்டாண்டர்டு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்.

BY APPOINTMENT TO THE MOST HONOURABLE THE MARQUESS OF LINLITHGOW, VICEROY AND GOVERNOR GENERAL OF INDIA.

TENOR

de luxe CIGARETTES

Guaranteed 100% Pure Virginia Tobacco

உங்களது உத்தரவாதம்.

டி லக்ஸ் டெனார் சிகரெட்ஸ்

ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

EASTERN LICENCEES — P. B. NO 9029 — CALCUTTA.

T-10

ACI

லினக்ஸ்

போட்டோ மவுண்டுகள்

(ARTISTICALLY EMBOSSED)

விவரங்களுக்கு

Lenox

Photo Mount Mfg. Co.,

Lenox House.

MADURA. S. India.

"ஓர் அரிய சந்தர்ப்பம்"

இனாம்! ● இனாம்!!

இந்த பிப்ரவரி மாதம் 20ம் தேதிக்குள் சேருபவர்களுக்கு மாத்திரம் மிகவும் குறைந்த கட்டணத்திற்கு ஹோமியோபதி வைத்தியத்தைத் தமிழில் தபால் மூலமாய்க் கற்றுக் கொடுத்து, இனாமாகப் பட்டம் வழங்கப்படும்.

விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் உடனே எழுதுக.

●

பிரின்ஸிபால்

தமிழ் ஹோமியோபதிக் காலேஜ்

ஈரோடு. (தென்னிந்தியா)



இந்த கணவான்

● ● ● ஒருவர் தான் அவரது குடும்பத்தில் சம்பாதிக்கக் கூடியவர். ஆதலால் அவருக்கு நாம் நீண்ட ஆயுளையும் அதிர்ஷ்டமும் பொங்க வேண்டுகின்றோம்.

ஆனால் இந்த அநித்யமான நாட்களில் அவருக்கு ஏதேனும் துரதிர்ஷ்டவசத்தால் ஆபத்து மரணம் இவைகள் ஏற்பட்டு விட்டால்...............

அவருக்குப் பிறகு அவரது குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பை யார் ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

தனது ஆயுளை நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் அவர் இன்ஷ்யூர் செய்திருப்பாரானால் அந்தப் பொறுப்பை "நேஷனல் இன்ஷ்யூரன்ஸ்" சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்ளும்.

விவரங்களுக்கு:

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:—362, சைனா பஜார் ரோடு, எஸ்பிளனேட், மதராஸ்.


கண்ணகியில்
ஸ்ரீ. பி. யு. சின்னப்பா பாடிய பாட்டுகள்
N. 18194 { சந்த்ரோதயம்
அன்பில விருந்த
N. 18195 { மானமெல்லாம்
பத்தினியே
N. 18196 { தேவ மகள்
நண்டு சிப்பி
HIS MASTERS VOICE
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
SAMUEL
"எச். எம். வி." எஃகு ஊசிகள்
சில்லறையில் விற்க நிர்ணயித்த விலை 200 ஊசிகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—8—0 மட்டுமே.
எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

Regd. No M. 4392

ரேடியோ என்ற பெயரிட்டவரே G. Marconi முதன்மையானது மகத்தானது

மாடல் 2126/ஏ, 1943 வருட புதிய மாடல் ஆறு வால்வுகள் ஏ. ஸி. மெயின்ஸ் மாடல்

பாண்டு ஸ்பெரெட் ட்யூனிங், எலிப்டிகல் ஸ்பீக்கருடன் கூடிய இப் புதிய மாடல் மார்க்கோனிபோன் ரேடியோவைக் கேட்டு அனுபவித்து நீங்கள் ஆனந்தப்பட்டிருக்கிறீர்களா?

•

13, 16, 19, 25, 31 மீடர் பாண்டுகளுக்கு பாண்டு ஸ்பெரெட்டிங்குகளுடன் கூடிய எட்டுவேவ் பாண்டுகள் உடையது.

பாஜிக் ஐ இல்லாமல் விலை ரூ. 495/-

மார்க்கோனிபோன்

வால்வுகள், பிக்கப்புகள், (டோன் ஆமுடன்) லௌட் ஸ்பீக்கர்கள், வால்யூம் கண்ட்ரோல்கள் இவைகள் சகலமும் எங்களிடம் இப்போது கைவசமுள்ளன

•

சென்னை ராஜதானிக்கு (சமஸ்தானங்கள் உள்பட) ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

ஸ்ரீ ராம விலாஸ் ஸர்வீஸ் லிமிடெட்.,

202-203, மௌண்ட் ரோடு :: மதராஸ்

Edited, Printed and Published by K. Krishnamurthy, at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.